Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 மாசி 01 வெள்ளிக்கிழமை (13-02-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:79

### மின் கம்பத்துடன் மோதி தலைகீழாகப் புரண்டு உருண்டது;

# கைதடியில் மினிபஸ் கோர விபத்து! ஒருவர் பலி; 26 பயணிகள் படுகாயம்!!

யாழ்ப்பாணம்,பெப்.13

ஏ-9 பாதையில் அதிவேகமாகச் சென்று கொண்டிருந்த றோசா ரக மினி பஸ் ஒன்று மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த ஒருவர் உயிரிழந்தார்; 26 பேர் படுகாயமடைந்தனர். அவர்களின் நால் வின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

இந்தக் கோரவிபத்து, நேற்று வியா முக்கிழமை காலை 7.25 மணியளவில் கைதடிப் பாலத்துக்கும் நுணாவில் வைரவர் கோயிலடிச் சந்திக்கும் இடைப் பட்ட பகுதியில் (ரயர் கம்பனிக்கு முன் பாக) இடம்பெற்றது.

சுன்னாகத்தில் இருந்து புறப்பட்டு, சாவகச்சேரி நோக்கிச் சென்றுகொண்டி ருந்த மினிபஸ்ஸே இவ்வாறு விபத்துக குள்ளானது.

இந்த விபத்தில் தலைசிதறுண்டு உயிரிழந்தவர் எஸ்மார்க்கண்டு (வயது -55) என அடையாளம் காணப்பட்டிருக் கிறார்.

உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் வசிக்கும் இவர் பளை அரசினர் ஆஸ்பத்திரியில் சிற்றூழிய ராகக் கடமை புரிந்துவந்தார். இவரது சடலம் இன்று மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக் கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்துக்குள்ளான வாகனத்தின் சாரதி தப்பியோடி தலைமறைவாகி விட்டார். அவரைக் கைதுசெய்யும்

(16ஆம் பக்கம் பார்க்க)


### படுகாயமடைந்த பயணிகள் விவரம்

யாழ்ப்பாணம்,பெப்.13

கைதடிப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற கோர விபத்தில் படுகா யங்களுக்குள்ளான மினிபஸ் பயணிக ளின் பெயர் விவரங்கள் வருமாறு:-

மினிபஸ் உரிமையாளரும் அதன நடத்துநருமான கோப்பாயைச் சேர்ந்த கோபாலசிங்கம் பவானந்தன் (வயது-30), நாகமணி வேலாயுதம் (வயது-62), உரும்பிராய் மேற்கு, இரத்தினம் அரியம்மா அல்லது இரத்தினம் அன் னம்மா (வயது 64), கோப்பாய் மத்தி, சுப்பையா சரஸ்வதி (வயது-53), நீர் வேலி மேற்கு, யோகநாதன் துஷ்யந்

(16ஆம் பக்கம் பார்க்க)





கைதடியில் விபத்துக்குள்ளான மினிபஸ் தடம்புரண்டு தலைகீழாகக் கிடப்பதை முதல் படத்திலும், பஸ் மோதியதால் துண்டு இரண்டாக விழ்ந்து கிடக்கும் மின் கம்பத்தை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: ரமணன்)

### அதிகாரமட்ட இழுபறிகள் | தேர்தல் கள நிலைமை

### புலிகள் பகுதிகளில் வாக்களிப்பு

# பாலா - தமிழ்ச்செல்வன் இன்று மந்திராலோசனை

### ஞாயிறு தமிழ்ச்செல்வன் வன்னி திரும்புகின்றார்

கொழும்பு.பெப்ரவரி13

**தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள திடீர் அரசியல் மாற்றங்களை அடுத்து புலிகள் கையாள வேண்டிய அரசியல் உத்தி குறித்து ஆலோசிப்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும் இன்று சுவிட்ஸர்லாந்தில் சந்தித்துப் பேசு கின்றனர்.**

**இலங்கைத் தேர்தல் களம், தென்னிலங்கை அரசியல் இழுபறிகளினால் ஈழத்தமிழர்களின் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் ஆகியவை தொடர் பான முக்கிய விடயங்கள் குறித்து மதியுரைஞருடன் மந்திராலோசனை நடத்தி விட்டு நாளை மறுதினம் தமிழ்ச்செல்வன் வன்னிக்கு விரைகிறார்.**

ஐரோப்பிய விஜயத்தை மேற்கொண் டிருக்கும் சு.ப.தமிழ்ச்செல்வன் இலங் கையில் ஏற்பட்டுள்ள திடீர் அரசியல் மாற்றங்களை அடுத்து தமது விஜ யத்தை சுருக்கிக் கொண்டு அவசர அவசரமாக வன்னிக்குத் திரும்புகின்றார்.

அதற்கு முன்னர் இரண்டு தினங்கள் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கத் தோடு தற்போதைய நிலைமை குறித்து அவர் மந்திராலோசனை நடத்துவார்.

இதற்காக தற்போது இத்தாலியில தங்கி நின்ற தமிழ்ச்செல்வன நேற்றிரவு சுவிடஸர்லாந்துக்குப் புறப்பட்டார்.

அதேசமயம் லண்டனில் தங்கி யிருக்கும் மதியுரைஞர் பாலசிங்கம், தமது துணைவியார் அடேல் பாலசிங் கம் சகிதம் இன்று காலை விமானத் தில் சுவிடஸர்லாந்துக்குச் செல்கின்றார்.

அங்கு சுவிஸ் தலைநகர் சூரிச்சில் அரசியல் பொறுப்பாளரும் மதியுரைஞ ரும் இரண்டு நாள்கள் ஒன்றாகத் தங்கி யிருந்து ஆலோசனை நடத்துவர்.

இதேசமயம் -

(16ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு-கிழக்கில் தனித்துப் போட்டி; அதற்கு வெளியே

# ஆறு அம்சக் கோரிக்கையை ஏற்கும் தேசிய கட்சியுடனேயே தேர்தல் கூட்டு

### மு.கா.அரசியல் உயர்பீடம் கூடித் தீர்மானம்

கொழும்பு,பெப்.13

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு வெளியே எந்தவொரு தேசியக் கட்சி யுடனும் தேர்தல் கூட்டமைப்பை ஏற் படுத்துவதற்காக ஆறு அம்சக் கோரிக் கையை முன்வைப்பது எனவும், அவற்றை ஏற்றுக்கொள்ளும் கட்சியுட னேயே கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவ தெனவும் முஸ்லிம் காங்கிரஸின் அர சியல் உயர்பீடம் தீர்மானித்திருக்கிறது.

நேற்றுமுன்தினம் (புதன்) இரவு முஸ்லிம் காங்கிரஸ் தலைமையக மான தாருஸ்ஸலாமில் மு.கா.தலைவா அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமை யில் அரசியல் உயர்பீடம் கூடிப் பொதுத தேர்தல் தொடர்பாக ஆராய்ந்தது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கட்சியின் மரச்சின்னத்தில் தனித்துப் போட்டியிடுவது என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. ஏனைய இடங் களில் தனித்து அல்லது வேறு ஏதா வது தேசியக் கட்சியுடன் கூட்டுச்

(16ஆம் பக்கம் பார்க்க)

# சுவிஸ் எம்.பிக்கள் வன்னிக்கு வருகை

கிளிநொச்சி,பெப்.13

சுவிஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கள் சுமார் 18 பேர் அடங்கிய குழு ஒன்று நேற்று வன்னிக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் ஆராய்ந்தது. இலங்கைக்கான சுவிஸ தூதுவரும் இக் குழுவினருடன் வந் திருந்தார்.

கிளிநொச்சியில் அரச அதிபர் தி.இரா சநாயகத்தைச் சந்தித்து அங்குள்ள நிலைமைகளைக் கேட்டறிந்தனர். சமாதானச் சூழ்நிலையில் மக்களின் வாழ்க்கை பற்றியும் விரிவாகக் கலந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

# 27 இந்திய மீனவர்கள் இன்பருட்டியில் சிக்கினர்

வடமராட்சி,பெப்.13

பருத்தித்துறைக் கடலில் அத்து மீறி நுழைந்து மீன்பிடித்துக் கொண் டிருந்த 27 இந்திய மீனவர்கள் இன் பருட்டிப் பகுதி மீனவர்களால் பிடிக்கப் பட்டனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு 11 பேரும நேற்று அதிகாலை 3 மணியள வில் 10 பேரும் காலை 7 மணியளவில 6 பேருமாக மொத்தம் 27 பேர் இவ் வாறு பிடிக்கப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் இன்பருட்டி மீனவர்களால் பருத்தித்துறைப் பொலிஸ

(16ஆம் பக்கம் பார்க்க)

ரன் சஹன ஈட்டுக் கடனாக ரூபா 5,000/-ஐப் பெறும்போது
40மில்லியன் ரூபா பெறுமதியான பரிசுகளை வெல்லும் வாய்ப்பு

அவசரமாக பணம் தேவையா? அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்கு விரையுங்கள். ரூபா 5,000/- அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு ரன் சஹன ஈட்டுக் கடனுக்கும் நாம் அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) சான்றிதழ்களை அன்பளிப்பாக வழங்குகின்றோம்.

வட்டி:
*14% ஸ்திரி கணக்கு வைத்திருப்பவர்களுக்கு
*15% ஏனையோருக்கு

அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) பரிசு விபரங்கள்.

— 1வது பரிசு 5மில்லியன் பெறுமதியான வீடு அல்லது பணம்.
— 2வது பரிசு 1.6மில்லியன் பெறுமதியான வாகனம் அல்லது பணம்.
— 3வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 10,000 பெறுமதியான 10 பரிசுகள்.
— 4வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 5,000 பெறுமதியான 20 பரிசுகள்.
— 5வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 1,000 பெறுமதியான 2000 பரிசுகள்.
— 6வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 500 பெறுமதியான 2400 பரிசுகள்.

இச்சலுகை 2004 ஜனவரி 15 முதல் 2004 ஏப்ரல் 15 வரை மட்டுமே.



NSB

NSB தேசிய சேமிப்பு வங்கி

PHOENIX O&M

# யாழ். மருத்துவ நிபுணர்களுக்கு விபத்துப் பராமரிப்புப் பயிற்சிகள்!





யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. இதனைச் சமாளிக்கும் விதததில் யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் மருத்துவ நிபுணர்களுக்கு ஆரம்ப நிலை விபத்துப் பராமிப்பு (Primary Trauma course) பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. வெளிநாட்டில் இருந்து வருகை தந்த மருத்துவ நிபுணர்களால் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண மருத்துவச் சங்கம் (Jaffna Medical Association) இந்தக் பயிற்சிக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. கடந்த மாதம் 20, 21, 22 ஆம் திகதிகளில் யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

விபத்துக்குள்ளானவர்களுக்கான ஆரம்ப நிலைப் பராமரிப்புக்கென பல செயற்றிட்ட வடிவமைப்புக்கள் உலகெங்கும் நடைமுறையில் உள்ளன. அவற்றுள் மூன்றாம் உலக நாடுகளுகேற்ற சிறப்பான வழிமுறையாக ஆரம்ப நிலை விபத்துப் பராமரிப்புச் செயற்றிட்டம் உள்ளது. இந்தப் பயிற்சியே யாழ். வைத்தியசாலை நிபுணர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கொழும்பில் உள்ள நிபுணர்களுக்கு வழங்கப்பட்டதன் பின்னர் இங்குதான் இந்தப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

முன்னர் போரினால் காயம் ஏற்படும் போராளிகள், பொதுமக்களையும இன்று பெருமளவு வாகன விபத்துகளினால் காயமடையும் பொதுமக்களையும் யாழ்ப்பாண வைத்தியசாலைகள் பராமரித்து வருகின்றன. இதனால் இந்தப் பயிற்சிநெறி யாழ். போதனா வைத்தியசாலையின் விபத்துப் பராமரிப்பின் தரத்தை மேம்படுத்துவதற்கு உதவும் என்று பயிற்சி பெற்ற நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

லண்டனில் இருந்து வந்திருந்த டாக்டர் ஜேம்ஸ் டீ கேர்சி, டாக்டர் சரா பாக்வெல், திருமதி டயேன்வில்கின்சன் ஆகியோரும் இந்தியாவின் வேலூரில் இருந்து பேராசிரியர் றெபேக்கா ஜேக்கப் மற்றும் கொழும்பிலிருந்து டாக்டர் ஷிராணி ஹப்புஆராச்சி ஆகியோரும் இந்தப் பயிற்சிகளை வழங்கினர்.

முதற்கட்டமாக 20 வைத்திய நிபுணர்கள் மற்றும் வைத்திய அதிகாரிகள் பயிற்சியில் கலந்து கொண்டனர். போதனா வைத்தியசாலை மற்றும் குடாநாட்டிலுள்ள ஏனைய வைத்தியசாலைகளில் இருந்து இவர்கள் வந்திருந்தனர். குடாநாட்டில் உள்ள ஏனைய மருத்துவர்களுக்கு இந்தப் பயிற்சியை வழங்குவதற்குத் தேவையான விடயங்களும் முதலாவது பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு விளக்கப்பட்டன.

இதனைவிட மேலும் ஒரு தொகுதி வைத்தியர்களுக்கு சுவாச இருதய உயிர்காப்புப் பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

இந்தப் பயிற்சி வகுப்புக்களை வழங்குவதற்கான நிதி உதவிகளை ஈழத தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் உள்ள தமிழர் அமைப்புக்கள் சிலவும் சில மருந்தாக்க நிலையங்களும் வழங்கியிருந்தன என்று யாழ். மருத்துவ சங்கம் தெரிவித்தது.

இந்தப் பயிற்சி நெறியில் பயிற்சி பெற்ற மருத்துவ நிபுணர்கள் விரைவில் வடக்கு - கிழக்கில் உள்ள ஏனைய வைத்தியசாலைகளில் பணியாற்றும் ஏனைய வைத்திய அதிகாரிகளுக்குத் தாம் பயிற்சிகளை வழங்குவார்கள் எனவும் சங்கம் தெரிவித்துள்ளது. (ம)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.13

நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையின வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் செ.செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் கலந்து கொள்ளவுள்ளார். (எ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.13

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எ.விமலேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டிகளில் மக்கள் வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் ரி.ரகு, திருமதி பி.ரகு தம்பதியர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர். (எ)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.13

கம்பர்மலை அ.த.க. பாடசாலையில் நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பிற்போடப்பட்டுள்ளதாக அதிபர் எம்.ஆனந்தேஸ்வரன் அறிவித்துள்ளார். (எ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் அருட்செல்வி ஜி.செல்வராணி தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ் கல்வி வலய பிரதிக் கல்விப பணிப்பாளர் செல்வி சறோஜினி வேதநாயகம் பிரதம விருந்தினராகவும் - யாழ். புனித யுவானியர் ஆலயப் பங்குத்தந்தை வணபிதா ரி.யேசுதாசன சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (எ-51)

## தேர்தல் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆணையாளர்-பொலிஸ்மா அதிபர் ஆராய்வு

கொழும்பு,பெப்.13

பொதுத் தேர்தல் கால பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணையாளரும், பொலீஸ்மா அதிபரும் கூடி ஆராய்ந்துள்ளனர். ராஜகிரியவிலுள்ள தேர்தல் செயலகத்தில் நேற்று முன்தினம் இக்கூட்டம் நடைபெற்றது.

தேர்தல் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக பல முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன என்று தேர்தல் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

சிரேஷ்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஜயதிஸ்ஸ ஹேரத் உட்பட பல பொலீஸ் அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதற்கிடையே, தேர்தல் தொடர்பான பொலீஸ் செயலகம் ஒன்று பொலீஸ் தலைமையகத்தில் நிறுவப்பட்டிருக்கிறது. பிரதிப் பொலீஸ்மா அதிபர் காமினி நவரத்ன இச்செயலகத்துக்குப் பொறுப்பாக இருப்பார்.

தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆளணியினர், வாகனங்கள் குறித்து சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர்களிடமிருந்து இச்செயலகம் விவரங்களைச் சேகரித்துவருகிறது.

**மீண்டும் ஒரு மாற்றம்**

## வண்ணாத்திப் பூச்சிக்குப் பதிலாக வெற்றிலையே தேர்தல் சின்னம்!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் சின்னத்தில் மீண்டும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. வண்ணாத்திப் பூச்சியை தனது தேர்தல் சின்னமாக ஏற்றுக் கொண்டிருந்த அம்முன்னணி, தற்பொழுது வெற்றிலையே தேர்தல் சின்னம் என அறிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் சின்னம் 'வெற்றிலை' என்பதை தேர்தல் ஆணையாளர் நேற்றுமுன்தினம் ஏற்றுக்கொண்டுள்ளார்.

சுதந்திர முன்னணி உருவாக்கப்பட்டபோது 'தாமரை' அதன் தேர்தல் சின்னமாக இருந்தது. ஆயினும், தேர்தல் சின்னங்கள் பட்டியலில் 'தாமரை' இல்லாததால் தேர்தல் ஆணையாளர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அதையடுத்து, வண்ணாத்திப் பூச்சியை தனது தேர்தல் சின்னமாக முன்னணி அறிவிக்க, தேர்தல் ஆணையாளர் அதனை ஏற்றுக்கொண்டார்.

இப்பொழுது அதுவும் மாற்றப்பட்டு 'வெற்றிலை' தேர்தல் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அமைச்சர்கள், பிரதியமைச்சர்களின் பதவிநீக்கம் ஜனநாயக முரணானது

**நிர்வாக இயந்திரம் செயலிழந்தது என்கிறார் அமைச்சர் பீரிஸ்**

கொழும்பு,பெப்.13

ஜனாதிபதியின் வரம்பு மீறிய சர்வாதிகார நடவடிக்கையினால் நாட்டின் நிர்வாக இயந்திரம் முற்றாகச் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது. புனர்வாழ்வு, மீள்குடியமர்வு, அகதிகள் அமைச்சு இல்லாதொழிக்கப்பட்டுள்ளதால் இலங்கைக்கு உறுதியளித்த பணத்தை யாரை நம்பி ஒப்படைப்பது என உதவிவழங்கும் நாடுகள் கேள்வி எழுப்பி உள்ளன என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அரசியல் விவகார அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் கூறினார்.

நேற்று அரசாங்கப் பேச்சாளரின் அலுவலகத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவற்றைக்கூறினார்.

சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டதாலோ அல்லது அரசியல் நெருக்கடி நிலைமையினாலோ நாடாளுமன்றம் கலைக்கப்படவில்லை. எவ்வழியிலாவது ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்ற தனிப்பட்ட அரசியல் நோக்கங்களுக்காகவே ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார் எனவும் குற்றஞ்சாட்டிய அமைச்சர் பீரிஸ் மேலும் கூறியதாவது.

தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காகவே பாதுகாப்பு அமைச்சையும், ஊடக அமைச்சையும் தட்டிப் பறித்த ஜனாதிபதி, இப்போது ஜனநாயகத்திற்கு அப்பாற்பட்ட முறையில் பிரதி அமைச்சர்களையும், அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்களையும் பதவி நீக்கம் செய்துள்ளார். இதனால் அரச நிர்வாகம் முற்றாக சீர்குலைந்துள்ளது.

மொனராகலை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் ஏற்பட்டிருக்கும் வரட்சியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமாக 5 கோடியே 10 லட்சம அமெரிக்க டொலர்களும், பெருந்தோட்டத்துறை அபிவிருத்திக்கு 13 கோடியே 38 லட்சம் அமெரிக்க டொலர்களையும் உலகவங்கி வழங்க விருந்தது. மார்ச்மாதம் கிடைக்கவிருந்த 18 கோடியே 40 லட்சம் அமெரிக்க டொலர் ஜனாதிபதியின் நடவடிக்கையினால் கை நழுவிப்போய்விட்டன.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பின் போடப்பட்டுள்ளதால் பரீட்சைக்குத் தயாராக இருந்த 1,85,831 மாணவர்களின் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 47ஆவது ஷரத்தின் ஒன்றாம் உப பிரிவுக்கமைய, நாடாளுமன்றம் கலைக்கப்படும் போது பதவியிலிருக்கும் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் அமைச்சரவை அந்தஸ்தில்லாத அமைச்சர்கள் தேர்தல் முடியும் வரை அப்பதவிகளில் இருக்கலாம் எனத் தெளிவாகக்கூறப்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்திலும் 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்திலும் நாடாளுமன்றத்தை இரண்டு முறை கலைத்து ஜனாதிபதி இவ்விதிமுறையை அப்படியே கடைப்பிடித்தார்.

ஆனால், இம்முறை நாடாளுமன்றத்தைக் கலைத்து அதனைக் கடைப்பிடிக்கவில்லை. அரசமைப்புக்கு முரணாக தமது சகாக்கள் இருவரை அமைச்சர்களாக்கியுள்ளார்.

உள்நாட்டில் மட்டுமல்லாமல் சர்வதேச அரங்கிலும் ஜனாதிபதியின் சர்வாதிகார செயல்கள் கடுமையாக விமர்சிக்கப்படுகின்றன. இதனால் உலக அரங்கில் இலங்கையின் டால் கறுப்புப்புள்ளி விழுந்து விட்டது. உதவிகளும் தடைப்பட்டுவிட்டன இதனால் நாட்டு மக்களே பாதிக்கப்பட்டுள்ளனர். எதிர்வரும் பொதுத்தேர்தலில் மக்களே ஜனாதிபதிக்கு நல்ல பாடம் புகட்டுவார்கள்.

- இவ்வாறு அவர் கூறினார். (ம)

## கம்யூனிஸ்ட் கட்சியும் முன்னணியில் இணைய முடிவு

கொழும்பு,பெப்.13

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிடத் தீர்மானித்துள்ளது என்று கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ராஜா கொல்லுரே நேற்றுத் தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட் கட்சி இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இரு முக்கிய அணுகுமுறைகள் அடங்கிய புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் சுதந்திர முன்னணியுடன் கைச்சாத்திடும் என்றும் அவர் சொன்னார்.

இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலமே நிரந்தரத் தீர்வுகாண வேண்டும். பதவிக்கு வரும் அரசும் எதிர்க்கட்சியும் இணைந்து இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற இரு விடயங்களே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இடம்பெறுமெனவும் ராஜா கொல்லுரே தெரிவித்தார். (ம)

**அரசுக்கு எதிராக விஷமப் பிரசாரம்:**

## அரச ஊடகங்களைக் கட்டுப்படுத்த தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை

கொழும்பு,பெப்.13

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது முதல் அரச ஊடகங்களில் அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பக்கச்சார்பான, விஷமத்தனமான பிரசாரங்கள் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஐ.தே.க. பிரதித்தலைவரான அமைச்சர் கரு ஜயசூரிய தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவிடம் கடிதம் மூலம் கோரியிருக்கின்றார்.

2003ஆம் ஆண்டு நவம்பரில் மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி கையேற்றதோடு ஆரம்பமான இப்பிரசாரம், நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட கையோடு தீவிரமடைந்து இருப்பதாக அமைச்சர் கரு ஜயசூரிய தனது கடிதத்தில சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதியிலிருந்து தேர்தல் முடிவுறும்வரை அரச ஊடகங்கள் செயற்படவேண்டிய விதம் தொடர்பாக அந்த ஊடக நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கும் சட்டத்தின் படி நடந்து கொள்ளுமாறு அவர் தேர்தல் ஆணையாளரைக் கடிதத்தில் கோரியிருக்கின்றார். (ம)

# ஈராக் வீதியோரம் குண்டு வெடித்தது! அமெ. படையினர் இருவர் உயிரிழப்பு!!

## ஜப்பானிய இராணுவம் மீதும் தாக்குதல்

பக்தாத்,பெப்.13

ஈராக்கில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் அமெரிக்கப் படையினரில் இருவர் கொல்லப்பட்டனர். மேலும் ஒருவர் படுகாயமடைந்தார்.

பக்தாத்தின் புறநகர்ப் பகுதியில் இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றது.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்க இராணுவத்தின் முதலாவது கவச வாகனப் படையினர் வழக்கமான ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்றும் -

அப்போது வீதியோரம் வைக்கப்பட்டிருந்த சக்திவாய்ந்த வெடிகுண்டு, இராணுவ வாகனங்கள் அந்த இடத்தைக் கடந்தவேளையில் வெடித்தது என்றும் -

அமெரிக்க இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.



குண்டுவெடித்த இடத்தில் அமெ.படையினர்

ஈராக்கிய இராணுவத்துக்கு ஆள் சேர்க்கும் மையங்கள் இரண்டில் நடத்தப்பட்ட வெவ்வேறு கார்க்குண்டுத் தாக்குதல்களில் சுமார் 100 ஈராக்கியர்கள் கொல்லப்பட்ட சம்பவங்களைத் தொடர்ந்து இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை மேற்கொள்ளப்படுவதாக அமெரிக்க இராணுவப் பேச்சாளர் கூறினார்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் ஈராக் யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து இதுவரை 370இற்கும் அதிகமான அமெரிக்கப் படையினர் உயிரிழந்துள்ளனர். இதற்கிடையே, தெற்கு ஈராக்கில் ஜப்பானியப் படையினரை இலக்கு வைத்து நேற்று அதிகாலை மோட்டார் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் எவரும் காயமடைந்ததாகத் தெரியவில்லை.

சமாவா என்ற இடத்தில் முகாம் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஜப்பானியப் படையினரை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் போர்ப் பிரதேசத்தில் ஜப்பானிய இராணுவம் நிலைகொள்வது இதுவே முதற்றடவையாகும். தற்போது ஈராக்கில் ஜப்பானிய இராணுவத்தினர் 100 பேர் முகாம் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஈராக்கில் பணியில் ஈடுபடவுள்ள ஜப்பானிய இராணுவத்தினர் இந்த முகாமில் நிலைகொள்ளவுள்ளனர். தமது நாட்டு இராணுவம், பிறநாடொன்றில் அதுவும் போர்ப் பிரதேசத்தில் நிலைகொள்வது குறித்து செய்திகளைச் சேகரிக்க நூறுக்கும் மேற்பட்ட ஜப்பானியச் செய்தியாளர்கள் ஈராக்கில் திரண்டுள்ளனர். ஜப்பானியப் படையினர் முகாம் அமைக்கும் இடத்துக்குச் சமீபமாக உள்ள ஒரு ஹோட்டலிலேயே ஜப்பானியச் செய்தியாளர்களும் தங்கியுள்ளனர்.

இந்தக் ஹோட்டலுக்கும் முகாமுக்கும் அருகே உள்ள இடத்திலேயே நேற்று அதிகாலை மோட்டார் குண்டுகள் வீழ்ந்து வெடித்தன.

ஜப்பானியப் படையினரை இலக்கு வைத்து நடத்தப்பட்டதாக நம்பப்படும் இந்தத் தாக்குதல் ஈராக்குக்கு ஜப்பானியப் படையினர் அனுப்பப்படுவதற்கு எதிர்ப்பு அலையை ஜப்பானில் உருவாக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

# காதலர் தினமான நாளை

# தண்ணீருக்கு அடியில் 45 ஜோடிகள் திருமணம்!

நாளை காதலர் தினம். அதையொட்டி அன்றைய தினம் 45 ஜோடிகள் தண்ணீருக்கடியில் திருமணம் செய்துகொள்கிறார்கள்.

இந்த வகையான திருமணம் தாய்லாந்து நாட்டின் தெற்கு மாகாணமான 'ட்ராங்'கில் நடக்கிறது. இத்தனை பேர் தண்ணீருக்கு அடியில் திருமணம் செய்து கொண்டு சாதனை நிகழ்த்த இருக்கிறார்கள்.

காதலர் தினத்தன்று ஒவ்வோர் ஆண்டும் தண்ணீருக்கு அடியில் திருமணம் நடக்கிறது. கடந்த ஆண்டு இந்தத் திருமணத்தைக் காண 60ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தனர்.

இந்த ஆண்டு 80 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இந்தத் திருமண விழாவைப் பார்வையிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆங்சாங் சூகியை விடுவிக்க மியான்மர் அரசு இணக்கம்

யங்கூன்,பெப்.13



மியான்மர் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவி ஆங்சாங் சூகியை வீட்டுக் காவலில் இருந்து விடுவிக்க அந்த நாட்டு இராணுவ ஆட்சியாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

இராணுவ ஆட்சியின் கீழ் உள்ள மியான்மரில் மீண்டும் ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தப் போராடி வருகின்றார் ஆங்சாங் சூகி. இதனால் சினம் கொண்ட இராணுவ ஆட்சியாளர்கள் அவருக்கும் அவரது சகாக்களுக்கும் பல்வேறு இடையூறுகளை ஏறபடுத்தி வருகின்றனர். ஆனாலும் மியான்மர் ஜனநாயக இயக்கத்தின் தலைவியான ஆங்சாங் சூகி, தனது இலக்கை அடையப் போராடி வருகின்றார்.

கடந்த சில மாதங்களாக ஆங்சாங் சூகியை இராணுவ ஆட்சியாளர்கள் வீட்டுக்காவலில் வைத்திருந்தனர். அவரை விடுதலை செய்யும்படி பல்வேறு நாடுகளும் மியான்மர் நாட்டு இராணுவ அரசை வற்புறுத்தி வந்தன.

இந்த நிலையில் ஆங்சாங் சூகியை விடுதலை செய்ய இராணுவ ஆட்சியாளர்கள் தீர்மானித்துள்ளன[illegible]. இந்தத் தகவலைத் தாய்லாந்து நாட்டு வெளிவிவகார அமைச்சரிடம் மியான்மர் அரசின் வெளியுறவுத்துறைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஆங்சாங் சூகி சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# 'குளோனிங்' மூலம் முளையம்

சியோல்,பெப்.13



'குளோனிங்' முறை மூலம் 30 முளையங்களைத் தாம் உருவாக்கியுள்ளனர் என்று தென்கொரியாவின் சியோல் தேசிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

பெண்களிடமிருந்து பெறப்பட்ட கலங்களையும் அவர்களது கருக்களையும் இணைத்து இந்த முளையங்கள் உருவாக்கப்பட்டன என்றும் -

இந்த ஆய்வு வெற்றிபெற்றிருப்பதால், நோயாளி ஒருவருக்குத் தேவையான மாற்று உறுப்பை, அவரது கலத்திலிருந்து 'குளோனிங்' மூலம் உருவாக்கும் காலம் அதிக தூரத்தில் இல்லை என்றும் - அவர்கள் கூறினர். (ஒ)

# இஸ்ரேல் கொடூரத் தாக்குதல்! காஸாவில் 15 பலஸ்தீனர் பலி!!

ஜெருசலேம்,பெப்.13

பலஸ்தீனத்தின் காஸாப் பகுதியில் இஸ்ரேலிய இராணுவம் பெரும் எடுப்பில் நேற்று மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையில் 15 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்; ஐம்பதுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

அருகில் உள்ள யூதக் குடியேற்றங்கள் மீது அடிக்கடி இடம்பெற்று வரும் ரொக்கட் தாக்குதல்களைத் தடுப்பதற்காகவும், ஆயுதங்களைக் கடத்திவரும் குகை வழிப் பாதைகளைக் கண்டுபிடிப்பதற்காகவும் இந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

ஷாஜாப் பகுதியில் நேற்று அதிகாலையில் ஆரம்பித்து மாலைவரை தொடர்ந்த இராணுவ நடவடிக்கையில் பன்னிரு பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர்; நாற்பது பேர் வரை படுகாயமடைந்தனர்.

காஸாவில் யஸீர் அரபாத்தின் பாத் அணியின் முக்கிய தலைவர்களுள் ஒருவரான அஹமட் ஹில்ஸ் என்பவரின் 18 வயது மகனான மொஹமட் ஹில்ஸ் என்ற இளைஞனும் இதில் உயிரிழந்தார்.

அங்கு பொறி வெடிகள் பொருத்தப்பட்ட நிலையில் பல்வேறு ஆயுதக் கிடங்குகள் குகைகளில் கண்டுபிடிக்கப்பட்டன என்று இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது.

இதேசமயம், நேற்று மேற்குக் கரையில் பல்வேறு இடங்களில் தேடுதல் நடத்திய இஸ்ரேலிய இராணுவம் 19 பலஸ்தீனர்களை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து கொண்டு சென்றது.

பலஸ்தீனர்களுக்கு எதிராக இஸ்ரேல் மிகவேகமாக மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகளும்- அவற்றுக்குப் பதிலாக பலஸ்தீனத் தரப்பில் இருந்து இஸ்ரேலுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களும் ஏனைய தாக்குதல்களும் -

மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளை முன்நகரவிடாது தடுத்து வருகின்றன என்பது தெரிந்ததே.

## பதவி விலக மறுப்பு!

போர்ட் ஒவ்ஸ்பெயின்,பெப்.13

கரீபியன் கடற்பகுதி நாடான ஹெய்டியில் அதிபர் ஜீன் பெர்ட்ரண்ட் அரிஸ்டைட் பதவி விலக மறுத்துள்ளார். அவரைப் பதவிவிலக்கும் போராட்டம் வன்முறையாக வெடித்துள்ள நிலையில் அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

தனது பதவிக்காலம் 2006 ஆம் ஆண்டு பெப்ரவரி 7ஆம் திகதி வரை உள்ளது என்றும் -

அதுவரை பதவியில் தொடர்வேன் என்றும் -

அதிபர் அரிஸ்டைட் உறுதிபடக் கூறியுள்ளார். (ஒ)

# வடகொரியாவில் கைதிகளின் மீது இரசாயன ஆயுதங்கள் பரீட்சிப்பு!

## தென்கொரியா குற்றச்சாட்டு

சியோல்,பெப்.13

சிறைக் கைதிகளை வைத்துப் பேரழிவு ஆயுதங்களை வடகொரியா சோதனை நடத்திவருகின்றது என்று தென்கொரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

பாகிஸ்தானின் சிரேஷ்ட அணு விஞ்ஞானி அப்துல் காதிர்கானிடம் இருந்து அணுஆயுதத் தொழில்நுட்பத்தைப் பெற்ற நாடுகளில் வடகொரியாவும் ஒன்று என்று சமீபத்தில் தகவல்கள் வெளியாகியிருந்தன. அணு ஆயுதத் தொழில்நுட்பத்தை வெளிநாடுகளுக்கு விற்றவர் என்ற குற்றச்சாட்டுக்கு அப்துல் காதிர்கான் உள்ளாகி விசாரணைகளை எதிர்கொள்கின்றார். தான் அணு ஆயுத இரகசியங்களை வடகொரியாவுக்கு விற்றார் என்று அவர் கூறியதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் பேரழிவை ஏற்படுத்தக்கூடிய இரசாயன ஆயுதங்களை வடகொரியா பரிசோதித்துப் பார்ப்பதாகவும் சிறைக்கைதிகளை பாதாள அறைக்குள் விட்டு, அங்கு இரசாயன ஆயுதங்களைப் பிரயோகித்து அதனால் ஏற்படும் விளைவுகளை வடகொரிய விஞ்ஞானிகள் பரிசோதிக்கின்றனர் என்றும் -

தென்கொரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

வடகொரிய இரசாயன விஞ்ஞானி ஒருவர் இதனைத் தெரிவித்ததாகவும் தென்கொரியா கூறியுள்ளது.

வடகொரியா பேரழிவு ஆயுதங்களைத் தயாரிப்பதாகவும், பேரழிவு ஆயுதங்களைத் தயாரிக்கும் நாடுகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் கூறிவருகிறது. இத்தகைய சூழ்நிலையில் அமெரிக்காவின் நட்பு நாடான தென்கொரியா இத்தகைய குற்றச்சாட்டைக் கூறியிருப்பது பலவித சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. (ஒ)

# பின்லேடனின் வாகனச் சாரதி குவாண்டனோமாச் சிறையில்

சர்வதேச தீவிரவாதி ஒஸாமா பின்லேடனின் வாகனச்சாரதி கியூபாவில் உள்ள குவாண்டனோமா அமெரிக்கப் படைத்தளச் சிறையில் உள்ளார் என்பது இப்போது தெரியவந்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி அகற்றப்பட்ட பின்னர், அங்கு அமெரிக்கப் படையினரால் கைதுசெய்யப்பட்டவர்களும், வேறு நாடுகளில் தலிபான்கள் அல்லது அல்கெய்டா அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டவர்களும் குவாண்டனோமா சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீது எந்தவித குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை; நீதிமன்றத்தில் நிறுத்தப்படவுமில்லை. இவர்கள் சட்ட உதவி பெறவும் அனுமதி மறுக்கப்பட்டது. இந்நிலையில் குவாண்டனோமா கைதிகளை விசாரணை செய்யவேண்டும் அல்லது விடுதலை செய்யவேண்டும் என்று மனித உரிமை அமைப்புக்கள் போராட்டங்களிலும், சட்ட நடவடிக்கைகளிலும் ஈடுபட்டன.

இதனால் ஏற்பட்ட அழுத்தங்களால் முதற்கட்டமாக 4 கைதிகளை ராணுவ நீதிமன்றத்தில் நிறுத்த அமெரிக்க அரசு இணங்கியுள்ளது. இவர்களில் ஏமன் நாட்டவரான சலீம் அஹ்மட் ஹம்டன் (வயது 34) என்பவரும் ஒருவர். இவர் 2 வருடங்களின் முன்னர் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் குவாண்டனோமாச் சிறையில் அடைக்கப்பட்டார்.

பின்லேடனின் 'டொயட்டா' பிக்-அப் வாகனத்தின் சாரதியாக 1997 ஆம் ஆண்டு முதல் ஹம்டன் பணியாற்றினார் என்றும்.

அவருக்கு மனைவியும், இரு பிள்ளைகளும் இருக்கின்றனர் என்பதால், மாதம் 200 டொலர்கள் சம்பளத்துக்கு அவர் பின்லேடனிடம் பணியாற்றினாரே தவிர, அவர் தீவிரவாதி இல்லை என்றும் ஹம்டனின் சட்டத்தரணி தெரிவித்தார்.

## வைகோவிடம் நலம் விசாரித்த ரஜனிகாந்த்

'பொடா' வழக்கில் கைது செய்யப்பட்ட வைகோ 577 நாள்கள் சிறைவாசத்திற்குப் பிறகு பிணையில் வெளியில் வந்துள்ளார். சென்னை அண்ணா நகரில் உள்ள அவரது வீட்டிற்குத் தொடர்புகொண்ட நடிகர் ரஜனிகாந்த் கடந்த செவ்வாய் இரவு தொலைபேசி மூலம் வைகோவிற்கு வாழ்த்துக் கூறினார்; நலம் விசாரித்தார். (ஒ)



பிலிப்பைன்ஸ் நாட்டில் எதிர்வரும் மே மாதம் 10ஆம் திகதி அதிபர் தேர்தல் இடம்பெறவுள்ளது. அதிபர் பதவிக்கு இப்போதைய பெண் அதிபர் குளோரியா அரோயா மீண்டும் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து எதிர்க்கட்சிகள் நடிகர் பெர்னாண்டோவை நிறுத்தி இருக்கின்றன.

நடிகர் - நடிகைகளின் வாக்குகள் பெர்னாண்டோவுக்குத்தான். இது அதிபர் குளோரியாவுக்கு கலக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இதனால் குளோரியா இப்போதே பிரசாரத்தைத் தொடங்கிவிட்டார். கிராமம் கிராமமாக சென்று அவர் பொதுமக்களைச் சந்தித்துத் தனக்கு ஆதரவு திரட்டி வருகிறார்.

# அநுராதபுரத்தில் இந்துத் தமிழ் மாணவருக்குக் கற்றல் உபகரணம்

அநுராதபுரம்,பெப்.13


அநுராதபுரம், நீராவியடிப் பகுதியில் உள்ள இந்துத் தமிழ் மாணவர்களுக்கு அநுராதபுரத்தைச் சேர்ந்த திருமதி சோதீஸ்வரி செல்வராஜா என்பவரால் 3ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அநுராதபுரம் விவேகானந்தா சபையினரின் வேண்டுகோளுக்கமைய இந்த உபகரணங்கள் அவரால் வழங்கப்பட்டன. அநுராதபுரம் ஸ்ரீமுத்து மாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற சிரமதானப் பணியின் பின்னர் மாணவர்களுக்கு இவை வழங்கப்பட்டதாக ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ பா.ஞானசந்திரக் குருக்கள் அறிவித்துள்ளார்.

அடுத்தமாதம் பாலர் பாடசாலை ஒன்று அநுராதபுரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் -

இதில் பணியாற்றவுள்ள ஆசிரியர்களுக்கு வடமராட்சி சந்நிதியான் ஆச்சிரமத்தைச் சேர்ந்த மோகனதாஸ் சுவாமிகள் கொடுப்பனவை வழங்க முன்வந்துள்ளதாகவும் -

அநுராதபுரம் விவேகானந்தா சபையின் உபதலைவர் சுஜேந்திரநாத் தெரிவித்துள்ளார். (எ-10)



மாதகலில் கடற்படையினரின் கட்டுப்பாட்டினுள் இருக்கும் புனித லூர்து அன்னை கெபியின் திருநாளை முன்னிட்டு அண்மையில் கடற்படையினரும், பொதுமக்களும் இணைந்து ஆலயச் சூழலில் சிரமதானத்தில் ஈடுபட்ட சமயம் எடுக்கப்பட்ட படம் இது. (படம்: மாதகல் செய்தியாளர்)

# தபால்மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிக்கக் கோரிக்கை

கொழும்பு,பெப்.13

ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்குத் தபால் மூலம் வாக்களிக்க விரும்புவோர் எதிர்வரும் 16ஆம் திகதிக்கும் 23ஆம் திகதிக்கும் இடையில் விண்ணப்பிக்க முடியும் என்று தேர்தல் ஆணையாளா தயானந்த திஸாநாயக்கா அறிவித்துள்ளார்.

2002ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புக்கள் மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் மக்களின் பார்வைக்கு நேற்றுமுதல் வைக்கப்பட்டுள்ளன.

இதன்படி தபால்மூலம் வாக்களிக்க விரும்பும் கிளிநொச்சி மாவட்டத்தைச சேர்ந்த வாக்காளர்கள் தமது விண்ணப்பங்களை யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கும் முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களைச சேர்ந்த வாக்காளர்கள் வவுனியா மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருககும் அனுப்பிவைத்தல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

# அனுமதியின்றி சாராயம் விற்ற இருவருக்கு ரூ.24 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம்,பெப்.13

அனுமதிப்பத்திரம் இன்றி மதுபானம் விற்ற இருவருக்கு யாழ்.நீதிமன்றம் 24 ஆயிரம்ரூபா அபராதமாக விதித்தது. அவர்களிடமிருந்து மதுபானங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

திருநெல்வேலிப் பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்ட கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஸ்ரீ செல்வம் தலைமையிலான குழுவினர் சைமன் கேதீஸ்வரன் என்பவரிடம் இருந்து 626 போத்தல் சாராயத்தையும், 891 போத்தல் பியரையும் -

கந்தையா ஜெயபாலன் என்பவரிடமிருந்து 26 போத்தல் சாராயத்தையும், 26 போத்தல் பியரையும் கைப்பற்றியதுடன் சம்பந்தப்பட்ட நபர்களையும் கைது செய்தனர்.

நேற்றுமுன்தினம் யாழ்.நீதிமன்றத்தில் மேலதிக நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் இவர்களை ஆஜர் செய்தனர்.

அப்போது இவ்விருவரிடமும் இருந்து கைப்பற்றப்பட்ட 652 போத்தல் சாராயத்தையம் பறிமுதல் செய்ய அவர் உத்தரவிட்டார். ஏனைய 957 போத்தல் பியரையும் உரியவர்களிடம் வழங்குமாறும் பணித்தார்.

அத்துடன் சைமன் - கேதஸ்வரன் என்பவரை 10ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 5ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் -

கந்தையா ஜெயபாலன் என்பவரை 6ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 3 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் செலுத்துமாறும் உத்தரவிட்டார். (ம-5)

**வீடு உடன் வாடகைக்குத் தரப்படும்**

*சகல வசதிகளும் அடங்கிய மேல்மாடி வீடு உடன் வாடகைக்குக் கொடுக்கப்படும். A/C வசதி செய்து தரப்படும். நிறுவனங்களுக்கு மிகவும் உகந்தது.*

*தொடர்பு :*

N.நொறிஸ்

141, ஆடியபாதம் வீதி (வைரவர் கோயிலடி),

திருநெல்வேலி. T.P.:- 077-6016257

(28405) (21-19-18-32)

**இதய அஞ்சலிகள்**

எமது வித்தியாலய முன்னாள் அதிபர்

**நாகமுத்து சங்கரப்பிள்ளை**

அவர்களின் மறைவுக்கு எமது இதய அஞ்சலிகளைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் யாவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- பாடசாலைச் சமூகம்.

யா/நெடுந்தீவு மங்கையற்கரசி வித்தியாலயம்.
நெடுந்தீவு.

(28410) (26-21-19-18)

உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு

வடக்கு - கிழக்கு மாகாண சபை

வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

"ஆஅவ" கடன் இல.:1846 - SRI(SF)

## யாழ். மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல் இல:04

1. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆஅவ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்து தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக மாவட்ட செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறி வைக்கப்பட்ட கேள்விகளை தற்போது கோருகின்றார்.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலை பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | ஜேஎவ்/நிகொட்/ஈடி/08ஏ | தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் 130'x25' அளவுடைய வகுப்பறை மாடிக்கட்டடம் அமைத்தல் | M6 | 55,000/- |
| 02 | ஜேஎவ்/நிகொட்/ஈடி/20 | காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தில் 130'x25' அளவுடைய வகுப்பறை மாடிக்கட்டடம் அமைத்தல | M6 | 55,000/- |
| 03 | ஜேஎவ்/நிகொட்/எச்எஸ்/12/01 | மண்டைதீவு மத்திய மருந்தகம், பிரசவ விடுதி என்பன புனரமைத்தல்-தொகுதி 1 | M8 | 11,000/- |
| 04 | ஜேஎவ்/நிகொட்/எச்எஸ்/12/02 | மண்டைதீவு மத்திய மருந்தகம், பிரசவ விடுதி என்பன புனரமைத்தல்-தொகுதி 2 | M8 | 15,000/- |
| 05 | ஜேஎவ்/நிகொட்/எச்எஸ்/12/03 | மண்டைதீவு மத்திய மருந்தகம், பிரசவ விடுதி என்பன புனரமைத்தல்-தொகுதி 3 | M7 | 26,000/- |
| 06 | ஜேஎவ்/நிகொட்/எச்எஸ்/12/04 | மண்டைதீவு மத்திய மருந்தகம், பிரசவ விடுதி என்பன புனரமைத்தல்-தொகுதி 4 | M7 | 23,000/- |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   i) நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   ii) இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக("இக்ராட்"டுடன் M7 இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) இருத்தல் வேண்டும்.
   iii) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படவேண்டும்.
   iv) "இக்ராட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றல்ளவைக் கொண்டிருக்கவேண்டும்.
   v) மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
   vi) ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப்புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருத்தல்வேண்டும்.
4. மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்வி கோரமுடியும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலதிக விவரங்களை *மாவட்ட பிரதிகருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, கச்சேரி, யாழ்ப்பாணத்தில* பெற்றுக்கொள்ளலாம்.
   தொலைபேசி: 021-2223625 தொலைநகல்: 021-2225163.
6. ஒப்பந்த ஆவணங்கள் 2004 பெப்ரவரி 16 இலிருந்து பெப்ரவரி 27 வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலைநாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமான ரூபா 1000/- செலுத்திப்பெற்றுக்கொள்ளலாம்.
7. இரு பொறி வைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும், கேள்வியிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன் இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.
8. அந்தந்த வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் *"தலைவர், மாவட்ட கேள்விச் சபை, NECORD, கச்சேரி, யாழ்ப்பாணம்"* இற்கு மார்ச் 5 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு முன்பாக கிடைக்கவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
9. ஒப்பந்தகாரருக்கு கேள்விகோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் பெப்ரவரி 25 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**செ.பத்மநாதன்**
தலைவர், மாவட்ட கேள்விச்சபை,
அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(C/33242)(34-21-12-18)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

உதயன்

## எதேச்சதிகாரம் என்றும் நிலைக்காது!

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத 27 அமைச்சர்களையும் 12 பிரதி அமைச்சர்களையும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட தினத்திலிருந்து பதவி நீக்கும் வகையிலான உத்தரவை விடுத்துப் பெரும் அரசியல் சர்ச்சையைக் கிளப்பியிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலும் அடுத்த பொதுத் தேர்தல் முடிவடையும் வரை அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மட்டுமல்லர், ஏனைய அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும்கூட பதவியில் தொடர்ந்து நீடிப்பர் என அரசமைப்பின் 48 (i) பிரிவு தெளிவாகத் திட்டவட்டமாக - சந்தேகத்துக்கு இடமின்றி - தெரிவிக்கின்றது.

எனினும், பிரதமரின் கலந்தாலோசனையோடு அமைச்சர்களையும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளையும் எப்போது வேண்டுமானாலும் மாற்றியமைப்பதற்கு ஜனாதிபதிக்கு அரசமைப்பின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தித் தனது தற்போதைய நடவடிக்கையை ஒப்பேற்றியிருக்கின்றார் ஜனாதிபதி.

ஆனாலும், 39 அமைச்சர்களுக்குத் திடீர் 'கல்தா' கொடுக்கும் தனது நடவடிக்கையைக் கூட - தமது வழமையான பாணியில் - எதேச்சதிகாரப் போக்கில் - பிரதமருக்குக் கூடத் தெரிவிக்காமல் - தம்பாட்டில் செய்திருக்கின்றார் ஜனாதிபதி.

ஜனாதிபதி மேற்கொண்ட இந்தக் கைங்கரியத்துக்கு எதிராகச் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கமுடியாமல் இருக்கலாம். அல்லது சட்டரீதியாக அதற்குரிய பாதுகாப்பு அதிகாரமும் தமக்கு உண்டு என்று ஜனாதிபதி கருதலாம்.

ஆனால், இது தார்மீக ரீதியில் - ஜனநாயக விழுமியங்களின் அடிப்படையில் - எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாத பெரும் அதிகார அத்துமீறல் நடவடிக்கையாகும்.

2000ஆம் ஆண்டு ஓகஸ்டிலும், 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பரிலும்கூட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுகள் ஆட்சியிலிருந்த சமயம் இரண்டு பொதுத்தேர்தல்கள் வந்தன. அவற்றிலும் 2001ஆம் ஆண்டு செப்ரெம்பரில் ஜனாதிபதி குமாரதுங்கவின் அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இழந்து, சிறுபான்மை அரசாகி, நாடாளுமன்றத்தில் நம்பிக்கையை நிருபிக்கமுடியாத நிலையில் - அந்த நாடாளுமன்றைக் கலைத்துப் புதிய பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டார் இதே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

நாடாளுமன்ற அமர்வுக்கு முகங்கொடுக்க முடியாத சிறுபான்மை அரசை வைத்துக்கொண்டு நாடாளுமன்றத்தைக் கலைத்த அந்தச் சந்தர்ப்பத்திலும் சரி, 2000 ஓகஸ்டில் நாடாளுமன்றம் கலைந்து தேர்தல் நடத்தப்பட்ட சந்தர்ப்பத்திலும் சரி, இப்போது நடந்துகொண்டமை போல ஜனாதிபதி குமாரதுங்க செயற்படவில்லை.

அந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னரும் தேர்தல் நடைபெறும் வரை அவரது அரசுகளின் திட்ட அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் எல்லோரும் தங்களது அமைச்சுப் பதவிகளையும் அவற்றின் அதிகாரங்களையும், வசதிகளையும், சொகுசுகளையும் அனுபவித்துக்கொண்டுதான் - அவற்றின் உதவியுடன்தான் - பொதுத் தேர்தலை எதிர்கொண்டனர்.

இப்போது மட்டும் புதுவித அளவுகோல் கொண்டு ஜனநாயக (?) நடவடிக்கை எடுத்திருக்கிறார் ஜனாதிபதி குமாரதுங்க.

தன்னுடைய கட்சி காபந்து அரசை வைத்திருந்த போது ஒருவிதமாகவும் மாற்றுக் கட்சி காபந்து அரசை வைத்திருக்கும்போது வேறு ஒரு விதமாகவும் நடவடிக்கைகளை எடுக்கிறார் அவர்.

வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்குப் பொறுப்பாகவிருந்த அமைச்சர்கள்கூட வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றார்கள். இந்த நடவடிக்கை மூலம் யுத்தநிறுத்த உடன்பாட்டின் கீழ் நிறைவேற்றப்பட வேண்டிய முக்கிய கடப்பாட்டை மேற்கொள்ள முடியாத நிலைக்கு தமது அரசைத் தள்ளியிருக்கிறது என்பதையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடிதம் மூலம் ஜனாதிபதிக்குச் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

இந்த அதிகாரப் பாய்ச்சல்களுக்கு எதிராக இப்போதைய நிலையில் யாரும் சவால்விட முடியாமல் இருக்கலாம்.

ஆனால், மக்கள் மன்றத்தின் முன் இத்தகைய நடவடிக்கைகளுக்கு சரியான தீர்ப்பும் உரிய தண்டனையும் கிட்டாமல் தப்பிவிடலாம் என்று யாரும் நம்புவார்களாயின் அவர்கள் ஏமாளிகள் ஆவர் என்பது நிச்சயத்திலும் நிச்சயம்!

# தேர்தலில் பெண்களுக்கும் இடம் ஒதுக்க வேண்டும்!

## கூட்டமைப்பிடம் கியூடெக் பெண்கள் அமைப்புக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.13

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பெண் வேட்பாளர்களை நியமிக்கவேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது கியூடெக் பெண்கள் அமைப்புக்களின் ஒன்றியம்.

இது தொடர்பாகக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகத்திற்கு கடிதம் ஒன்றையும் அந்த அமைப்பு அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ மக்களாகிய எமது இன்றைய தேவையைக் கருத்திற கொண்டு நீங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து ஓர் அமைப்பாக தேர்தலில் குதிப்பதற்குத் தீமானித்ததனை இட்டு நாம் மகிழ்ச்சி அடைவதுடன் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம்.

தமிழர்கள் இக்கட்டான காலகட்டத்தில் தனித்தனியாகப் பிரிந்து நிற்பது எமக்குப் பெரும் சாபக்கேடாகும். எனவே ஒரே குடையின் கீழ் ஒன்றுசேர்ந்து போட்டியிடுவது வரவேற்கத்தக்கது; அது வரலாற்றின் தேவையும் ஆகும்.

அதேவேளை, விடுதலை, ஒன்றிப்பு, சமாதானம் மற்றும் சமூக மேம்பாடு ஆகியவற்றில் சமவலுவுள்ள பெண்களை அரசியலிலும் இணைத்து பெண் விடுதலையையும், சமத்துவத்தையும் வலியுறுத்தும் வகையில் பெண்வேட்பாளர்களையும் நியமிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம். எமது கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில் யாழ். குடாநாடு முழுவதும் பரந்த அளவில் இயங்கும் சுமார் 3ஆயிரத்து 800 அங்கத்தவர்களைக் கொண்ட 47 பெண்கள் அமைப்புகள் மூலம் எமது முழு ஆதரவையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வழங்குவதற்கு ஆயத்தமாகவுள்ளோம். - என்றுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை மற்றும் யாழ்.ஆயர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ம-5)

# அதிகாலை மணல் கடத்தியோர் மீது வல்லிபுரத்தில் பொலீஸார் சூடு!

## இருவர் காயம்; ஏனையோர் தப்பியோட்டம்

கரவெட்டி,பெப்.13

வடமராட்சி வல்லிபுரக் குறிச்சியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிக்கொண்டிருந்தவர்கள் மீது அதிகாலை வேளை பொலீஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இதில் இருவர் சூட்டுக்காயங்களுக்கு உள்ளாகினர்; ஏனையோர் தப்பியோடிவிட்டனர்.

ப.கிருஷ்ணகுமார்(வயது 32), கே.சிவகுமார்(வயது 22) ஆகிய இருவரும் இச்சம்பவத்தில் காலிலும் வயிற்றிலும் சூட்டுக் காயங்களுக்கு இலக்காகினர். அவர்கள் பொலீஸாரால் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். மேலதிக சிகிச்சைக்காகப் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

அதிகாலை வேளை 'கென்டெய்னர்' வாகனத்தில் வந்து இவர்கள் மண் ஏற்றிக்கொண்டிருந்தனர் என்றும் -

பொலீஸாரின் சமிக்ஞைகளைப் பொருட்படுத்தாமல் அவர்கள் தமது பணியில் ஈடுபட்டிருந்ததால் பொலீஸார் அவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்றும் -

தெரிவிக்கப்பட்டது.

யாழ். குடாநாட்டில் மணல் தட்டுப்பாடு நிலவுவதால் பல இடங்களிலும் மணல் திருட்டு இடம்பெற்று வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்த சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் அவை தொடர்ந்த வண்ணமே உள்ளன.

மணல் திருட்டில் ஈடுபடுவோர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் குடாநாட்டில் இதுவே முதல் தடவை. (ம-70)

# யாழ். குடாநாட்டில் கூ. சங்கங்களுக்கு கடந்த காலங்களில் ரூ. 58 கோடி நஷ்டம்

யாழ்ப்பாணம்,பெப்.13

கடந்தகால போர் அனர்த்தங்களால் யாழ். குடாநாட்டில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 58 கோடியே 63 லட்சத்து 18 ஆயிரம் ரூபா பெறுமதியான சொத்து அழிவு ஏற்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 24 சங்கங்களுக்கும் ஏற்பட்ட மொத்த இழப்பு இது என புள்ளி விவரங்கள் தெரிவித்திருக்கின்றன. கட்டடங்கள், வாகனங்கள், தளபாடங்கள், இயந்திரங்கள் மற்றும் பொருள்கள் என இந்த இழப்பீடு மதிப்பிடப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களால் அவற்றின் செயற்பாடுகளை உரிய முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை என்று யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

தமது சங்கத்திற்கு மட்டும் போரால் ஆறரைக் கோடி ரூபா சொத்து அழிவு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சொன்னார்.(ம-ரி)

# தமிழர் தலைவிதியைத் தொலைப்பதே சிங்களப் பேரினவாத ஜனநாயகம்

## கருத்தரங்கில் குமாரவேல் உரை

யாழ்ப்பாணம்,பெப்.13

தமிழர்களின் தலைவிதியைத் தொலைப்பது சிங்களப் பேரினவாதத்தின் ஜனநாயகமாக இருக்கிறது.

- இவ்வாறு யாழ்ப்பாணக் கல்லூரி வெளிவாரி பட்டப்படிப்புப் பிரிவு விரிவுரையாளர் ஆ.குமாரவேல் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கிறிஸ்தவ சமய, சமூக ஆராய்ச்சி மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணக் கல்லூரி வெளிவாரி பட்டப்படிப்புகள் பிரிவு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 'தன்னாட்சி இடைக்கால நிர்வாகப் பிரேரணையும் தென்னிலங்கையில் எழுந்துள்ள சூழ்நிலையும் தமிழரின் எதிர்காலமும்' என்ற கருத்தரங்கில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்களின் ஆயுதப் போராட்டம் 1970களில் ஆரம்பிக்கப்பட்டது. இன்று தமிழர்களின் ஆயுதப் போராட்டம் வலுவான நிலையில் பலமாக உள்ளது.

இந்தநிலையில், தமிழர் தரப்புடன் சிங்கள அரசு பேச்சுகளில் இறங்கியது. அது சிங்களப் பேரினவாதத்தின் நெருக்கடியால் இப்போது தடைப்பட்டுள்ளது.

இன்று சிங்கள பேரினவாத சக்திகள் தேர்தல் என்ற பெயரில் அணிதிரண்டு உள்ளன. இது தமிழர்களின் தலைவிதியைத் தீமானிப்பதாக இருக்கப் போகிறது. சிங்களப் பேரினவாத சக்திகள் தமிழ்மக்களை ஏமாற்றும் நிலைவருமானால் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றாகத் திரண்டு நிற்கவேண்டும்.

தமிழ்மக்கள் மிகுந்த விழிப்புடன் இருக்கவேண்டிய காலம் இது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்மக்களுக்கு எந்த நன்மையையும் தரவில்லை. மாறாக தென்னிலங்கை மக்கள் அதனால் பயன் அடைந்துள்ளார்கள்.

தமிழர் தாயகப் பகுதிகளில் இயல்புநிலை தோன்றவில்லை; மீள்குடியமர்வு இடம்பெறவில்லை; உயர்பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்படவில்லை.

இதன் காரணமாக தமிழ்மக்கள் பெரும் வாழ்வியல் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் ஆரம்பத்தில் ஆசியுரையினைத் தென்னிந்திய திருச்சபை பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் நிகழ்த்தினார்.

நிகழ்வின் இறுதியில் யாழ்ப்பாணக் கிறிஸ்தவ சமூக ஆராய்ச்சி மன்றத்தின் இயக்குநர் வண.ஜி.நடராசா நிகழ்த்தினார்.

இக்கருத்தரங்கில் மாணவர்கள், ஆசிரியர்கள், மதத்தலைவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ம-ரி)

### நாளை

மாசி 2
சனிக்கிழமை
(14.02.2004)
திதி : நவமி
பின்னிரவு 3.32வரை.
நட்சத்திரம் : அனுசம்
இரவு 9.57 வரை
சுபநேரம் : 3.33-05.03
ராகுகாலம்:9.33-11.03
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நல்ல ஆலோசனைகளைக் கேட்பது நமது திறமை.

# வடமராட்சியில் காவலரண்கள் இரவோடிரவாக அகற்றப்பட்டன

வடமராட்சி,பெப்.13

மந்திகை - யாழ்ப்பாணம் வீதியில் நெல்லியடி வரைக்கும், மந்திகை - கொடிகாமம் வீதியில் முள்ளிச்சந்தி வரைக்கும் படையினரால் அமைக்கப்பட்டிருந்த காவலரண்கள் நேற்றுமுன்தினம் இரவோடிரவாகப் படையினரால் அகற்றப்பட்டன.

சுமார் 12 காவலரண்கள் இவ்வாறு இரவோடிரவாக அகற்றப்பட்டுள்ளன. காவலரண்களில் இருந்த முக்கியமான தளபாடங்கள் படையினரால் எடுத்துச்செல்லப்பட்டதுடன் ஏனையவை அந்தந்த இடங்களிலேயே தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன.

இந்தக் காவலரண்கள் அனைத்தும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் அமைக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர் மாலிசந்தியில் அமைக்கப்பட்ட காவலரண் தொடர்ந்தும் அங்கு இருப்பது குறிப்பிடத்தக்கது. (ம-10-173)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஒருவரின் பாவனையில் நல்ல நிலையிலுள்ள Honda CD 90 Benly (Batch Model) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: த.நவரட்ணவேல், இலங்கை மின்சார சபை, (பி.பொ.மு. அலுவலகம்) கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (28371)

JVC Japan வீடியோ டெக்கும், சில திரைப்பட பிரதிகளும் சிங்கர் குளிரூட்டியும் (Fridge) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ப.யோகராஜா C/O திருமதி N.சிங்கராஜா, கில்டா வாசம (அச்சுநகர் சங்கப் பின் வீதி), அச்சுவேலி. (28402)

## தபால் மூலம் ஆங்கிலம்/சிங்களம்

மேற்படி மொழிகளை வீட்டிலிருந்தே நீங்கள் படிக்கலாம். தெளிவான தமிழ விளக்கங்களுடன், வழமையான மேற்படி வகுப்புகளும் உண்டு. இன்றே எழுதுங்கள் அல்லது நேரில் வாருங்கள். தொடர்பிற்கு வழிகாட்டல் ஆசிரியர் திரு.மல்வான, 56, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (28296)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, வயது 27, கார்த்திகை நட்சத்திரம், எட்டில் செவ்வாய் கிரக பாவம் 42 உள்ள மணமகனுக்கு லண்டனில் P.R உடைய மணமகள் தேவை. தொடர்பு விளம்பர இல. 2163, மே/பா உதயன். (28380)

## மேல்மாடி வாடகைக்கு

பருத்தித்துறை வீதியில் ஆரிய குளம் சந்திக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய தனிப்பாதை கொண்ட மேல்மாடி வாடகைக்கு உண்டு. கந்தோர் பாவனைக்கு உகந்தது. தொடர்பு: ராசா வாமதேவன் T.P.: 222 3239. (28407)

## தேவை

நல்ல நிலையிலுள்ள ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் தேவை. தொடர்பு: யேசுதாசன், உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். (28404)

## தவறிவிட்டது

குமரநகர், கைதடியைச் சேர்ந்த கந்தையா இராசம்மா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 445723983), விசேட அடையாள அட்டை என்பன யாழ்.நகரில் தவறி விட்டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (28374)

சுப்பிரமணியம் நவசுகி என்பவரின் தேசிய அடையாள அட்டை (846912029V), விசேட அடையாள அட்டை, பாடசாலை அடையாள அட்டை என்பன 06-02-2004 இல் யாழ்ப்பாணத்திற்கும் கோண்டாவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சுப்பிரமணியம், கே.கே. எஸ். வீதி, கோண்டாவில் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (28372)

## திருமண சேவை

1971 புரட்டாதி, செவ்வாய் 2, B.Sc. Lecturer இற்கு உத்தியோக கௌரவ குடும்ப மணமகன் தேவை. தொடர்புகளுக்கு துரைவிமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (28403)

## நீர்வேலி மயானம் புனரமைப்பு

நீர்வேலி தெற்கு, இந்து மயானத்தைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது மயானத்தில் இருக்கும தங்குமிட மண்டபத்தைப் புனரமைக்கும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன. (எ-17)

## விபத்தில் மாணவன் காயம்!

யாழ்ப்பாணம் - சிறுப்பிட்டிச் சந்தியில் மோட்டார் சைக்கிள், மினிபஸ் விபத்தில் மாணவர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்றது. புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியைச் சேர்ந்த நா.விக்கினேஸ்வரன் என்ற மாணவனே காயமடைந்தார். அவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-ரி)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்







உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2367458 இருந்து
2384321 வரை
சீட்டிழுப்பு இல. 1478
திகதி 11.02.2004

வெற்றி எண்கள்
**01 10 18 27 55**

போனஸ் எண்
**17**

ஜக்பொட் பரிசு
**ரூபா.1,500,000/-** வெல்லப்பட்டது

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 1 | 1,500,000/- | 1,500,000/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 | 89 | 10,000/- | 890,000/- |
| 3 | 5,211 | 500/- | 2,605,500/- |
| 2 | 88,890 | 20/- | 1,777,800/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 01ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 108,006 | 10/- | 1,080,060/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.8,053,360/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
**ரூபா.1,500,000/-**

தொடர் இல. 3340731க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2004 பெப்ரவரி 14ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2367545-9-75
2371235-9-72
2369737-8-21
2368070-6-79
2369850-5-88

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விறியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M


# 29 ஆம் நாள் நினைவு அஞ்சலி

## அமரர்
## ஏகாம்பரநாதன் இரவிச்சந்திரகுமார்



தோற்றம்
05-06-1970

மறைவு
16-01-2004

சுபானுவருடம் தைமாதம் முதலாம் நாள் 16.01.2004 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர் ஏகாம்பரநாதன் இரவிச்சந்திரகுமார்**

அவர்களின் இறுதிக்கிரியையில் கலந்து துயர்பகிர்ந்து கொண்ட அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு 15.02.2004 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.

\- குடும்பத்தினர்.

## தெய்வீக ஸ்தலங்களில்...



பலவருடங்கள் ஓதுவாராக இறைபணியாற்றிய கொழும்புத்துறையைச் சேர்ந்த இ.பரராஜசிங்கம் என்பவருக்கு ஈச்சமோட்டை, கலட்டிப்புலம் ஞானவைரவர் ஆலயத்தில் நடந்த கௌரவிப்பு விழாவில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் மாலையணிவிப்பதைப் படத்தில் காணலாம். *(படம்:அரியாலைச் செய்தியாளர்)*



தென்னிந்தியாவில் இருந்து வருகைதந்த நாதஸ்வரக் கலைஞர்கள் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் கானமழை பொழிந்த நிகழ்வை சிவஸ்ரீ சு.சுந்தரராசக்குருக்கள் ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: சுழிபுரம் செய்தியாளர்)*



அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள கைதிகள் வணங்குவதற்கு அப்பிரதேச விவேகானந்த சபையின் உபதலைவர் சுஜேந்திரநாத்தினால் சிறைச்சாலை அதிகாரி ஏ.டி.திஸநாயக்காவிடம் பிள்ளையார் சிலையொன்று வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம். நலன்புரி நிலைய அதிகாரி அனஸ்டீன், அநுராதபுரம் கதிரேசன் ஆலய பொருளாளர் ஸ்ரீ.ஸ்கந்தராஜா, சிவஸ்ரீ பா.ஞானச்சந்திரகுருக்கள் ஆகியோரும படத்தில் உள்ளனர்.

# சுயநலமற்ற சமூகத்தொண்டு இறைவனை அடைய வழிகாட்டும்

**ஞானக்கதிர்**

"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கவேண்டாம்", "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பது முதுமொழி. இறைவன் ஒருவன். அவன் பல ரூபத்தில் எங்கும் வியாபித்திருககின்றான். அவன் எல்லா உயிர்களிடத்தும் அன்புகொண்டவன். எம் உடம்பில் இறைவன் ஒன்றாகக் கலந்து நிற்பவன். எமக்குமுன் எத்தனையோ சித்தர்களும், ஞானியரும் தோன்றிப் பல அற்புதங்களைச் செய்தும், பல உண்மைகளை எடுத்துரைத்தும் எம்மை உண்மையான நல்வழி செல்ல வழிகாட்டியுள்ளனர். இக்காலத்திலும் பல ஞானிகளும், சிவநெறிச் செம்மல்களும் நம் மத்தியில் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இவர்கள் யாவரும் அன்பு, இரக்கம் என்ற சொல்லுக்குப் பெருமதிப்பளித்துள்ளனர். 'அன்பே சிவம்', 'அன்பே கடவுள்' என்ற உண்மையை நன்கு அறிந்து உள்ளன்போடு தொண்டு செய்து புனிதமாகத் தெய்வீகத்துடன் செயற்பட்டவர்கள்.

மக்கள் உடல் வளர்ச்சிக்கு உணவு இன்றியமையாததாகும். அதுபோல் மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கு ஆலய வழிபாடு இன்றியமையாததாகும். 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி' வடிவான எமது இறைவனை நாம் உள்ளன்போடு வணங்க உகந்த இடமே ஆலயம் ஆகும்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது முதுமொழி. நாம் விரும்பிய நன்மைகளை எல்லாம் இனிது அடைய வேண்டுமெனில் ஆலயங்களிற்கு ஒழுங்காகச் செல்ல வேண்டும். நாம் மனத்தினை ஒரு வழிப்படுத்திக் கடவுளை உள்ளன்போடு புனிதமாக நினைத்துத் தியானிக்கவேண்டும். ஆலயத்தில் நாம் தவறாது கடவுளின் நாமத்தை உச்சரித்தும், பஜனை, கூட்டுப்பிரார்த்தனைகளைப் பாடியும் புனிதமாக வழிபாடு செய்யவேண்டும்.

இராமகிருஷ்ணரின் முக்கியத்துவம் வாய்ந்த உபதேசத்தில் தொண்டின் சிறப்புகள் விரிவாகக் கூறப்படுகின்றன. உண்மையில் நாம் ஆலய வழிபாடும், சமய - சமூகத் தொண்டுகளும், இறையருள் சுரக்கும் சுயநலமற்ற புனிதமான சகல தொண்டுகளையும் புனிதமாகவும், உள்ளன்போடும், இறைபக்தியுடனும் செய்து வந்தால் எமக்கு உண்மையான இறை அருள் கிடைத்தே தீரும்.

நமது உள்ளத்தில் சத்தியத்தோடு சுயநலமற்ற தொண்டு ஒன்று சேருமானால் மனம் விரைவில் தூய்மையடைந்து உயர்ந்த ஆன்மீக நிலையை அடைந்து கொள்ளும் எங்கும் பரவி உள்ள காற்றுத்தான் நுரையீரல்களுக்குள்ளும் இருக்கிறது. காற்றை, இது என்னுடையகாற்று என்று சொல்லிக் கொள்ளமுடியுமா? அதுபோலவே எல்லா இடத்திலும் ஒரே இறைவன் தான் பரவி இருக்கிறார்.

"அன்பேசிவம்" என்பதை நாம் மனதார நன்கு உணரவேண்டும். ஒருவன அன்பை உணர்ந்து விட்டால் எல்லாம உணர்ந்தவனாகிறான். 'அ' என்பது தமிழுக்கே முதல் எழுத்து 'ன்' என்பது வரிவடிவில் கடைசி எழுத்து 'பு' என்பது நடு எழுத்தாகும். முன்னாகிப் பின்னாகி நடுவாகி எங்கும் பரந்துள்ளது. அன்பு என்னும் சொல் முந்தியமுதல் நடு இறுதியுமானாய் என்பதை நினைவூட்டுகின்றது. இறைவன் அன்பு வடிவமானவன்.

அன்பு பெற்றெடுத்த குழந்தையே அருளாகும். தன்னைப்போல் மற்றவர்களையும் நினைக்கத் தூண்டுவது தான் உண்மையான அன்பாகும். ஆதலால், நாம் அனைவருடனும் அன்புடன் பழகமுன்வர வேண்டும். உண்மையில் கஷ்டப்படுகிறவர்களைப் பார்த்தால், நமது மனம் இரங்க வேண்டும்.

ஆகவே, இறைவனிடம் சென்று எனக்கென்று வரம் வேண்டாமல் 'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க" என்று நாம் மனதார வேண்டுதல் வேண்டும். இப்படி இறைவனிடம் வேண்டினால் அருள் கிடைக்குமென்பது தவறு. இறைவனுக்கு மனதாரத் தொண்டு செய்து, இறைவனுடைய அன்பர்களிடத்து அன்பு கொண்டு அவர்களுக்கு எம்மாலான நற்சேவைகளை உள்ளன்போடு செய்தால், இறைவன் எம்மை ஆட்கொண்டு அருள் சுரப்பான். தன்னலம் கருதா புனிதமான சேவை எல்லோரும் இன்புற்று வாழ வேண்டுமென்ற மனப்பாங்கு எவரிடம் குடிகொள்ளுமோ அவனையே இறைவன் தன்னிடம் அழைத்து விடுகின்றான். ✳

சமூகமணி
**சி.சி.வரதராசா**

# உணவுப் பொருள்களுடன் கடைகளில் நச்சுப் பொருள்களை வைக்கவேண்டாம்

## சுகாதாரப் பரிசோதகர்கள் அறிவுறுத்து

வலி.தெற்கு,பெப்.13

பலசரக்கு விற்பனை நிலையங்களில் உணவுப் பொருள்களுடன் மலத்தியோன், டி.டி.ரி. (D.D.T) மற்றும் நச்சுத்தன்மைகளைக் கொண்ட பொருள்களை வைத்து விற்பனை செய்யவேண்டாம் என மானிப்பாய் பிரதேச வர்த்தகர்களுக்கு மானிப்பாய் பகுதி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளார்.

கடந்த வாரம் மானிப்பாய் பகுதியில் இடம்பெற்ற திடீர் பரிசோதனைகளின்போது பல வியாபார நிறுவனங்களில் உணவுப்பொருள்களுடன் நச்சுத்தன்மையுடைய பொருள்களும் வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

மானிப்பாய், ஆனைக்கோட்டை, நவாலி, சண்டிலிப்பாய், பிரான்பற்று போன்ற இடங்களில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது இந்தத் திடீர் பரிசோதனைகளைச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்டனர்.

இப்பரிசோதனைகளின்போது பல கடைகளில் காலாவதியான பல பிஸ்கட் பைக்கற்றுக்கள், இனிப்பு வகைகள், உணவுப் பொருள்கள் என்பன விற்பனைக்கென வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதுதொடர்பாக விற்பனை நிலைய உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டதோடு, உணவுப் பொருள்களுக்கு அருகே நச்சுப் பொருள்களை வைத்து விற்பனை செய்யவேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

அடுத்தமுறை பரிசோதனைகளின் போது இவை கண்டுபிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட விற்பனை நிலைய உரிமையாளர்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டது. (ம-152)

# சாவகச்சேரி நகரசபை மைதான விடுவிப்புத் தாமதம்

## தேர்தல் அறிப்பினால்

தென்மராட்சி,பெப்.13

சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானம் கையளிப்பது தாமதமாகுமென படைத்தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு மைதானம் இந்த வாரம் கையளிக்கப்படுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், திடீரென பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டதையடுத்து அரசியல் கட்சிகள் இவ்விடயத்தில் அக்கறை செலுத்துவதால் மைதானம் கையளிப்பது தாமதமாகலாமெனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - நகரசபை தொழிலாளர் விடுதிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நகரசபை செயலாளரிடம் படையினரால் கையளிக்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது.

பொதுவிளையாட்டு மைதானத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வேலி இன்னமும் அகற்றப்படாதபோதிலும், மைதான துப்பரவு செய்யும் பணியினைப் படையினர் தொடர்ந்து மேற்கொண்டு வருவதைக காணமுடிகிறது.

இதேவேளை, விடுவிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்ட திருவள்ளுவர் சனசமூக நிலையக்கட்டடம் தொடர்ந்தும் படையினரின் பாதுகாப்பு வேலிக்குள் அகப்பட்டுக் கொண்டுள்ளதாக சனசமூக நிலையத்தினர் தெரிவித்தனர். (ம-8-117)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

*5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை 2003இல் 146 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த எமது சிரேஷ்ட புதல்வன்*

*செல்வன்* **கந்தசாமி மகிந்தன்**



அவர்களையும் கல்வியறிவூட்டி ஊக்கமளித்த கைதடி விக்னேஸ்வர வித்தியாலய அதிபர், ஆசிரியர்களையும் பிரத்தியேகமாக வகுப்புகள் நடத்திக் கல்வி போதித்த செல்வி சி.கௌரி ஆசிரியர், கல்விக் கழகத்தில் கல்வி போதித்த திரு.க.இந்திரராசா ஆசிரியர் ஆகியோரையும் மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அண்ணாமார், தங்கை, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், சித்திமார், சித்தப்பாமார்.

*கைதடி கிழக்கு, கைதடி.* (28370) (24-14-26)

## கார் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள FB 14 NISSAN SUNNY SUPER SALOON 301 - xxxx FULL OPTION வெள்ளை நிறக் கார் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
077 6052219
(28376) (24-13-26)

## மலிவு விற்பனை

குறோட்டன், முசந்தாஸ், Y.T.T, மஞ்சல் கொடிப்பூ, ஈரப்பலா, சைப்பிரஸ், குயின்பாம், பான்பாம், அவுஸ்ரேலியன்பாம், யூக்கோபியா, ஒறக்கேரியா ஆகிய கன்றுகள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு.

**கிறீன்பாக்**
152/2, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
TP.:222 6563
(28386)(17-13-26-24)

## லிகிதர்கள், விளம்பரப் பயிலுநர்கள், அனுசரணையாளர்கள் தேவை

**க.பொ.த. (சா.த.)தரத்தில் கணிதம், தமிழ் திறமைச் சித்தியும் ஆங்கிலம், பொது அறிவில் ஓரளவு திறமையும் கொண்ட பெண்கள் தேவை.**

**கல்வித் தராதர சான்றிதழ் பிரதிகள் அடங்கிய விண்ணப்பத்துடன் உரித்துடைய இருவரின் சிபார்சுடன் கிராம சேவையாளரின் நற்சாட்சிப் பத்திரத்துடனும் விண்ணப்பிக்கவும் (ஆர்வம் உடையவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்). 14 ஆம், 15 ஆம் திகதிகளில் காலை 10.00 மணிக்கு சமுகம் தரவும்.**

"செனித்மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்ரம்"
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.
(28334) (24-14-26)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தவப்பேறு 1938 - 09 - 10



சிவப்பேறு 2004 - 01 - 14

### திருமதி செல்லம்மா வீரசிங்கம்

திதி: 2004.02.13

அம்மா! அம்மா! என்றழைத்தால் ஓடிவந்தெம்மை அணைப்பாய்
சிந்தை குளிர வைத்து நித்தம் எங்கள் துயர் துடைப்பாய்
பித்தும் எமக்கேற நீயும் பிரிந்து சென்றதேனம்மா?
எம்மைத் துயருள் ஆழ்த்திவிட்டு மறைந்ததும் ஏனம்மா?

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*இன்பிலன், சமரபாகு,*
*பொலிகண்டி, வல்வெட்டித்துறை.*

- குடும்பத்தினர்.

(28379) (38-12-14)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### பொன்னுத்துரை புவனேஸ்வரன்

(பழனி)
(ஓய்வுபெற்ற ஊழியர்,
நில அளவைத் திணைக்களம்)

பிறப்பு: 1948-07-06 இறப்பு: 1999-02-08

ஆண்டுகள் ஐந்து ஆனபோதும்
ஆறவில்லை உம் நினைவுகள்.

*தாவடி தெற்கு,*
*கொக்குவில்.*

(28277)(41-12-14)

- குடும்பத்தினர்.

## 1ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் பரநிருபசிங்கம் பரம்சோதி

*(ஓய்வுபெற்ற உள்ளூராட்சி உதவி ஆணையாளரும், RRAN மாவட்ட இணைப்பாளரும்)*

அப்பா! நீங்கள் ஓர் அபூர்வ பிறவியப்பா!
அறுவரினதும் இதயம் 'லப்டப்' என்பதிற்குப் பதில்
அப்பா! அப்பா! என்றே துடிக்கின்றது
அப்பாவின் வாழ்க்கை அர்ப்பணிப்பு நிறைந்தது
அப்பா நீங்கள் இறக்கவில்லை!
வாழ்ந்துகொண்டே இருக்கிறீர்கள்; இருப்பீர்கள்!

*29-02-2004 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு நேரிலும், தகவல் சாதனங்கள் மூலமும் எம்முடன் துயர்பகிர்ந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் கண்ணீர் அஞ்சலிப்பிரசுரங்களை வெளியிட்ட அனைவருக்கும், மலர்வளையங்களை வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், இன்னமும் பல்வேறு வழிகளில் ஆறுதல்படுத்திய அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

*'மகேசபவனம்'*
*163,3ஆம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.*
*021-222 3714*

(28336)(35-12-14)

- குடும்பத்தினர்.

## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 20 - 04 - 1946



மறைவு 27 - 01 - 2000

### அமரர் சின்னையா பாஸ்கரலிங்கம்

(தபாலதிபர், வவுனியா)
திதி : அபரபக்க அட்டமி)
சிரார்த்தநாள் : 13.02.2004

*ஆண்டுகள் ஒரு நான்கு அதிகளவாய் மறைந்ததிங்கே*
*ஆறாத சோகத்தால் நின்னன்னை நினையடைந்தாள்*
*மீண்டொருக்கால் எம் குடியில் மறு ஜென்மம் எடுத்து வந்து*
*விடுவிக்க வேண்டும் ஐயா மிக்கதுயர்ப் பிடியிலிருந்து!*

*"சாளம்பன்"*
*கரணவாய் மத்தி,*
*கரவெட்டி.*

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(28222)(41-12-14)

## புதிய பொலீஸ் பொறுப்பதிகாரி

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ்.மாவட்ட பொலீஸ் பொறுப்பதிகாரியாக தயா செனவிரட்ன பொறுப்பேற்றுள்ளார்.

கடந்த முதலாம் திகதி யாழ். மாவட்ட பொலீஸ் பொறுப்பதிகாரியாக பொறுப்பேற்ற இவர், யாழ். பொலீஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள யாழ். பொலீஸ் நிலைய தலைமைக் காரியாலயத்தில் கடமையாற்றி வருகின்றார்.

இதுவரைகாலமும் கடமையாற்றிய பொலீஸ் பொறுப்பதிகாரியான ஹெட்ட தர்மசிறி கொழும்பில் உள்ள பொலீஸ் தலைமையகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். (எ-7)

## கலை அரங்கம்

யாழ்ப்பாணம்,பெப்.13

திருமறைக் கலாமன்றத்தின் 'மாதாந்த கலைநிலா அரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு மன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் நடனம், வாய்ப்பாட்டு மற்றும் பண்டாரவன்னியன் நாட்டுக்கூத்து என்பன இடம்பெறவுள்ளன.

## மனிதவள அபிவிருத்திப் பயிற்சிநெறி

வட்டுக்கோட்டை,பெப்.13

மனிதவள அபிவிருத்தி பயிற்சி திட்டத்தின் கீழ் வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் வீட்டு மின இணைப்பு, கைப்பணி, மரத்தொழில் நுட்பப் பயிற்சிநெறிகள் நடைபெறவுள்ளன.

ஆறுமாத காலம் நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறியில் பங்குகொள்ளும் பயிற்சியாளர்களுக்கு மாதாந்தம் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் பயிற்சி பெற விரும்புவோர் இம்மாதம் 16 ஆம் திகதிக்கு முன்னர் சுயவிவரங்களுடன் விண்ணப்பங்களை பிரதேச செயலகத்தில் ஒப்படைக்க முடியும் என அபிவிருத்திப் பரிசோதகர் அறிவித்துள்ளார். (எ-161)

## இப்படியும் நடக்கிறது

தென்மராட்சி,பெப்.13

சட்ட விரோதமாகி டிராக்டர்களில் ஏற்றிவரப்படும் மணலை பொலீஸாரின நடமாட்டத்தைக் கண்டவுடன் வீதியில் பறித்துவிட்டுச் செல்லும் நிலை அண்மைக்காலமாக தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்றுவருகிறது.

வீதிகளில் மணலைப் பறித்துவிட்டு டிராக்டர்கள் தப்பிவிடுகின்ற போதிலும், வீதியில் மணல் பறித்திருப்பதை அறியாத பொதுமக்கள் மணல் மீது வாகனங்களை ஏற்றி சிரமங்களை அனுபவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

தும்பான், மாசேரி, மிருசுவில் ஆகிய பகுதிகளிலிருந்து இரவுவேளைகளில் கொண்டுவரப்படும் மணல் வரணிப் பகுதியில் பறிக்கப்படுவதால் தாம் சிரமங்களை அனுபவிப்பதாக அப்பகுதிமக்கள் தெரிவித்தனர்.

(எ-8-117)


ஆசிரியர் பதவிக்கான போட்டிப் பரீட்சை
பயிற்சி வகுப்புகள்

புதிய பிரிவு ஆரம்பம்: 14.02.2004 3 மணி

**புதிய உயர்கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்.

(28335)(34-12-14)

**இதோ! மூன்று படம் இலவசம்!!**

எமது நிறுவனத்தில் பிரதியாக்கம் செய்யும் சகலவிதமான புகைப்படச்சுருள்களுக்கும் மூன்று புகைப்படம் இலவசமாக வழங்கப்படும். உங்கள் புகைப்படச் சுருள்களைப் பெற்றுக்கொள்ள

| ஸ்கை எலக்ரோனிக்ஸ் | தேவன் சன் |
|---|---|
| 10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | 119, கண்டி வீதி, சாவகச்சேரி. |

**மூர்த்தி ஸ்ருடியோ அன் கலர் லாப்**
பிரதான வீதி, மானிப்பாய்.
T.P:-021-222-2884

(28263)(37-18-14-26)


## உள்ளத்தை உருக்கும் ஆண்டுகள் மூன்று

உறவுகள் மகிழ 05 - 07 - 1962



உறவுகள் கதற 15 - 02 - 2001

அமரர்

### திருமதி சத்தியாதேவி சிவகுமார்

திதி: 13.02.2004

இல்லறத்தின் வேராக நின்று மாண்பு தந்த தெய்வமே!
ஆலம் விழுதுபோல் உறவுகள் ஆயிரம் இருப்பினும்
'அம்மா' என்றழைக்க உறவில்லாமல்
எமைப் பரிதவிக்கவிட்டதேனோ? - தாயே!
எமைப் பிரிந்து ஆண்டுகள் மூன்றானாலும்
ஏற்றிய தீபமாய் எம் நெஞ்சினில் வீற்றிருப்பீர்!
ஆறாது எம்துயர் அழியாது உம் நினைவு
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்போமாக!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*கொக்குவில் மேற்கு,*
*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.* (28394)(32-12-14)

*பிரிவால் துயருறும்:*
கணவர், பிள்ளைகள்.



## ஆத்மசாந்திப் பிரார்த்தனை

எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரும்
பிரபல கராத்தே ஆசிரியரும்
சிலம்பு ஆசிரியருமான

### பொன்னம்பலம் தயாளரூபன்

அவர்கள் 31-12-2003 இல்
அகாலமரணமானதையிட்டு
நாம் அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம்.
அவரது ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அல்வாய் தெற்கு,*
*அல்வாய்.*

- அன்பு நண்பர்கள்.

(28378) (23-12-14)

யாழ்ப்பாணம்

# சிறுபான்மையினரின் ஒட்டுமொத்த ஆதரவு பிரதமர் ரணிலுக்குக் கிடைப்பது நிச்சயம்

## இ.தொ.காவில் சேர்ந்த புத்திரசிகாமணி நம்பிக்கை

சிறுபான்மையினரின் ஒட்டுமொத்தமான ஆதரவும் ஐக்கியதேசிய முன்னணிக்கே உண்டு. நாட்டில் மீண்டும் சமாதானத்தையும் நிரந்தரமான அமைதியையும் ஏற்படுத்தும் சக்தி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைக்கே உள்ளது என மக்கள் நம்புகின்றனர். எனவே, இ.தொ.காவுடன் இணைந்து பிரதமரின் கரத்தைப் பலப்படுத்துவோம் எனக் கூறுகிறார் இ.தொ.காவின் மத்திய நிர்வாகச் செயலாளர் வி.புத்திரசிகாமணி.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான வி.புத்திரசிகாமணி, ஆறுமுகம தொண்டமானின் இ.தொ.காவுடன் இணைந்து கொண்டார். நேற்றுமுன்தினம இ.தொ.காவின் நிர்வாகச் செயலாளராகப் பதவியேற்ற கையோடு அவர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி கடந்த காலங்களில் சிறுபான்மை இனத்தவர்களுக்கு இழைத்த அட்டுழியங்களையும் அவர் பட்டியல்போட்டுக் காட்டினார்.

ஜனாதிபதியின் தாயார் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பிரதமராக இருந்த போது என்.எம்.பெரேராவுடன் சேர்ந்து கொண்டு ரூபா நோட்டுக்களைச் செல்லுபடியற்றதாக்கி தோட்டத் தொழிலாளர்களை தீபாவழித் தினத்தன்று வங்கிகளில் கியூவில் நிற்கவைத்தார்.

அதேபோன்று, இன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தீபாவழித் தினத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினார்.

இப்போதும்கூட முஸ்லிம்களின் தொழுகைநாளான வெள்ளிக்கிழமையிலேயே தேர்தலையும் நடத்தவுள்ளார். இதற்கு முஸ்லிம் அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இப்படி சிறுபான்மை இனங்களை உதாசீனப்படுத்தும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் மானமுள்ள எந்தத் தமிழனும் சேர்ந்து செயற்படமாட்டான். இதன் அடிப்படையிலேயே நான் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியை உதறிவிட்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பினருடன் சென்று அமர்ந்தேன்.

ஆனால், மலையக மக்களின் அடிப்படை அபிலாஷைகளையும், உணர்வுகளையும் அறிந்து செயற்படுவதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பைவிட இ.தொ.காங்கிரசே முதன்மையானது என்பதால் இ.தொ.காவுடன் இணைந்து கொண்டேன் - என்றார் வி. புத்திரசிகாமணி.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினதும் ஜே.வி.பியினதும் தமிழ் விரோதச் செயற்பாட்டை ஆட்சேபித்தே நீங்கள் அதில் இருந்து வெளியேறினீர்கள். ஆனால், உங்கள் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் வெற்றிபெறும் எந்தக் கட்சியுடனும் இணைவேன் என்கிறார்.

"துரதிஷ்டவசமாக இடதுசாரியினா ஆட்சி அமைத்து அதில் உங்கள் தலைவர் சேர்ந்துகொண்டால் அப்போது உங்கள் நிலை என்ன? அமைப்பிலிருந்து வெளியேறி விடுவீர்களா?" என நிருபர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர்.

"நிச்சயமாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றிபெற முடியாது. வெற்றிபெறவும் விடமாட்டோம. சிறுபான்மையினரின் ஒட்டுமொத்த ஆதரவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கே உண்டு" - என சுற்றிவளைத்துப் பதில் அளித்தார் இ.தொ.கா.நிர்வாகச் செயலாளர் வி.புத்திரசிகாமணி.

# அம்பாறை உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தலை நிறுத்தக்கோரி மனு

அம்பாறை மாவட்டத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை இடைநிறுத்த உதவுமாறு கோரி அடிப்படை மனித உரிமை வழக்கொன்று கொழும்பு உயர்நீதிமன்றில் நேற்றுமுன்தினம் தாக்கல் செய்யப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஏ.கே.சமீர் மற்றும் வாக்காளர்கள் நால்வர் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்கில் தேர்தல் ஆணையாளர் உட்பட நான்குபேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கல்முனை நகரசபைக்கும், சம்மாந்துறை, அக்கரைப்பற்று, பொத்துவில், அட்டாளைச்சேனை, நிந்தவூர், திருக்கோவில் போன்ற பிரதேசசபைகளுக்குமான பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் தேர்தல் நடைபெறவுள்ளது என அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டது.

2002 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின்படி வேட்பாளர் பட்டியல் தீர்மானிக்கப்படுவதால் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் வாக்களிக்கமுடியாத நிலை தோன்றும் என அந்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மைதான நிகழ்வுகள் மூலம் மனித ஆளுமை நன்கு வளரும்

## வலயக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் சொல்கிறார்

அச்சுவேலி,பெப்.13

பாடசாலைகளில் ஏற்பாடு செய்யப்படும் மைதான நிகழ்வுகள் மாணவர்களின் உடல், உள, சமூக வளர்ச்சியில் சமநிலையை ஏற்படுத்தி அவர்கள் பூரண ஆளுமை உள்ள மனிதர்களாக வாழ நிலைககளனாக அமைகின்றன.

- இவ்வாறு கூறினார் யாழ். வலயக் கல்விப பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன். அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி கல்லூரி அதிபர் அருட்சகோதரி மேரி றொசாறியோ தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போதே வலயக் கல்விப் பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்காலத்தில் வாழ்வதற்கான பண்புகள் பாடசாலைப் பருவத்திலேயே கட்டி எழுப்பப்படவேண்டும். மாணவர்கள் சமமான ஆளுமை உள்ளவர்களாக வளர்வதற்கு மைதான நிகழ்வுகள் சிறந்த ஏற்பாடாகும்.

உடல்,உள, சமூக வளர்ச்சியில் சமநிலையை ஏற்படுத்துவதற்கு மைதான நிகழ்வுகள் ஏற்புடையன. மைதான நிகழ்வுகளைத் திட்டமிட்டு ஏற்பாடு செய்வதன்மூலம் மாணவர்களின் திறமைகளை வளர்த்துக் கொள்ளமுடியும்.

சமநிலை கணனி யுகத்தில் பல்வேறு தொழிற்பாடுகளில் மாணவர்கள ஈடுபடவேண்டும். அத்தகைய தொழிற்பாடுகளுக்கான களநிலைகள் பாடசாலைகளில் உருவாக்கப்படவேண்டும். இதற்குப் பாடசாலைச் சமூகம் தனது ஒத்துழைப்பை வழங்க முன்வரவேண்டும்.

மாணவர்கள் கல்வியில் அக்கறையுடன் ஈடுபட்டு தேர்ச்சி அடைவதற்கு அவர்களின் உள்ளார்ந்த உடலியல் மேம்பாடு அவசியம். அது மெய்வன்மைப் போட்டிகள் மூலம் மேல்நிலை அடைகின்றது. (எ-11)




யாழ்.கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தினால் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கருத்தரங்கில், கிறிஸ்தவ வாலிபர் சங்க மனித உரிமைகள் நிலையத்தின் பிராந்திய இணைப்பாளர் ரீ.சாள்ஸ் பிறவுன்சன் உரை நிகழ்த்துவதையும், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளர் ஆர். பி. சந்திரசேகர, விசாரணை அதிகாரி எஸ்.பெரோஸ் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம். (எ)

# கிராம மட்டப் பயிற்சிகள் மூலம் யுவதிகள் வருமானம் ஈட்டமுடியும்

## தையல் பயிற்சி நிறைவில் அதிகாரி உரை

வடமராட்சி கிழக்கு,பெப்.13

கிராமமட்டத்தில் வழங்கப்படுகின்ற பயிற்சியின் மூலம் யுவதிகள் சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டு வருமானத்தை ஈட்டமுடியும்.

மருதங்கேணியில் தையல், மனையியல் பயிற்சியினைப் பூர்த்திசெய்த யுவதிகளால் செய்யப்பட்ட கைப்பணிப் பொருள்களின் கண்காட்சியினை திறந்துவைத்து உரையாற்றிய யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி அதிகாரி எஸ்.செல்வரட்ணம் இவ்வாறு தெரிவித்தார்.

மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

கிராம அபிவிருத்தி அதிகாரி எஸ். செல்வரட்ணம் தொடர்ந்து உரையாற்றும்போது -

பயிற்சியினை முடித்த யுவதிகள் தொடர்ந்தும் அத்தொழிலினை மேற்கொள்ளவேண்டும். அத்தோடு, மற்றவர்களுக்கும் இப்பயிற்சியினை வழங்கி உதவவேண்டும்.

கிராமமட்டத்தில் வழங்கப்படுகின்ற இவ்வாறான பயிற்சியின் மூலம், யுவதிகள் சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டு வருமானத்தை ஈட்டமுடியும் - என்றார்.

மருதங்கேணி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வி.எஸ்.தியாகராசா உரையாற்றும்போது கூறியதாவது:-

இப்பிரதேச யுவதிகளின் நன்மை கருதி பயிற்சியினை நிறைவுசெய்தவர்களுக்கு தையல் இயந்திரம் கொள்வனவு செய்ய கிராமிய வங்கி ஊடாக கடன்வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் - எனத் தெரிவித்தார்.

வைபவத்தின் ஆரம்பத்தில் வரவேற்புரையினை மருதங்கேணி கிராம அலுவலர் க.ம.யோசப் நிகழ்த்தினார். மருதங்கேணி பல நோக்குக் கூட்டுறவுச சங்க பொதுமுகாமையாளர் பொ.சிறீராமச்சந்திரன், சமுர்த்தி வங்கி முகாமையாளர் அ.ரவிச்சந்திரன் ஆகியோரும் உரையாற்றினார்கள். மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எல். ஏச்.கே.சீவரட்ணம் நன்றி தெரிவித்து உரையாற்றினார். (ஐ-182)

# தேர்தலில் பொதுச் சொத்துகளை உபயோகிக்கும் அரசியல்வாதிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை

## சுதந்திரமான தேர்தலுக்கான அமைப்புக் கோரிக்கை

கொழும்பு,பெப்.13

தேர்தல் காலத்தில் அரச மற்றும் பொதுச் சொத்துக்களை உபயோகிக்கும் அரசியல்வாதிகளுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென சுதந்திரமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கை அமைப்புத் தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிங்ஸிலி றொட்ரிக்கோ தெரிவிக்கையில்:-

கடந்த தேர்தல் காலத்தில் நடந்தது போன்று அரச வாகனங்களும் நிதியும் பிரசாரத்துக்குப் பயனப்படுத்தப்படுமானால் பாரிய நெருக்கடி ஏற்படும்.

அந்தக் காலப்பகுதியில் காபந்து அரசின் அமைச்சர்கள் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்.

அரசியல் யாப்பின் பிரகாரம் இந்தச் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தேர்தல் ஆணையாளருக்கு விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டுளளன.

இதனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இத்தகைய ஒழுங்கீனங்கள் நடைபெறாதிருப்பதை உறுதிப்படுத்துவது அவசியம் என்றார். (-8)

## பஸ் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

தென்னிலங்கையில் இன்று மேற்கொள்ளப்படவிருந்த தனியார் பஸ் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது.

தனியார் பஸ் உரிமையாளர்கள் தவணைக்கட்டண அடிப்படையில் கொள்வனவு செய்த பஸ்களுக்கு மாதாந்த தவணைப்பணம் செலுத்தும்போது 'வற்'வரி அறவிடப்படமாட்டாது என்று திறைசேரிச் செயலாளர் சரித்த ரத்வத்தை நேற்றுமுன்தினம் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்திடம் அறிவித்ததையடுத்தே வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. இதுதொடர்பாக சகல நிதி நிறுவனங்களுக்குத் திறைசேரி சுற்று நிருபங்களை அனுப்பி வைத்திருப்பதாகவும் சரித்த ரத்வத்தை அறிவித்திருக்கிறார். (ம)

கலாசாரச் சீரழிவுக்கு உபயோகிக்காது

# நவீன கணனித் தொழில்நுட்பத்தை தேசநலனுக்குப் பயன்படுத்துங்கள்!

## சீர்திருத்தத்துறைப் பொறுப்பாளர் வேண்டுகோள்

வடமராட்சி,பெப்.13

எமது கலை கலாசாரத்தைச் சீரழிக்கும் நடவடிக்கைகளுக்குக் கணனித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தாது எமது தேசக்கட்டுமானப் பணிக்குப் பயன்படுத்துங்கள்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார் தமிழீழக் காவல்துறையின் சீர்திருத்தத்துறைப் பொறுப்பாளர் நரேன். தமிழீழ மாணவர் அமைப்பு வடமராட்சி கிழக்குப்பகுதி பாடசாலை மாணவர்களுக்கு கணனி அறிமுக வகுப்பொன்றை நடத்தியது. இதில் கலந்துகொண்டோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே நரேன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

எமது தேசியத் தலைவர் குறிப்பிட்டது போன்று இன்றைய உலகம் அறிவியல் ரீதியில் பரந்து, விரிந்து வ்யாபித்து உள்ளது. இன்றைய அறிவியல் உலகில் தகவல் தொழில்நுட்ப யுகத்தில் கணனியின் பங்கு பிரதான இடத்தை வகிக்கின்றது.

சிறுவர் முதல் பெரியோர் வரை, வீட்டில் இருந்து விண்வெளி வரை கணனியின் பயன்பாடு வியாபித்து நிற்கின்றது.

மேற்கத்தேய நாடுகளில் பல தசாப்தங்களின் முன்னரே கணனி பயன்பாட்டிற்கு வந்திருந்தபோதிலும் எமது தாயகப்பிரதேசத்தில் குறிப்பாக, வன்னிப் பெருநிலப்பில் சில வருடங்களுக்கு முன்னரே அறிமுகமாகியுள்ளது. ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கைகள், பொருளாதார தடைகள் இதற்குக்காரண மாக அமைந்தன.

எனினும், எமது தேசியத் தலைவரின் தீர்க்கதரிசனமான சிந்தனைகளின் வெளிப்பாடாக மாணவர் அமைப்பினரால் கணனி நிலையங்கள் நிறுவப்பட்டு, கணனி பற்றிய அறிவு சாதாரண கிராமமக்களுக்கும் கிடைக்கக்கூடிய விதத்தில் செயற்படுத்தப் பட்டுவருகின்றது. அதன்அடிப்படையில்தான் இங்கும் கணனிக் கருத்தமர்வு நடத்தப்பட்டு சான்றிதழ் வழங்கும் வைபவம் நடைபெறுகிறது.

தமிழன் அன்றும் வரமாகத்தான வாழ்ந்தான். ஆனால், தொழில்நுட்பரீதியல் பின்தங்கிய நிலையில் இருந்ததனால் நாம் அந்நியரிடம் தோற்றுப் போனோம். யாழ்.மன்னை ஆண்ட சங்கிலி மன்னனாக இருந்தாலும் சரி, வன்னிமண்ணை ஆண்ட பண்டாரவன்னியனாக இருந்தாலும் சரி முறையே போர்த்துக்கேயர், ஆங்கிலேயருடன் வீரமுடன் போரிட்டுத் தோற்றுப் போனார்கள். அந்நியரது தொழில்நுட்பத் திறன்வாய்ந்த துப்பாக்கிகளுக்கும் பீரங்கிகளுக்கும் முன்னால் எமது வாள்கள் செயலிழந்து போயின.

இரண்டாம் உலகமகா யுத்தத்தின்போது மோசமான முறையில் இன அழிப்புக்குட்பட்டு பல்வேறு நாடுகளுக்கும் சிதறடிக்கப்பட்ட யூத இனம் இன்று ஒன்று சேர்ந்து அறிவியலைப் பயன்படுத்தி இஸ்ரேல் என்ற பலமான நாட்டை நிர்மாணித்திருக்கின்றது.

தமிழர்களும் பல்வேறு நாடுகளிலும் புலம்பெயர்ந்து வாழ்கின்றார்கள். அவர்களும் நாமும் சேர்ந்து ஒருங்கிணைந்து வளமான ஒரு தாயகத்தை கட்டியெழுப்பவேண்டும். சகல துறைகளிலும் வளர்ச்சியடைந்த ஒரு இனமாகப் பரிணமிக்க வேண்டும்.

இந்தக்கணனிக்கல்வியை கலை, கலாசார சீரழிவுகளுக்குப் பயன்படுத்தாமல் தேசக்கட்டுமானப் பணிக்கு பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என்றார். (ஒ-8)

## மனைப்பொருளியல் ஆசிரியருக்குக் கருத்தரங்கு

தென்மராட்சி,பெப்.13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் மனைப்பொருளியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 21 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (எ-117)

# வலுவான அரசியல் சக்தியாக மாறும் நோக்குடன் ஜே.வி.பி. வகுக்கும் உபாயங்கள்

## சமாளிக்கத் தமிழர் தரப்பு என்ன செய்யப் போகிறது?

சுதந்திர இலங்கையின் 56ஆவது ஆண்டு நிறைவு தினம் இப்பொழுது தான் கொண்டாடி முடிந்துள்ளது. முடிந்த கையோடு பலரும் எதிர்பார்த்ததுபோல கடந்த சனிக்கிழமை நள்ளிரவில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, பொதுத் தேர்தலுக்கு நாளும் குறித்தாகிவிட்டது. இந்த நீண்டகால வரலாற்றின் இறுதி நாள்களில் நடந்த சம்பவங்கள் மிக முக்கியமானவை. இனப்பிரச்சினைத் தீர்விற்கான தமிழர் தரப்பு வரைபுகள் கையளிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து பிரதான அமைச்சுக்கள் ஜனாதிபதியால் பொறுப்பேற்கப்பட்டதும், தென்னிலங்கையில் அரசியல் இழுபறியும், ஸ்திரமற்ற தன்மையும் ஏற்பட்டதும், சமாதான முயற்சிகளில் இருந்து நோர்வேத்தரப்பு தற்காலிகமாக விலகிக் கொண்டதும் சர்வதேச சமூகம் மிக உன்னிப்பாக அவதானித்த அரசியல் மாற்றங்களாகும்.

அரசிற்கும் ஜனாதிபதி தரப்பிற்கும இடையில் இணக்கத்தை ஏற்படுத்த மனோ - மலிக் குழுப் பேச்சு தொடர்ந்து கொண்டு இருந்த நேரத்தில் ஜே.வி.பி.-சுதந்திரக்கட்சி பேச்சுகள் தென்னிலங்கையில் ஒரு புதிய அரசியல் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளமை சகலரும் அறிந்ததே.

புதிய கூட்டணியின் பிரசவத்தால் அரசியல்வாதிகள், அரசியல் ஆய்வாளர்



கள், பொதுமக்கள், அரசியல் கட்சிகள், புலிகள் என அனைத்துத் தரப்பினரும் தமது உணர்வுகளையும் கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் முன்வைத்த வேளையில் உள்ளூர மற்றும் சர்வதேச ஊடகங்கள் பல்வேறுபட்ட கோணத்தில் ஆய்வுகளையும் விமர்சனங்களையும் தெரிவித்து வரும் சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றக கலைப்பு இடம்பெற்றுள்ளது.

பல்வேறு மட்டங்களிலும் சந்தேகத்தையும், எதிர்கால அரசியல் நிச்சயமற்ற தன்மையையும் இது எழுப்பியுள்ளதுடன் சமாதானப் பேச்சுக்கள், புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பவற்றை அர்த்தமற்றக் தாக்கியுள்ளது; மீண்டும யுத்தம் மூளுமா என்ற ஏக்கத்தையும பயத்தையும் ஈழத்தமிழர் நெஞ்சங்களில் விதைத்துள்ளது. எதிர்காலம் ஏமாற்றம் நிறைந்ததாகவே இருக்கப் போகிறதா?

### ஜே.வி.பியின் எழுச்சி

இன்றைய இலங்கை அரசியலில பிரதான நடிபங்கை ஏற்றிருக்கும் ஜே.வி.பி. கட்சியினர் பிரதானமாக ஓர் அரசியல் கதாபாத்திரமாக, பேச்சுப் பொருளாக, ஆய்வுக்குரிய ஒன்றாக மாறி உள்ளனர். இந்த அமைப்பினர் இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஆற்றல்மிக்க ஒரு சக்தியாக உருவெடுத்துள்ளனரா என்றகேள்வி எழுவது இயல்பானதே? இதன் தொடர்ச்சியாக நிகழப்போவது என்ன?

ஜே.வி.பி. சித்தாந்த ரீதியில் சுய முரண்பாடுகளைத் தன்னகத்தே கொண்ட ஒரு கட்சியாகும். ஒருபுறம் சோசலிச சித்தாந்தத்தையும், ஏகாதிபத்தியம் எதிர்ப்பு வாதத்தையும் முதலாளித்துவத்திற்கு மாறான மாற்று சிந்தனை வடிவத்தையும் கொண்டதாகத் தன்னை இனம்காட்டும் அதேவேளை, பேரினவாதப் போக்குகளையும் ஒடுககப்பட்ட உரிமைகள் மறுக்கப்பட்ட சிறுபான்மை இனங்களின் மிகக் குறைந்த அடிப்படை உரிமைகளையும் வாழ்வாதார நிலையையும் கூட மறுக்கும் ஓர் அமைப்பாக அது தன்னை இனங்காட்டிவருகிறது. அத்துடன் தன்னை ஒரு பௌத்த சிங்கள பாதுகாவலனாகவும் வெளிக காட்டுகிறது.

முரண்பட்ட சித்தாந்தங்களை தனது கொள்கையாகக் கொண்டுள்ள இந்த அமைப்பு, முரண்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் (இனப்பிரச்சினை தொடர்பாக) இலங்கையின் ஆட்சிப் பீட அரியணையைப் பலமுறை அலங்கரித்த ஒரு கட்சியுடன் சரிநிகராக அதிலும் ஒருபடி மேற்சென்று கூட்டணி அமைத்துள்ளது. இது வேடிக்கையானது என்றாலும் விபரீதமானதென்றே பொதுவாகக் கருதப்படுகிறது. காரணம் அதன் வலுவை இலகுவில் குறைத்து மதிப்பிடுவது தவறானதாகும்.

இப்படியான ஒரு கூட்டு ஏற்படுவதற்கு சமகால அரசியல் சூழ்நிலையும், அதிகாரப் போட்டியும் பதவி ஆசையும், பிரதேசவாத வெளிநாட்டு அரசியல் அழுத்தமும் காரணம் என்று வாதிட்டாலும் கூட இத்தகைய ஒரு சிக்கலான நிலை உருவாகுவதற்கு நடைமுறையில் உள்ள அரசமைப்பும் பிரதான காரணம் என்பதை மறுப்பது பொருத்தமாக இருக்காது.

1977ஆம் ஆண்டின் தேர்தலின் பின் 1978இல் உருவாக்கப்பட்ட புதிய அரசியற்திட்டம் பரமவைரிகளிடம் ஒரு கூட்டணியை ஏற்படுத்தும் என்று காலஞ்சென்ற முதல் நிறைவேற்று ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவோ அல்லது இந்த அரசியற்றிட்டத்தின் பிதாமகனான ஏ.யே.வில்சனோ அந்த நேரத்தில் நினைத்திருப்பார்கள் என்று கூறுவது கடினமானதாகும்.

இந்த நாட்டின் நாடாளுமன்ற தேர்தல்களில் அளிக்கப்பட்ட கட்சி ரீதியான வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தொகுதிவாரியான தேர்தல் முறை மூலம் கூடுதலான வாக்குகளைப்பெற்ற ஐ.தே.கட்சி எதிரணியில் இருக்க, ஒப்பீட்டளவில் குறைந்த வாக்குகளைப்பெற்ற அணியினர் ஆட்சியதிகாரத்தைப் பெற்ற சந்தர்ப்பங்களைக் கணக்கெடுத்த ஜே.ஆர்.ஒருமுடிவுக்கு வந்தார். தொகுதி ரீதியான தேர்தல் முறையை ஒழிப்பது பிரதேச வாரியான தேர்தலை அறிமுகப்படுத்துவது.

அதாவது, பெரும்பான்மையான வாக்காளர்கள் ஐ.தே.கட்சியின் ஆதரவாளர்கள் என்பதை நடந்து முடிந்து போன தேர்தல் முடிவுகளில் இருந்து கண்டு அறிந்துகொண்டார். மேலும் அவரை உறுத்திய சம்பவங்களும் பழைய தேர்தல் முறையில் இடம் பெற்று இருந்தன. இரண்டாவது பெரிய கட்சியான சுதந்திரக்கட்சி ஒன்று இரண்டு ஆசனங்களைப்பெற ஒப்பீட்டு ரீதியில் அதில் குறைவான மொத்த வாக்குகளை தேசிய ரீதியில் பெற்ற சிறுபான்மைக் கட்சி ஒன்றின் தலைவரான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக பதவி ஏற்றதை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. எனவே, விகிதாசார தேர்தல் முறை இலங்கையின் அரசியலில் புகுந்துகொண்டது.

புதிய அரசியல் அமைப்பு மற்றும தேர்தல் முறைகள் எதிர்காலத்தில் சட்டஆக்கத்திற்கும் நிர்வாகத்திற்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் என்றோ அல்லது ஜே.வி.பி. போன்றவர்களை அரசியலில் முன்னிலைப்படுத்துமென்றோ அவர் கனவு கூடக் கண்டிருக்கமாட்டார் என்று நாங்கள் நிச்சயமாக நம்பலாம்.

### மானிங் சீர்திருத்தம்

மானிங் கமறன் அரசியல் சீர்திருத்தம் என்று அழைக்கப்படும் 1924ஆம் ஆண்டின் அரசியல் அமைப்பு இத்தகைய, சட்டஆக்கத்துறைக்கும் நிர்வாகத்துறைக்குமிடையில் முரண்பாடுகளைக் கொண்டு இருந்த தென்பதை மனங்கொள்வது பொருத்தமானதாகும். அந்த அரசியல் அமைப்பிலும் அரசியல் இழுபறி இருந்தது.

மேலும் "இலங்கையில் சிறுபான்மையினருக்கு பிரச்சினை இல்லை, இங்கிருப்பது வெறும் பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமே. இந்தப் பிரச்சினைக்கு கிராம மட்டத்திலான தீர்வே போதும்" என்று கூறிக்கொண்டு யுத்த முனைப்புடன் சமாதானத் திட்டத்தை நிராகரிக்கும் ஓர் அமைப்பினருடன் சமாதானத்திற்கான போரை நடத்தித தோல்வி கண்ட இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதியின் கட்சி கூட்டு வைத்துள்ளது. இந்தப் பேரினவாத, இனவாதக் கூட்டணி தேர்தலில் வெற்றிகளைக் குவித்தால் ஏற்படப்போகும



எதிர்விளைவுகள் என்னவாக இருக்கும் என்று பார்ப்பதற்குமுன் -

இந்தக் கூட்டணியை உருவாக்கிய தன் மூலம் ஜே.வி.பி. கட்சியினர் ஒரு பெரிய இலக்கை அடைய எத்தனிக்கிறார்கள் என்ற உண்மையை மறுக்கவோ மழுப்பவோ இயலாது. இலங்கையின் அரசியல் வரலாற்றில், இந்தக் கூட்டுறவின் மூலம் தம்மை அதிகார ஆற்றல் உள்ளவர்களாக ஆக்கிக்கொண்டுள்ளனர் என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மையாகும். எத்தகைய அரசியல் பின்னணி உள்ளவர்கள் ஒன்று சேர்ந்துள்ளார்கள் என்பதைப் பார்க்க வேண்டியது அவசியமாகும்.

### ஏப்ரல் புரட்சி

1971ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சேகுவேரா இயக்கம் நடத்திய புரட்சி படுதோல்வியைத் தழுவியது. காரணங்கள் பலவாக இருந்தாலும் சிறுபான்மை இனத்தவர்களை அவர்கள் ஒன்று திரட்டத் தவறியிருந்தனர். இடதுசாரி



புரட்சி இயக்கங்களுக்கு இருக்க வேண்டிய அனுபவ முதிர்ச்சி இல்லாததுடன் சிறுபிள்ளைத்தனமான சிந்தனையைக் கொண்டிருந்தனர்.

இதற்கு ஒரு சிறு உதாரணத்தை மட்டும் தொட்டுக் காட்டுவது போதுமானதாகும். களத்தாவலை மற்றும் லக்சபான நீர்த் தேக்கங்களில் மயக்க மருந்தை கலப்பதன் மூலம் அரசையும் அரச இயந்திரங்களையும் ஒரே நாளில் முடக்கிவிடலாம் எனத் திட்டமிட்டு இருந்தனர்.

கியூபாவில் பலதரப்பட்ட அரசியல பொருளாதார முரண்பாடுகளையும் ஒடுக்குமுறைகளையும் பலவீனமான அரசியல் யந்திரத்தையும் ஒழுக்கம் கெட்ட இராணுவத்தையும் கொண்டு இருந்த 'பற்றிஸ்டாவின் ஆட்சியை சேகுவேராவாலும் பீடல் கஸ்ரோவாலும் ஓரிரவில் விழுத்த முடிந்திருந்ததா?

இலத்தீன் அமெரிக்கப் போராளிகளிடமிருந்து இலங்கையின் சேகுவேரா இயக்கத்தினர் போதுமான படிபினைகளைக் கற்றுக்கொள்ளத தவறி இருந்தனர்.

தென்னிலங்கையின் சில பகுதிகளில் இவர்களது திடீர் முன்னேற்றம ஒரு மாயையை ஏற்படுத்தி இருந்ததாகக் கூறப்பட்ட பொழுதும் நிலைமை மிக மோசமாகவே இருந்தது. அரச ஊழியர்களின் சம்பளங்களை வழங்க இயலாத அளவிற்கு அரசு ஆட்டம் கண்டு இருந்தது. மட்டக்களப்புக் கடலில நிலைகொண்டிருந்த கடற்படைக கப்பலில் அப்போதைய பிரதமர் - தற போதைய ஜனாதிபதியின் தாயார் - அடைக்கலம் தேடிய நிலையிலும் நிலைமை ஜே.வி.பியினருக்கு சாதகமாக அமையவில்லை.

கட்டுநாயக்க விமான நிலையத்தை சுற்றி எண்ணூறு இந்திய இராணுவத்தினர் குவிக்கப்பட்ட நிலையில் ஏழை விவசாயிகள், தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த சிங்கள இளைஞர்களும் யுவதிகளும் வேட்டையாடப்பட்டனர். திறந்த ஜீப் வண்டிகளிலே பகிரங்க வீதிகளில் நிர்வாணமாக ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டனர்.

கூட்டம்கூட்டமாகச் சுட்டுக் கொல்லப்பட்ட இவர்கள் ஆறுகளில் உள்ள கபரக்கொய்யாக்களுக்கும் முதலைகளுக்கும் இரையாக்கப்பட்டனர். இதை ஜே.வி.பியினர் இலகுவில் மறந்திருக்கமுடியாது. சேகுவேரா இயக்கத்தின் இரண்டாவது எழுச்சிக் காலத்தில் 'ரயர்' போட்டுக்கொழுத்தும் கலாசாரம் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்பொழுதும் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களும் ஏதுமறியாத சிங்கள பொதுமக்களும் கிராமங் கிராமமாக அழிக்கப்பட்டனர், படுகொலை செய்யப்பட்டு சுட்டெரிக்கப் பட்டனர்.

### ஜே.வி.பியின் வரலாற்றுத் தவறு

இந்த நேரத்தில் இந்தியப்படையினர் இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் நிலைகொண்டு இருந்தமை இலங்கை இராணுவத்திற்கு ஒரு வாய்ப்பாகப் போய்விட்டது. தெறகிலும் வடக்கிலும் சிங்கள, தமிழ் இளைஞர்களையும் யுவதிகளையும் ஏதோஒரு வகையில் மறைமுகமாகவும் நேரடியாகவும் படுகொலை செய்யக்காரணமான அந்த நாட்டு இராணுவத்தை புதிய 'ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை' உருவாக்கி இவர்கள் மீண்டும் ஒருமுறை வரவேற்கத் தயாராக இருப்பது மாபெரும வரலாற்றுத் தவறாக அமைந்துவிடப் போகிறது.

இரகசியத் தகவலை அடுத்து மலையகத்தில் மறைந்திருந்த ரோகண விஜயவீர கைதுசெய்யப்பட்டதும் ரஞ்சன் விஜயரத்தினவின் முன் கொண்டு போய் நிறுத்தப்பட்டதும் காலால் உதைபட்டதும் தனது குழந்தைகளுக்கு ஒன்றும் செய்து விடாதீர்கள் என்று அவர் மன்றாடியதும் எந்தவித விசாரணைகளும் இன்றி அப் போதைய ஜனாதிபதிக்குக் கூட தெரியாமல் சுட்டுக் கொல்லப்பட்டதும் சேகுவேரா - (ஜே.வி.பி.) இயக்கத் தினர் சந்தித்த சோக நாடகத்தின் உச்சக்கட்டமாகும்.

அடுத்தடுத்து அந்த இயக்கத்தின் அடுத்த தலைமைகள் குறிவைக்கப் பட்டதும் மூத்த தலைவர்களில் எஞ்சி இருந்த சோமவன்ச அமரசிங்க நாட்டை விட்டு உயிர்தப்பி ஓடியதும் அந்த இயக்கம் அநாதையாகி அரசியல் நீரோட்டத்தில் அள்ளுப்பட்டதும் பழைய கதை.

இன்று ஜே.வி.பி. கட்சியுடன் ஜனாதிபதியின் சுதந்திரக்கட்சி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. எரியும் பிரசசினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் முரண்பாடான எதிரும் புதிருமான கருத்துக்களைக் கொண்ட இரு தரப்பும் அவற்றை அப்படி இந்தக்கூட்டில் குமாரணதுங்கவின் படுகொலைச் சம்பவமும் அடிபட்டுப்போய்விட்டது.

இது ஒரு வரலாற்றுத் திருப்புமுனை என்று அவர்கள் கூறுகிறார்கள். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் செயலாளருடன் 16 நாடாளுமன்ற அங்கத்தவர்களை மட்டும் கொண்ட கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா ஒப்பந்த கையெழுததிட்டதும் லண்டனில் இருந்து சோமவன்ச நாடு திரும்பியதும் மற்றவர்கள் தெரிவிக்காத கருத்துக்களை தெரிவித்து சமாதான நடவடிக்கைகளை நிராகரித்தமையும் ஒருபுதிய வரலாற்றுத் திருப்புமுனையாகி விட்டதென்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதே.

'புரிந்துணர்வு ஒப்பந்தம் எப்பவோ இறந்துவிட்டது' போன்ற லக்ஷ்மன் கதிர்காமரின் பேச்சுக்களும் ஜே.வி.பியினரின் தமிழர் விரோதப்போக்கை சுதந்திரக் கட்சியினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதையே மறைமுகமாக உணர்த்துகிறது.

இலங்கையின் அரசியலை இது வரை இனவிரோத வகுப்புவாத சிந்தனைகளும் கோஷங்களுமே வழிநடத்திவந்துள்ளன என்பதை ஜே.வி.



பியினர் நன்கு அறிவர். இந்த ஒப்பந்தத்தால் தென் இலங்கையில் யார் நன்மையடையப் போகிறார்கள் என்பதை உடனடியாகக் கூற இயலாததென்றாலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு மட்டும் தூரம் தொலைவிற்கு பின்தள்ளப்படப்போகிறது. தன்னை ஒரு பாரிய அரசியல் சக்தியாக மாற்ற ஜே.வி.பி. வியூகங்களை அமைத்து வருகின்றதென்பதை நிராகரிப்பதற்கில்லை. இனவாதமே அதறகான வழியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

கை.பேரின்பநாயகம்

இனமுரண்பாடுகளை வளர்த்தெடுககும் இனவாதத்தை அதுகக்க ஆரம்பித்துள்ளது.

யுத்த வடுக்கள் சற்று ஆறிய நிலையில் இந்திய, அமெரிக்க ஆதரவைப் பயன்படுத்தி தமிழருக்கெதிரான போக்கை வளர்த்தெடுப்பதில் சோமவன்சவும் கூட்டாளிகளும் வெற்றியடைவார்களாயின் எதிர்வரும் தேர்தல் முடிவில் சுதந்திரக் கட்சியில் உள்ள கடும் கோட்பாட்டாளர்களைத தம் பக்கத்தில் சேர்த்துக் கொள்ளக் கூடும்.

### இனவாதிகள் அணி திரள்வர்

சம்பிக ரணவக்க போன்ற இனவாதிகளின் பக்கத்தில் இருந்து ஆதரவாளர்களைத் திரட்டுவது அவர்களுக்குப் பெரிய வேலையாக இருககாது. ஏனைய இடதுசாரி சோஷலிச கட்சிகளின் இளந்தலைமுறையினரை ஏற்கனவே தம்பக்கத்திற்குக் கொண்டு போய்ச்சேர்த்துள்ளனர் இந்தக் கட்சிகள். கடந்த தேர்தலில் நியமன அங்கத்தவர் பதவியை மட்டும் பெறும் அளவிற்கு ஜீரணித்துப்போய் உள்ளன.

இவர்கள் (ஜே.வி.பி) பேசும் இனவாதமும் ஒற்றையாட்சிக்குள் முன்வைக்கும் தீர்வும் முஸ்லிம் தரப்பினரை ஆறுதல்ப்படுத்துமாயின் வாக்கு வங்கியை கொஞ்சமாவது அதிகரித்துக் கொள்ளமுடியும். அந்தத் தரப்பு இவர்களது பக்கம் சாயவும் கூடும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# வர்த்தகத் துறையில் ஒழுக்கத்தை பேணுவதிலேயே அந்நியர் ஆர்வம்!

## நேரடியாகப் பெற்ற அனுபவத்தை விளக்குகிறார்கள் "வாசனா ட்ரேடர்ஸ்" அதிபர்கள்



ரி.என்.எல். தொலைக்காட்சியில் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர் நிகழ்ச்சியில் "வாசனா ட்ரேடர்ஸ்" நிறுவன அதிபர்கள் கடந்த 10ஆம் திகதி தோன்றித் தங்களின் தொழில முன்னேற்றம் பற்றி விவரித்தனர்.

பிரபல வாகன இறக்குமதி நிறுவனமான "வாசனா" உரிமையாளாகளான ஆசிரி மெரின்சிகே - சம்பத் மெரின்சிகே சகோதரர்கள. வர்த்தகத் துறையில் ஒழுக்கத்தைப் பேணினால் முன்னேற்றம் நிச்சயம் என்று வலியுறுத்தினார்கள்.

ரி.என்.எல். தொலைக்காட்சியில் அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்கிரமவும், 113 கம்பெனிகளைக் கொண்ட சிலிங்கோ குறுப்பின் அதிபரும், நிர்வாகப் பணியாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்.

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

**வர்த்தக ஸ்பெஷல்**

*கேள்வி:* வாகன இறக்குமதி வர்த்தகத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டதற்கான காரணம் மற்றும் அதன் ஆரம்பம் பற்றியும் விளக்குவீர்களா?

*பதில்:* இந்த வியாபாரத்தைத் தேர்ந்தெடுப்பதற்குக் காரணகர்த்தாவே எமது தகப்பனாராவார். அவர் ஹோட்டல் துறையிலும் பழைய வாகனங்களை வாங்கித் திருத்தி வடிவமைத்து விற்கும் வியாபாரத்திலும் ஈடுபட்டு வந்தார். தகப்பனார் இறந்த பிறகு அந்த வியாபாரத்தில் நாம் நேரடியாக சம்பந்தப்படவேண்டிய நிலை உருவாகியது.

இந்த நிலையில், பழைய வாகனங்களுக்கு உதிரிப்பாகங்களை மொத்த விற்பனை நிலையங்களில் வாங்கி விற்பது என்று ஆரம்பித்த நாம், அந்த உதிரிப்பாகங்களை நாமே இறக்குமதி செய்தால் என்ன என்று யோசித்துப் பார்த்தோம். அதன்படி சந்தையில் மிகவும் கிராக்கியான உதிரிப்பாகங்களில் குறிப்பிட்ட ஒரு தொகையை மட்டும் இறக்குமதி செய்வது என்று தீர்மானித்தோம்.

அதற்கு ஒரு வங்கியின் அனுசரணை தேவைப்பட்டது. நாம் முதன் முதலாக 1995ஆம் ஆண்டு "செலான்" வங்கியின் வத்தளை கிளைக்குச் சென்றோம். அதன் முகாமையாளர் எமது வியாபாரம் தொடர்பாகக் கலந்துரையாடிய பின்னர், எமக்கு அவர் உதவுவதாக உறுதியளித்தார். அதன்படி எமக்கு ஊக்கமளித்து உதவினார். எமது வியாபாரம் பெருகியது. இன்று நாம் வாகனங்களை ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யும் அளவுக்கு உயர்ந்துள்ளோம்.

*கேள்வி:* இலங்கைக்கும் ஜப்பானுக்குமிடையிலான பல வர்த்தக ஒப்பந்தங்களும் அதைப்போல போட்டி வியாபாரமும் நடைபெறுகின்றன. இதில உங்கள் துறையை எப்படி வளப்படுத்திக் கொண்டீர்கள்? இவற்றில் உள்ள வித்தியாசம் என்ன?

*பதில்:* வர்த்தகத் துறையில் ஈடுபட்டிருக்கும் ஜப்பானியர்கள் நேர்மைக்கு முக்கியத்துவம் வழங்குவார்கள். வியாபாரத்துறையில் ஒழுக்கம் நிறைந்தவர்களை விரும்புவார்கள். தமது கடமைக்கு முக்கியத்துவம் வழங்குவதை அவர்கள் பெருமையாக நினைக்கின்றனர். தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதிலும் விற்பனை செய்வதிலும் மிகவும் ஆர்வமாக இருப்பார்கள்.

நான் ஜப்பானில் இருந்தபோது இதை நேரடியாக அவதானித்தேன். ஆனால், அதே தரத்திற்கு, ஈடான வாகன உதிரிப்பாகங்கள் சீனாவிலும் தயாரிக்கப்படுகின்றன. சீனாவில் குறைந்த விலையில் தரமான பொருள்கள் இருக்கின்றன. நாம் சீனாவிலிருந்து மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களைக் கொண்டுவந்து இலங்கையில் வைத்து வடிவமைத்தோம். அது நல்ல வரவேற்பைப் பெற்றது.

*கேள்வி:* வாகனம் மற்றும் உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்வதை விட வேறு துறைகள் பற்றிச் சிந்திக்கவில்லையா?

*பதில்:* நாம் மோட்டார் சைக்கிள்களுக்குரிய உதிரிப்பாகங்களை இறககுமதி செய்து எமது நாட்டில் அவற்றை வடிவமைத்து விற்பனை செய்யும் போது எமது நாட்டில் உள்ள பலருக்கு அதன் மூலம் தொழில் வாய்ப்பும் ஆதாயமும் கிடைக்கும் என்ற ஒரு நோக்கத்துடன் பரீசித்துப் பார்த்தோம். அது ஒரு வெற்றிகரமான வியாபாரமாகவிருக்கும் என்பது புலனாகியது.

*கேள்வி:* இது போன்று வேறு திட்டங்கள் ஏதும் உங்களிடம் இருக்கின்றனவா? உங்கள் திட்டங்களுக்கு போட்டி, பொறாமை ஏற்பட்டுள்ளதா?

*பதில்:* நிறையவே உள்ளன. இலங்கையைப் பொறுத்தவரை போட்டியை விடப் பொறாமை கொண்டவர்கள் அதிகம். பல்வேறு சந்தர்ப்பங்களில் பல விடயங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலைகள் உருவாகியுள்ளன. எம்மிடம் சேவையாற்றும் ஊழியர்களிடமும் இது பற்றி நாம் தெரிவித்துள்ளோம். வர்த்தக நடவடிக்கைகளின்போது மற்றவர்களை விமர்சிப்பது தேவையற்ற விடயமாகும்.

*கேள்வி:* வாசனா ட்ரேடர்ஸ் நிறுவனத்தினரான நீங்கள் தற்போது சீனாவடமிருந்து மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றீர்களா?

*பதில்:* நாம் ஏற்கனவே இவ்விடயம் பற்றி ஆராய்ந்து உதிரிப்பாகங்களும் இறக்குமதி செய்து பரீட்சித்துப் பார்த்துவிட்டோம். சீனாவில் உள்ள கம்பனியுடன் நேரடித் தொடர்பை ஏற்படுத்தும் நடவடிக்கையில் இறங்கியுள்ளோம். இதேவேளை, அந்த மோட்டார் சைக்கிள்களுக்குரிய உதிரிப்பாகங்களும் இலகுவாகக் கிடைப்பதால் அந்த வியாபாரம் வெற்றிகரமாக அமையும் என நாம் நம்புகிறோம்.

தொடர்ந்து எமது வியாபார முயற்சிக்கு செலான் வங்கி உறுதுணையாக இருக்கவேண்டும். வத்தளையில் பிரதான அலுவலகம் உட்பட வியாபார மத்தியஸ்தாபனம் போன்றவற்றைக் கொண்டிருக்கும் நாம் பரவலாக எமது வியாபார நடவடிக்கையைத் தொடரவே விரும்புகிறோம்.

- இவ்வாறு ஆசிரி மெரின்சிகே - சம்பத் மெரின்சிகே சகோதரர்கள் தெரிவித்தனர். ★

## புண்ணிய நாச்சியம்மையார் தின பண்ணிசைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,பெப்.13

புண்ணிய நாச்சியம்மையாரின் குருபூசை தினத்தை முன்னிட்டு யாழ். சைவ பரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்ட இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற மாணவர்களின் பெயர், பாடசாலை விவரம் முறையே வருமாறு:-

**கீழ்ப்பிரிவு**

ஜனாதிபதி ஜெயச்சந்திரன் (யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), தே.வர்சினி (மகாஜனக் கல்லூரி), வி. தர்ஷனா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்).

**மத்தியபிரிவு**

சங்கீதா சந்திரகுமார் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), சுந்தரமூர்த்தி தசாங்கன் (யூனியன் கல்லூரி), ப.கீர்த்தனன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி).

**மேற்பிரிவு**

தெ.பானுஜா (வேம்படி மகளிர் கல்லூரி), ஜெ.வைஷ்ணவி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), குலேந்திரன் ஜெகதீசன் (யூனியன் கல்லூரி).

மேற்படி பண்ணிசைப் போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதன் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு முறையே தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம், வெண்கலப் பதக்கம் என்பன வழங்கப்படும் என சைவ பரிபாலனசபையின் தலைவரும், சபையின் பரீட்சைச் செயலாளருமான சைவப்புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 19ஆம் திகதி நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் புண்ணிய நாச்சியம்மையாரின் குருபூசைத் தினத்தில் வைத்து மேற்படி பதக்கங்களும் பரிசில்களும் வழங்கப்படும் என்றும் - அவர் அறிவித்துள்ளார். (எ)

## கட்டாக்காலி நாய்கள் தொல்லை அதிகரிப்பு

வடமராட்சி,பெப்.13

பருத்தித்துறை நகரப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை வெகுவாக அதிகரித்துள்ளது.

இப்பகுதியில் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கை நீண்டகாலமாக மேற்கொள்ளப்படவில்லை. இதனால் கட்டாக்காலி நாய்கள் பெருகியுள்ளன.

நகரப் பகுதியில் உள்ள பல இடங்களிலும் கட்டாக்காலி நாய்களைக் காணக்கூடியதாக இருக்கிறது.

கட்டாக்காலி நாய்களின் தொல்லையினால் இரவு மற்றும் அதிகாலை வேளைகளில் வீதிகளில் நடமாடுவோர் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. (ஒ-173)

## கல்வி. ஊக்குவிப்புப் பணமும் பரிசில்களும்

நவாலி,பெப்.13

நவாலி ஊன்றுகோல் அறப்பணியகம் கடந்த ஆண்டு நடத்திய தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த நவாலி சென் பீற்றேர்ஸ் றோ.க.த.க. பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்புக்கென பணமும் அன்பளிப்புக்களும் வழங்கிக் கௌரவித்துள்ளது.

இந்த நிகழ்வு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் க.நடேசன் தலைமையில் நடைபெற்றது.(எ-100)

## சிறுவர்களைப் பாடசாலை அனுப்ப நடவடிக்கை

வட்டுக்கோட்டை,பெப்.13

பாடசாலை செல்லாத சிறுவர்களைப் பாடசாலைக்கு அனுப்பிவைப்பதற்குரிய நடவடிக்கைகளை வட்டு. தெற்கு சமுர்த்தி செயலணி மேற்கொண்டுவருகின்றது.

பாடசாலையிலிருந்து இடை விலகிய மற்றும் பாடசாலை செல்லாத சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்புவதற்கும் இதுதொடர்பாகப் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் வட்டு. தெற்கு சமுர்த்தி செயலணி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (ஒ-161)

## உள்ளூர் உருளைக்கிழங்கு அறுவடை ஆரம்பமாகியது

அரியாலை,பெப்.13

யாழ். குடாநாட்டில் பயிரிடப்பட்ட உருளைக்கிழங்கை அறுவடை செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உருளைக்கிழங்கு அறுவடை ஆரம்பமாகியதை அடுத்து, சந்தைகளில் உள்ளூர் உருளைக்கிழங்கின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

திருநெல்வேலிச் சந்தையில் ஒரு கிலோ உள்ளூர் உருளைக்கிழங்கு 30 ரூபா முதல் 50 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

இதேசமயம் - குடாநாட்டு விவசாயிகள் இம்முறை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உருளைக்கிழங்கைச் செய்கை பண்ணியமை குறிப்பிடத்தக்கது. (எ-17)

## விவசாயப் பிரதிநிதி ஒருவரையும் வேட்பாளர் பட்டியலில் சேர்க்குக!

### கூட்டமைப்பிடம் சம்மேளனம் கோரிக்கை

வலிகாமம்,பெப்.13

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கூட்டமைப்பின் சார்பில் ஒரு விவசாயப் பிரதிநிதியும் போட்டியிட ஏற்பாடு செய்யுமாறு மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தினர் கூட்டமைப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக விவசாயிகளின் பிரச்சினைகள் பற்றி நாடாளுமன்றத்தில் எடுத்துக்கூறி தீர்வு காணக்கூடிய வகையில் விவசாயம் தொடர்பான அங்கத்தவர்கள் எவரும் தெரிவுசெய்யப்படவில்லை.

எனவே, இம்முறை நடைபெற உள்ள பொதுத்தேர்தலில் விவசாயம் சார்ந்த பிரதிநிதி ஒருவரையும் வேட்பாளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என தமது கோரிக்கையில் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (எ-152)

## முற்றவெளியில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையம் புனரமைக்கப்படும்

### பிராந்திய முகாமையாளர் உறுதிமொழி

அரியாலை,பெப்.13

யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்திருக்கும் யாழ். முற்றவெளியில் உள்ள யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையம் விரைவில் புனரமைக்கப்படும் ஏன்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ் .பிராந்திய முகாமையாளராகப் பொறுப்பேற்றிருக்கும் வி.சண்முகநாதன் உறுதிமொழி வழங்கியுள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை மேற்படி எரிபொருள் விற்பனை நிலையத்திற்கு விஜயம் செய்த அவர், நிலையத்தின் குறைபாடுகளைக் கேட்டறிந்ததுடன் சேதமடைந்த கட்டடத்தொகுதியையும் பார்வையிட்டார்.

எரிபொருள் நிலையத்தை விரைவில் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் அப்போது உறுதிமொழி வழங்கினார். - எனக் கூறப்பட்டது.

இதேசமயம் - குடாநாட்டில் இயங்கும் ஏனைய எரிபொருள் விற்பனை நிலையங்களையும் முகாமையாளர் வி.சண்முகநாதன் நேரில் சென்று பார்வையிட்டு வருவதாகக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-17)

## சட்டத்தரணிகள் சங்க நிர்வாகிகள்

வடமராட்சி.பெப்.13

பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராக சட்டத்தரணி சபா ரவீந்திரனும், செயலாளராக சட்டத்தரணி பொ.குமாரசாமியும், பொருளாளராக சட்டத்தரணி திருமதி உ.விஜியராணியும் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-173)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



காரைநகர் யா/யாழ்ற்றன் கல்லூரி மாணவனும், சபாரத்தினசர்மா - லலிதாம்பாள் தம்பதிகளின் மகனுமாகிய

செல்வன்

## ச.ராகவன்

அவர்கள் 2003ஆம் ஆண்டு ஐந்தாம தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 133 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந் தமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேன்மேலும் கல்வியில் சிறப்படைய எல்லாம்வல்ல விநாயகப்பெருமானை வேண்டுகிறோம்.

கமலநாதன் (மாமா),
ஹேமா (அத்தை),
ஷோபனா, திவ்யா, துவாரகன்.

"சிவதர்ஷன்",
194, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(28409)(34)



# தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் கலர் லாப் ஒன்றிற்கு டெவலப்பிங் - பிரிண்டிங் வேலை செய்வதற்கு வேலையாள்கள் தேவை.

பூரண சுயவிவரத்துடன் சொந்தக் கையெழுத்தில் அடையாள அட்டையின் போட்டோ பிரதியுடன் விண்ணப்பிக்கவும்.

**விள.இல - 2164**
**மே/பா உதயன்,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(28408) (34-21-19-12)



*வடக்கு – கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும்*

## நாடகப் போட்டியும் நாடக விழாவும்

மேற்படி நாடகப் போட்டியும், நாடக விழாவும் எதிர்வரும் ஏப்ரல் நடுப்பகுதியில் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ளன. இப்போட்டியில் பங்குபற்றவுள்ள பாடசாலைகள், நாடக மன்றங்கள், குழுக்கள், அமைப்புகள் என்பன இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கு கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

உதவிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி அமைச்சு, திருகோணமலை.
போட்டிக்கு விண்ணப்பிக்கும் இறுதித் திகதி: 29-02-2004
தொலைபேசி இல. 026 22 20036

(சி-33240) (19-21-12)



# THE BARBARA MULVANEY
## Computer Training Centre
*123, Temple Road, Jaffna*

### உலக இணையத்துடன்

குறைந்த கட்டணத்தில் பலமணி நேரங்கள் ..........
பல்வேறுபட்ட நேரஆயிடைகளில் .....

அனைத்துத் தரப்பினரும் Internet வசதியைப் பெறும் நோக்கில் மிகவும் குறைந்த கட்டணத்தில் பல்வேறுபட்ட நேர ஆயிடைகளில் நீங்கள் பங்குதாரராக இணைந்து நிறைந்த சேவையை பெற்றிடலாம்.

**பகல் 12 மணி முதல் 2 மணிவரை**

| மொத்தத்தொகை | பாவனைக்காலம் | மணித்தியாலத்துக்கு - ஆகும் செலவு |
|---|---|---|
| 200/= | 10 மணித்தியாலம் | 20 /= மட்டுமே |

**மாலை 5 மணி முதல் 7 மணிவரை**

| மொத்தத்தொகை | பாவனைக்காலம் | மணித்தியாலத்துக்கு ஆகும் செலவு |
|---|---|---|
| 175/= | 5 மணித்தியாலம் | 35 /= மட்டுமே |
| 300 /= | 10 மணித்தியாலம் | 30/= மட்டுமே |

**மாலை 7 மணி முதல் 9 மணிவரை**

| மொத்தத்தொகை | பாவனைக்காலம் | மணித்தியாலத்துக்கு ஆகும் செலவு |
|---|---|---|
| 125/= | 5 மணித்தியாலம் | 25 /= மட்டுமே |
| 225 /= | 10 மணித்தியாலம் | 22.50/= மட்டுமே |

இச்சலுகை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வழங்கப்படவுள்ளது.

மாணவர்களே கணனி மூலம் Chess வகுப்புக்கள் எதிர்வரும் 22ம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. ஆர்வமுடைய மாணவர்கள் இதில் கலந்துகொள்ளவும்.


## பொருட்காட்சி

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவின் மாதர் அபிவிருத்தி நிலைய தையல் மனையியல் பொருட்காட்சி நாளை காலை 10 மணிக்கு யாழ்நகர் மேற்கு சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் அமைந்துள்ள மாதர் அபிவிருத்தி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது. இந நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயம்போல் கலந்துகொள்வார்.(ம-10)

## பெரும் வலுவான....

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த தேர்தலில் ஜே.வி.பியின் கை உயர்ந்து நிற்குமாயின் தமிழர் தரப்புக்கோரி நிற்கும் அதிகாரப் பகிர்வை (Devolution) வழங்குவர் என நம்ப இயலாது. அதிகாரப் பரவலாக்கத்தை (Decentralization) சுதந்திரக்கட்சியினர் உச்சரித்தபோதும் நியாயமான உரிமைகளை வழங்குவர் என்பது விசித்திரமான கற்பனையே. புதிய கூட்டணி தமிழர் அபிலாஷைகளை நிறைவேற்றப்போவதில்லை. கடந்த கால சம்பவங்களை நோக்கும்பொழுது ஒப்பந்தங்கள் செய்வதும் எதிர்தரப்பினர் எதிர்த்ததும் அதைச்சாட்டாக வைதுக்கொண்டு கிழித்தெறிந்ததே அன்றி வசமாகச் செயற்பட்டதாக வரலாறுகளில்லை. தென்னிலங்கைக் கட்சிகள் 'அப்பேஆண்டுவ' கோசத்தை தூக்கிஎறியத் தயாராக இருந்ததில்லை என்பதே தமிழர் கண்ட கசப்பான அனுபவங்களாகும்.

பேச்சுக்கள் காலத்திற்குக்காலம் நடந்துதான் உள்ளன. ஆனால், பருப்பை அவியவிடுவது அவர்களது வேலையாக இருக்கவில்லை.

### வெளிநாட்டு ஆதிக்கம்

மேலாதிக்க சிந்தனையாளர்களிடமிருந்து உதவி ஒத்தாசை பெறுவதுடன் நின்றுவிடாது வெளிநாட்டுப் படைகள் இங்கு காலூன்றிவிடவும் தயாராக உள்ளனர். பேச்சு ஒருபுறம் இருக்க தென் இலங்கையின் இரு பிரதான கட்சிகளும் தமிழருக்கு எதிரான ஒரு பாதுகாப்பு வலைப்பின்னலை ஏற்படுத்தியே வந்துள்ளன. இராணுவச் சமநிலையை குலைக்கும் நடவடிக்கையில் இரு தரப்பும் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை தெளிவானதாகும்.

இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம், திருமலையின் எண்ணைக்குத உடன்பாடு, கொழும்புத்துறைமுக ஒப்பந்தம், பாக்கு நீரிணையின் கூட்டு கடற்படை ரோந்து, வடபகுதியில் சீன ரோலர்களின் மீன்பிடி, இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் அனைத்தும் இலங்கைத் தமிழர்களின் இருப்பிற்கும், அபிலாசைகளுக்கும் சாவுமணி அடிக்கும் நோக்கம் கொண்ட ஏற்பாடுகளாகும்.

தமிழர் தரப்பின் இன்றைய நிலை வேறானது, வலுவான இராணுவப்பலத்துடன் உறுதியான சமாதானத்திட்டத்தை முன்வைத்து உள்ளனர். சமநிலை குலையாதவாறு பாதுகாத்துக்கொள்ள, தமது தரப்பை வலுப்படுத்த தமிழ்க்கட்சிகளும், குழுக்களும் வேற்றுமைகளை மறந்து ஒற்றுமைப்பட வேண்டியகாலத்தின் கட்டாயத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். உணர்வார்களா? ஒற்றுமைப்படாத எந்த ஒரு தேசிய இனமும் விடுதலை பெற்றதாக சரித்திரம் இல்லை.

இந்த நேரத்தில் சர்வதேச சமுகம் என்னசெய்யப்போகின்றது? தமிழர் சுதந்திரமாக வாழ்வது தொடர்பாக எதை சிந்திக்கின்றது. கௌரவத்துடன கூடிய சமாதானத்தை ஈழத்தமிழர் எதிர்பார்க்கின்றார்கள் என்பதை சர்வதேசங்கள் எந்தளவிற்குப் புரிந்துள்ளன? எமது நிலையை எந்தளவிற்கு நாங்கள் தெளிவுபடுத்தி உள்ளோம்? சிங்களதேசம் எமதுஉரிமைகளை பலப்பிரயோகத்தின் மூலம் எவ்வாறு அடக்கி ஒடுக்கித் தட்டிக்கழிக்க முனைகிறது என்பதை வெளி உலகிற்கு நாம் எந்த அளவிற்கு சொல்லி வைத திருக்கின்றோம் என்பதை சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

அவ்வாறான ஒரு நிலையில் ஒரேமுகமாக நின்றுதான் சமாதான நடவடிக்கைகளில் ஏற்படுத்த இருக்கும் தாக்கங்களை எதிர்கொள்ள முடியும் - நடக்குமா? *


## ஆசிரியர் தேவை

ஊரெழுவில் பலாலி வீதியிலுள்ள கலைமதி கல்வி நிலையத்தில் தரம் 9 முதல் தரம் 11 வரை தமிழ் மற்றும் சமூகக்கல்வி ஆகிய பாடங்கள் கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை.

*ஆர்வமுடையோர் நாளை 14.02.2004 சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நேரில் வரவும்.*

நிர்வாகி,
கலைமதி கல்வி நிலையம். ஊரெழு.

(34-21-12-18) (C/33238)



# ஆங்கில வகுப்புகள்

G.C.E. O/L, A/L, பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆங்கில வகுப்புகள்

ஆரம்பம் : 14.02.2004 சனிக்கிழமை
இடம் : "லூட்ஸ் ஆங்கில போதனை" 'ராஜ் வாசா'
கீரிமலை வீதி,
அந்தோனியார் ஒழுங்கை, பண்டத்தரிப்பு.

*விரும்புவோர் முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும.*

(28399) (21-12-19-32)


# நீங்காத நினைவுகளுடன்
# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் Dr.கந்தையா பாலசிங்கம்

(பிரசன்னா வைத்திய நிலையம்)

தோற்றம் 28-05-1931 | மறைவு 15-02-2001

அட்டமித் திதி - 13-02-2004

ஆண்டுகள் அடுத்து வரும்
அது ஓடி மறைந்து விடும்
உங்கள் நினைவுகள் நித்தம் வரும்
எங்கள் மனதை சுட்டுவிடும்!

அப்பா, கனவுகள் நனவாகும்
காலமது தூரமில்லை
கண்டு மகிழ்வு கொள்ள
அப்பா நீங்கள் அருகில் இல்லை!

உங்கள் ஆசி வேண்டும்,
அன்புக் குழந்தைகள் நாம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
அனுதினமும் பிரார்த்திக்கின்றோம்.

15. பேரின்பநாயகம் வீதி.
கச்சேரியடி.
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவில் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள்.**

(28415)(21-12-19-37)

# மரண அறிவித்தல்

## திருமதி தேவகுஞ்சரம் கோபாலசாமி

(குஞ்சரம் அக்கா)

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவகுஞ்சரம் கோபாலசாமி அவர்கள் நேற்று (12.02.2004) வியாழக்கிழமை சிவபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலசாமி அவர்களின் பாசமிகு துணைவியாரும் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை, காலஞ்சென்ற அப்புசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராதாமணி (கனடா), ஜெயபாலன் (கனடா), சற்குணபாலன் (மக்கள் வங்கி முகாமையாளர்), தேவிகாரமணி (இந்தியா), நந்தபாலன் (ஜேர்மனி), காலஞ்சென்ற முகுந்தபாலன், வனிதாரமணி (கனடா), ரஞ்சிதாறமணி (வல்வை), லலிதாரமணி (வல்வை), சசிகலா (இத்தாலி), சாந்தினி (ஜேர்மனி), சிறீதரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இராமச்சந்திரன் (தபால் அதிபர்), பத்மாவதி (கனடா), விஜயராணி (வல்வை), காலஞ்சென்ற ஜெயசோதிவேல், விஜயா (ஜேர்மனி), சிறிஸ்கந்தராஜா (கனடா), விநாயகமூர்த்தி (கப்பல் கப்டன்), சத்தியமூர்த்தி (வல்வை), நேசன் (இத்தாலி), நடராஜலிங்கம் (ஜேர்மனி), வரதலட்சுமி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் செந்தில்குமரன் (கனடா), பழனிக்குமரன் (ஆஸ்திரேலியா), றஞ்சித் (கனடா), விஜித் (கனடா), மயூரன் (கனடா), உமாசங்கர், ரவிசங்கர், கிருத்திகா, கஸ்தூரிகா, குகானந்தன் (லண்டன்), சங்கீதா (இந்தியா), அன்பரசி (இந்தியா), குகநேசன் (இந்தியா), வினோத் (ஜேர்மனி), பிரதீபன் (கனடா), சிவரஞ்சினி (கனடா), பார்த்தீபன் (கனடா), காலஞ்சென்ற யாசோதினி, யாழினி (வல்வை), தர்சினி (வல்வை), பாலரஞ்சன் (வல்வை), தமிழினி (வல்வை), அனுஷா (வல்வை), நித்தியா (வல்வை), சந்திரா (இத்தாலி), தினேஸ் (ஜேர்மனி), தீபிகா (ஜேர்மனி), ராகுல் (ஜேர்மனி), திவாகர் (ஜேர்மனி), சுகன்யா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் A.G.A. ஒழுங்கை, வல்வெட்டித்துறையிலுள்ள அவரின் இல்லத்தில் நாளை (14.02.2004) சனிக்கிழமை நடைபெற்றுத், தகனக் கிரியைகளுக்காகப் பூதவுடல் காலை 9.00 மணியளவில் ஊறணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

A.G.A. ஒழுங்கை,
நெடியகாடு, வல்வெட்டித்துறை.
T.P.: 021-2264037. (28411)(26-21-19-12)

கோ.சற்குணபாலன் (மகன்)
(முகாமையாளர், மக்கள் வங்கி,
ஊர்காவற்றுறை).

# உறவையும் பண்பாட்டுத் தொடர்பையும் சிதைக்கும் பாதைத் தடை!

**செய்திக்கட்டுரை**

**வடமராட்சி கிழக்குச் செய்தியாளர்.**

அரசுக்கும் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து ஏ-9 பாதை திறக்கப்பட்டமையால் குடாநாட்டு மக்கள் ஏனைய மாவட்டங்களுக்குச் சென்றுவரக் கூடிய போக்குவரத்துப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வுகிடைத்துள்ளது.

மணற்பிரதேசத்தையும் நீர் வழிப் பாதையையும் கடந்து கொம்படியினாலும், உயிரினைக் கையில் பிடித்துக்கொண்டு கிளாலிக் கடல்நீரேரியினாலும் பயணம் செய்த மக்கள் சொகுசு பஸ்களிலும் ஏனைய வாகனங்களிலும் ஏ-9 பாதையூடாக இன்று பிரயாணத்தை மேற்கொண்டு வருகின்றார்கள்.

ஆனால், குடாநாட்டுக்குள் இருக்கும் வடமராட்சி கிழக்குப் பிரதேசம் நாகர்கோவில் உயர் பாதுகாப்பு வலயத்தால் துண்டாடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. தமது பிரதேசத்துக்குள்ளேயே அந்த மக்கள் சுதந்திரமாக நடமாடமுடியாத நிலை உளளது.

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவு 18 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவற்றில் 10 கிராமசேவையாளர் பிரிவுகள் நாகர்கோவில் உயர் பாதுகாப்பு வலயத்திற்குக் கிழக்கேயும் 5 கிராம சேவையாளர் பிரிவுகள் நாகர்கோவில் உயர் பாதுகாப்பு வலயத்திற்குக் மேற்கேயும் காணப்படுகின்றன. நாகர்கோவில் கிழக்கு, நாகர்கோவில் மேற்கு, நாகர்கோவில் தெற்கு ஆகிய மூன்று கிராம சேவையாளா பிரிவுகள் நாகர்கோவில் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அகப்பட்டிருப்பதனால் மக்கள் அங்கு வாழ முடியாத நிலை காணப்படுகின்றது.

1991 இடப்பெயர்வுக்கு முன்னர் வல்லிபுரம் வலிக்கண்டிலிருந்து சுண்டிக்குளம் வரையுள்ள 54 கிலோ மீற்றர் நீளமான பாதையினை நாகர்கோவில் ஊடாகப் பொதுமக்கள் பாவிக்கக்கூடியதாக இருந்தது. தற்போது நாகர்கோவில் உயர் பாதுகாப்புப் பிரதேசத்தினூடாக பாதை பாவனைக்குத் தடைசெய்யப்பட்டிருப்பதனால் நாகர்கோவில் உயர்பாதுகாப்பு வலயத்திற்கு மேற்கேயுள்ள கிராமங்களில் உள்ள மக்கள், நாகர்கோவில் உயர் பாதுகாப்பு வலயத்திற்கு கிழக்கேயுள்ள கிராமங்களுக்குச் செல்ல சுமார் 80 கிலோ மீற்றர் தூரம் பயணிக்கவேண்டியுள்ளது. முகமாலை ஊடாகப் பெருஞ்சிரமங்களின் மத்தியில் பிரயாணஞ்செய்ய வேண்டியுள்ளது.

வடமராட்சி கிழக்கின் உதவி அரச அதிபர் பணிமனை உட்பட முக்கிய அரச அலுவலகங்கள், வடமராட்சி கிழக்கின் கேந்திர நிலையமான மருதங்கேணியிலேயே அமைந்துள்ளன. இதனால், நாகர்கோவில் உயர் பாதுகாப்பு வலயத்திற்கு மேற்கேயுள்ள மணற்காடு, குடத்தனை, பொற்பதி, குடத்தனை வடக்கு, அம்பன் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது அன்றாட கருமங்களை நிறைவேற்றுவதற்காகக் கூடிய நேரத்தைச் செலவழித்து நீண்டதூரம் முகமாலை ஊடாகப் பயணஞ்செய்ய வேண்டியுள்ளது.

நாகர்கோவில் உயர்பாதுகாப்பு வலயத்திற்குக் கிழக்கேயுள்ள மருதங்கேணிப் பிரதேசத்தில் மீளத் திறக்கப்பட்டுள்ள 11 பாடசாலைகள், உதவி அரச அதிபர் பணிமனை உட்பட ஏனைய அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றில் கடமை புரிகின்ற நூறுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள், ஏனைய அலுவலர்கள் பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய இடங்களிலேயே வசிப்பவர்களாக உள்ளார்கள். இவர்களும் தமது கடமைகளுக்கு முகமாலை ஊடாகவே பிரயாணஞ்செய்ய வேண்டியுள்ளது. அவர்கள் கடமை புரிகின்ற இடங்களில் யுத்த அனர்த்தத்தின் காரணமாக வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. இதனால், அவர்கள் தங்கியிருந்து கடமைபுரிவதிலும் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அதேவேளை, அவர்கள் உரிய நேரத்தில் கடமைக்குச் செல்வதற்குக்கூடப் போக்குவரத்து வசதிகள் இல்லை. இதனால், அப்பகுதியில் கடமைபுரிவதற்கு ஊழியர்கள் பின்னடிப்பதனையும் வருவோர் முழுமையான சேவையினை வழங்க முடியாத நிலைமையையுமே காணமுடிகிறது. இதனால், பெரும் பாதிப்பினை அப்பிரதேச மக்களே எதிர்நோக்க வேண்டியுள்ளது.

வடமராட்சி கிழக்கில் உள்ள மக்களும் வடமராட்சி மக்களும் உறவு ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும் பல வகைகளில் நீண்டகாலமாக ஒன்றுபட்டவர்கள். தற்போது அவர்கள் தமது உறவு, பண்பாடு அம்சங்களை வளர்த்துக் கொள்ள இப்பாதைத்தடை பெரும் இடையூறாக உள்ளதாக உணர்கின்றார்கள்.

முன்னர் மருதங்கேணி வைத்திய சாலைக்குச் செல்கின்ற நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காகப் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்குக் குறுகிய நேரத்தில் நாகர் கோவில் ஊடாக மருதங்கேணி - பருத்தித்துறை வீதியால் கொண்டுவரக்கூடியதாக இருந்தது. தற்போது இப்பாதை தடைசெய்யப்பட்டிருப்பதனால் நீண்டதூரம் முகமாலை ஊடாகப் பிரயாணஞ்செய்து வரும்போது, உயிராபத்துக்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

வடமராட்சி கிழக்கு 1991ஆம் ஆண்டுக்கு முன்னரும் யாழ்மாவட்டத்தில் வசதிகள் குறைந்த, பின்தங்கிய பிரதேசமாகவே காணப்பட்ட போதிலும் நாளொன்றிற்கு 10 போக்குவரத்துச் சேவைகள் நாகர்கோவில் ஊடாக மருதங்கேணி - பருத்தித்துறை வீதியால் பருத்தித்துறையிலிருந்து நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனவே, மருதங்கேணி - பருத்தித்துறை வீதி போக்குவரத்துக்குத் திறக்கப்படாதவரை வடமராட்சி கிழக்கு மக்கள் போக்குவரத்தில் எதிர்நோக்கும் கஷ்டம் தீரவாய்ப்பில்லை. அத்துடன், அப்பிரதேசத்தில் சமூக, பொருளாதார அபிவிருத்தியும் முழுமையாக நிறைவேற இப்பாதை விவகாரம் தடைக்கல்லாக உள்ளது. ✳

## மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வு

கிளிநொச்சி,பெப்.13

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் இயங்கும் வெண்புறா நிறுவனம் மற்றும் 'மைக்' நிறுவனம் என்பன இணைந்து வன்னிப் பிரதேசத்தில் வெடிபொருள்கள் தொடர்பான விழிப்புணர்வினை மக்களுக்கு ஏற்படுத்திவருகின்றன.

கிளிநொச்சி, மாங்குளம், ஒட்டுசுட்டான், கனகராஜன்குளம், நெடுங்கேணி, மாந்தை மேற்கு, மடு மற்றும் வடமராட்சி கிழக்கு போன்ற யுதத்ம் இடம்பெற்ற இடங்களில் மீளக் குடியமர்ந்த மக்கள் மத்தியில் இந்த விழிப்புணர்வு செயற்பாடு இடம்பெறுகிறது. (ம)

## 901 ஹெக்டேயர் நெற்பயிர்கள் மன்னாரில் அழிவு

மன்னார்,பெப்.13

மன்னார் மாவட்டத்தில் வறட்சி காரணமாக 901 ஹெக்டேயர் பரப்பில் நெற்செய்கை அழிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை பருவமழை குறைந்துள்ளது. இதனால், குளங்களில் நீர் மட்டம் குறைந்துள்ளது. பெருமளவு நிலப்பரப்பில் நெற்செய்கை பாதிப்படைய இதுவே பிரதான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-ரி)

## 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கதிரைகள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ்ப்பாணம் மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையத்திற்கு 50ஆயிரம் ரூபா பெறுமதியான கதிரைகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா இக்கதிரைகளை வழங்கியுள்ளார். (ம-ரி)



பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் கூத்து, இசை நாடக கிராமியக்கலைப் போட்டிகள் அண்மையில் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்றன. இந்தப் போட்டிகளின்போது சுகவீன முற்றுள்ள மரபுவழி நாடக மூத்த கலைஞர் சிவசுப்பிரமணியத்துக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் கோ.வேலாயுதபிள்ளை சக்கரநாற்காலி வழங்குவதைப் படத்தில் காணலாம். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இதனை வழங்கியிருந்தது. படத்தில் கழகச் செயலாளர் கலாபூஷணம் மெற்றாஸ்மயிலும் உள்ளார். (எ)

# மதங்களிடையேயான புரிந்துணர்வு மூலம் உன்னதமான சமூகத்தை உருவாக்க முடியும்

## யாழ். அரச அதிபர் கருத்து

யாழ்ப்பாணம்,பெப்.13

மதங்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவதன் மூலம் உன்னதமான சமுதாயத்தை உருவாக்க முடியும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன்.

மதங்களுக்கிடையே சமாதானத்தையும் இணக்கப்பாட்டையும் நிலைபெறச் செய்வதற்கான குழுக்களை அமைப்பதற்கான மாவட்ட மட்ட ஆலோசனைக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். செயலகத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மைக்காலமாக நாட்டின் தென்பகுதிகளில் இடம்பெற்று வரும் சமய வன்முறைகள் பற்றி பிரதமர் மிகுந்த கவலை கொண்டுள்ளார். சமாதானத்தைக் குழப்பும் வகையில் திட்டமிட்டுச் செயற்படும் சிலதீய சக்திகளின் இத்தகைய நடவடிக்கைகளைத் தடைசெய்யவேண்டும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட அரச அதிபர்களுக்குப் பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கமைய எமது மாவட்டத்திலும் இத்தகைய குழுக்களைப் பிரதேச ரீதியாக அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மாவட்ட மற்றும் பிரதேசமட்டங்களில் அப்பகுதிகளில் வாழும் மக்களைக்கொண்டு சமாதான சமய அமைதிக்குழுக்களை அமைப்பதன் மூலம் சமய இணக்கப்பாட்டினை ஏற்படுத்த முடியும் என உறுதியாக நம்பப்படுகின்றது.

அந்த அடிப்படையில் அப்பிரதேசங்களில் வாழும் மதத் தலைவர்கள் எமக்குப் பூரண ஆதரவை வழங்கவேண்டும். அதற்காகவே இந்த ஆலோசனைக் கூட்டம் கூட்டப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் இன்றைய சூழ்நிலை ஏனைய பகுதிகளைவிட வித்தியாசமானது. உளரீதியாகவும், ஏனைய வழிகளிலும் எமது மக்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை மேன்மையான நிலைக்குக்கொண்டு வருவதற்கு நாம அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.

ஒருவரையொருவர் மதித்தல், அன்பு காட்டல் மற்றும் உதவி செய்தல் என்பவற்றின் மூலமாக உன்னத சமுதாயம் ஒன்றினை நாம் உருவாக்கமுடியும். இதற்கான முயற்சிகளை எல்லா மதத்தினரும் ஒன்றுபட்டு செயற்படுத்தவேண்டும்.

எல்லா விதத்திலும் யாழ். மாவட்டத்தைச் சிறப்படையச் செய்வதற்கு இந்த இணக்கப்பாட்டு முயற்சிகள் சரியான முறையில் பயனளிக்கும் விதத்தில் அனைவரும் ஒன்றுபட்டுப் புரிந்துணர்வுடன் செயற்படவேண்டும் - என்றார். (ம-5)

# பொதுமக்கள் வழங்கும் பங்களிப்பையே உதவி நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன

## தொழில்நுட்ப அலுவலர் தெரிவிப்பு

வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளும்போது பொதுமக்களின் பங்களிப்பை முக்கியமாக எதிர்பார்க்கின்றன.

தமது பணிகளுக்கு மக்கள் வழங்கும் ஒத்துழைப்புக்காகவே சில உலர் உணவு வகைகளை அவை வழங்குகின்றனவே தவிர, செய்யும் வேலைகளுக்கான கூலி அல்ல.

உடுவில் கமநல சேவை நிலைய விவசாய சம்மேளனங்களின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தெழில்நுட்ப உத்தியோகத்தர் ஆனந்தராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சம்மேளனங்களின் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் உடுவில் கமநலசேவை நிலையக் கேட்போர்கூடத்தில் இந்தக்கூட்டம் நடைபெற்றது.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

உலக உணவுத் திட்டத்தின்கீழ் கடந்த வருடம் இப்பகுதியில் உள்ள பல விவசாயக்குளங்கள் மக்களின் பங்களிப்புடன் புனரமைப்புச் செய்யப்பட்டன. உலக உணவு ஸ்தாபனம் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்ட மக்களுக்கு தலா ரூ.105 பெறுமதியுடைய உலர் உணவுகளை வழங்கின. தமது சொந்த மண்ணின் புனரமைப்புக்கு தாமும் பங்களிப்பு செய்தோம் என்பதற்கு உற்சாகம் தரும் வகையிலேயே இவை வழங்கப்பட்டனவே தவிர அவை கூலிப்பணம் அல்ல.

இவ்வருடம் பல குளங்களைப் புனரமைக்க மேற்படி நிறுவனத்தினர் தயாராக உள்ளனர். விவசாய சம்மேளனங்கள் புனரமைப்பு பணிகளுக்கான ஆளணியினைத் திரட்டிக்கொடுத்து ஒத்துழைக்கவேண்டும்.

ஒரு நாளுக்கு கூலியாக ரூ.300 பெறுவதாகவும், ரூ.105 உலர் உணவுகளுக்காக தாம் கஷ்டப்பட முடியாது என்றும் கூலியாளகள் தெரிவிப்பதாகக் கூறி விவசாய சம்மேளனங்கள் ஒதுங்கிக்கொள்ளமுடியாது.

குளங்கள் புனரமைக்கப்பட வேண்டுமாயின் விவசாய சம்மேளனங்கள் ஊடாகவே ஆளணியினரைப் பெற்றுத்தரல் வேண்டும்.

கடந்த ஆண்டுகளில் இப்பணிகளுக்கென ஒரு குடும்பத்தில் இருந்து பலர் பங்குபற்ற முடிந்தது. ஆனால், இவ்வருடம் ஒருகுடும்பத்தில் இருந்து ஒருவரே பங்குபற்றமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது - என்றார்.(எ-152)

# ஊர்காவற்றுறை – காரைநகர் இடையில் படகுச்சேவை நேரத்தை மாற்றுக!

## பிரதேசசபைச் செயலரிடம் கோரிக்கை

ஊர்காவற்றுறை,பெப்.13

ஊர்காவற்றுறைக்கும், காரைநகரிற்கும் இடையில் நடத்தப்படும் படகுச்சேவை தொடர்பாக தற்போது நடைமுறையில் உள்ள நேர அட்டவணையினைப் பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் விதத்திலும்-

காரைநகர் பஸ் டிப்போவில் நடைபெற்றுவரும் பஸ் சேவையை அனுசரித்து நேரமாற்றம் செய்துதருமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அரச ஊழியர்கள், பொதுமக்கள், வியாபாரிகள் ஆகியோர் கையொப்பமிட்டு ஊர்காவற்றுறைப் பிரதேசசபையின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அதில் இதுவிடயமாக மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

காரைநகர், மூளாய், தொல்புரம், சுழிபுரம் ஆகிய இடங்களில் இருந்து தினமும் ஊர்காவற்றுறைக்கு பல்வேறு தேவைகளின் நிமித்தம் பொதுமக்கள் பயணம் செய்துவருகின்றனர்.

எனவே, மேற்படி நிலையினை கருத்திற்கொண்டு காரைநகரில் இருந்து காலை 9 மணிக்கு ஒரு சேவையினையும் பின்னர் பிற்பகல் 2மணிக்கும், 3.30 மணிக்கும் ஊர்காவற்றுறையில் இருந்து காரைநகரிற்குச் செல்லக்கூடியவாறும் படகுச் சேவையை ஒழுங்கு செய்து தருமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதன்மூலம், பயணிகளுக்கு ஏற்படும் பல்வேறு சிரமங்களைத் தவிர்க்கக் கூடியதாக இருப்பதுடன், உரிய நேரத்தில் பஸ்களில் செல்லக்கூடியதாக இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. (எ-16)

### தனித்தரப்பாகப் பேச்சில் பங்குபற்ற வேண்டுமென்றால்

# முஸ்லிம் தலைமைகள் அனைத்தும் ஒன்றுபட வேண்டிய காலம் இது

## மு.கா.தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

புத்தளம்,பெப்.13

முஸ்லிம் தலைமைகள் அனைத்தும் ஒற்றுமைப்படவேண்டிய முக்கியமான காலகட்டத்தில் உள்ளோம். இந்த ஒற்றுமைக்காக நாம் கடைசி நேரம்வரை காத்திருக்க முடியாது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மருதமுனை கடற்கரைத் திறந்த வெளி அரங்கில் அண்மையில் நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸின் எழுச்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜே.வி.பிக்கு மலிவாக விலைபோயுள்ள 'நுஆ' என்னும் ஐக்கிய தேசிய முன்னணி முஸ்லிம் தலைமைகளில் கூட்டணியில் இடம் பெறுவதற்கு மரச்சின்னத்தை விலையாகக் கேட்கின்றது. எமது உயிர் நாடியான மரச்சின்னத்தை அவர்களுக்கு விற்கும் நிலையில் நாமில்லை.

முஸ்லிம்களின் தேசிய அரசியலில் எமக்கென உள்ள சுய நிர்ணய உரிமையின் உண்மையான தாற்பரியத்தை நாங்கள் முன்னிறுத்தி உள்ளோம். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதோடு சமாதானத் தீர்வு முயற்சியின் முதற்பாகம் முடிவடைகின்றது. அதன் இரண்டாம் பாகம் வரவுள்ள தேர்தலின் பின்னர் ஆட்சியமைக்கும் அரசினால் முன்னெடுக்கப்படவுள்ளது.

முதல்பாகம் முடிவுறுகின்ற பொழுது, முஸ்லிம்களது அரசியலின் அவசியம், அவர்களது தேசியத்தின் தாக்கம் என்பன சர்வதேச சமூகத்தின் முன்னால் எட்டவைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவரோடு நாம் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் மூலமாகவும், முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பேச்சில் கலந்து கொள்ள வேண்டுமென்ற அவசியத்தைப் பிரதமர் ரணில் வெளிப்படையாக ஏற்றுக்கொண்டதன் மூலமாகவும் இந்த முக்கியமான படியை எட்டியுள்ளோம்.

அடுத்த பாகம் ஆரம்பிக்கும் பொழுது முஸ்லிம்களின் அரசியலை சரிவரக் கச்சிதமாக முன்னெடுப்பதற்கு நாம் புதிய வியூகங்களை வகுக்க வேண்டிய அவசியம் உருவாகியிருக்கின்றது.

இந்த வியூகத்தை வகுப்பதற்கு முன்னோடியாக, இன்று தேவைப்படுவது முஸ்லிம்கள் மத்தியில் பூரணமான ஒற்றுமை. இந்த ஒற்றுமைக்காக எல்லோரையும் ஒரே அணியில் திரள வேண்டுமென நாம் கேட்கின்றோம்.

மீண்டும் சமாதானப் பேச்சு ஆரம்பிக்கும் பொழுது தனித்தரப்பாக முஸ்லிம்கள் பங்குகொள்ள வேண்டுமென்பது, அனைத்து முஸ்லிம் தலைமைகளும் ஒன்றாக ஒரே குரலில் எடுத்துச் சொல்லியிருக்கும் விடயமாகும்.

இந்தத் தனித்தரப்பு விடயம் சாத்தியமாக வேண்டுமானால் முதலில் முஸ்லிம்கள் ஒரே தரப்பாக மாற வேண்டும் . ஒரே தரப்பு இல்லையென்றால் தனித்தரப்பு சாத்தியமாகாது எனும் நித்தியமான உண்மையினடிப்படையிலேயே ஒரே அணியில் திரளுமாறு முஸ்லிம் தலைமைகளை நாம் கேட்கின்றோம்.

எப்படி நிலத்தைப் பிரிக்காமல் அதிகாரத்தைப் பிரித்து வாழ்வது எனும் பெரிய கேள்வியுள்ளது. தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஏதோ ஒரு வகையில் தங்களது வாழிடங்களில் நிம்மதியாக வாழவேண்டும்.

அந்தந்தப் பிரதேசங்களின் பெரும்பான்மையினர், அப்பிரதேசங்களிலுள்ள சிறுபான்மையினரின் பாதுகாவலராக வருவதுதான், தமிழர்களதும், முஸ்லிம்களினதும் தாயகப் பூமியென்று விடுதலைப்புலிகள் சொன்ன வடக்கு - கிழக்கில் இரு சமூகங்களும் நிம்மதியாக வாழ்வதற்கு வழிவகுக்கும்.

இதை வகை செய்வதற்காகவே நாம் எமது மாற்றுத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

அதைத் தேர்தலின் போதும் மக்கள் மத்தியில் கொண்டுபோவோம்.

அதற்கான ஏகோபித்த அங்கீகாரம் முஸ்லிம்களால் முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கப்படும். அதற்குப் பின் முஸ்லிம் காங்கிரஸோடு பேசித்தானாகவேண்டும். முஸ்லிம் சமூகத்தின் அரசியல் அபிலாசைகளைச் சரிவரத் திருப்திப்படுத்தாமல் நிரந்தரமான சமாதானம் என்பது சாத்தியமாகாது எனும் உணர்வு இன்று எல்லா மட்டங்களிலும் வந்துள்ளது. அதேவேளை இதனை அடியொற்றி சர்வதேச சமூகத்தின் முஸ்லிம் காங்கிரஸ் பற்றிய அவதானமும் கூடியிருக்கினறது.

இந்த நிலைமையை ஏற்படுத்துவதற்காக மக்கள் ஆணையப்பெற மீண்டும் ஒரு முறை தேர்தலெனும் வேள்வித் தீயில் புடம் போடப்படும் ஓர் இயக்கமாக முஸ்லிம்காங்கிரஸை மாற்றுவதற்கும் இதனை செயவதன் மூலம் இந்நாட்டில் அடைய நினைக்கின்ற சமாதானத்தை அடைவதற்குமான வழியை நாம் காண்போம்.

-இவ்வாறு அவர் கூறினார்.

(ம-10)

---


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மட்டுவில் வடக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த

**கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை**

அவர்கள் 28.01.2004 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ்.மாவட்ட நீதிபதி திரு. ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதையிட்டு நாம் மிகமகிழ்ச்சி அடைகின்றோம். இவர் மட்டுவில் வடக்கு புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தாவும் , மட்டுவில் வடக்கு முன்னாள் மில் உரிமையாளரும் சிறந்த சமூகசேவையாளரும் பெரும்பாலான இந்து ஆலயங்களையும் தரிசித்து வந்தவரும் சிறந்த ஒரு தேச அபிமானியுமான இவரின் சேவைகள் தொடர்ந்து சிறப்புடன் நீடிக்கவேண்டுமென்று இறைவனை வேண்டி இவரை மனமார வாழ்க வாழ்கவென வாழத்துகின்றோம்.

(28427) (12-32-18) - நண்பர்கள்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மக்கள் வங்கி உதவி முகாமையாளர்

திரு.க.சின்னராசா (ஜே.பி.)

அவர்கள் யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக 16.01.2004 இல் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதையிட்டு அவரை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவரின் சமூகப்பணி நல்ல முறையில் தொடர குச்சம் ஞான வைரவப் பெருமானை வேண்டுகின்றோம்.

*'திருத்தணி' வட அல்வை.*

(28426)(18-12-32) திரு.திருமதி நவநீதன் குடும்பம்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ஆனைப்பந்தி மெ.மிஷன் வித்தியாலயம்

5ஆம் தர புலமைப் பரீட்சை- 2004

| | | | |
|---|---|---|---|
| ஆ.லோகானந்தன் | - 144 | யோ.ஜானுர்ஷ் | - 125 |
| க.அனுஜன் | - 143 | ந.கேதரன் | - 120 |
| ந.கோபிகா | - 135 | ப.வேனுஜன் | - 118 |
| வ.விதுஷன் | - 131 | | |

ஐந்தாந்தர புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மேற்படி மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பா.அபி.சங்கம்

(28421)(32-18-12-32) (யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்)



## கணனிக் கல்வி

கொழும்பில் இருந்து வருகை தந்திருக்கும் அனுபவம்வாய்ந்த விரிவுரையாளரினால் கணனிக் கற்கை நெறிகள் (Diploma) அடிப்படையில் இருந்து தனியாகவும், குழுவாகவும் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படுகின்றன.

தொடர்பு :-

பாலா மாஸ்ரர்

T.P. : 0777-241823

(284281)(39)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை

செல்வி த.ஜீவகலா அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி செல்லாச்சி தம்பிமுத்து**

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

*யா/புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகாவித்தியாலயம், புங்குடுதீவு -05.* (28423)(32-18-12-32)

அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள்



## தேவை

இன்ரநெற், ஈமெயில் கணனி ரைப்பிங் தெரிந்த ஓரளவு ஆங்கில அறிவுடையவர்கள் 14.02.2004 சனிக்கிழமை காலை 9மணிக்கும் 10மணிக்கும் இடையில் நேரில் வருகை தரவும்.

*சிற்றி தொலைத்தொடர்பு*

இல.11, இராமநாதன் வீதி, பரமேஸ்வராச் சந்தி.

(28420)


---

# கூட்டுறவுக் கிளை இயங்காததால் மக்கள் சிரமம்

சண்டிலிப்பாய்,பெப்.13

போர்க்கால அனர்த்தங்களின் போது பலத்த சேதமடைந்த பண்டத்தரிப்பு பல நோ.கூ.சங்கத்தின் சித்திரமேழி கட்டடம் இதுவரை புனரமைப்புச் செய்யப்படவில்லை. இந்தக் கிளை கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக போயிட்டியிலுள்ள தனியார் கட்டடமொன்றில் இயங்கிவருகின்றது.

இடம்பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவு நிவாரணத்தையும் ஏனைய பொருள்களையும் பெற்றுக்கொள்வதற்கு மேற்படி சித்திரைமேழி கிராமத்திலுள்ள மக்கள் நீண்டதூரத்திலுள்ள போயிட்டிக்குச் சென்று வருவதில் பலத்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா செல்லத்துரை

### (இளைப்பாறிய ஆசிரியர்)

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட கந்தையா செல்லத்துரை (இளைப்பாறிய ஆசிரியர் அச்சுவேலி மகா வித்தியாலயம்) நேற்று (12.02.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் (இளைப்பாறிய ஆசிரியை இடைக்காடு ம.வித்தியாலயம்) அன்புக் கணவரும் கருணாகரன், முருகதாசன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தங்கமலர், நிரஞ்சலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் உஷாந்தினி, குமுதினி, செமுசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2004) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சாமித்திடல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*இடைக்காடு, அச்சுவேலி.*

(28436)(37-18-12-32)

தகவல்: மு.ஸ்கந்தராசா (மைத்துனர்).

## நாகலிங்கம் இராசையா

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் இராசையா நேற்று (12.02.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், நடேசலிங்கம் (லண்டன்), பாலகுமார் (ஜேர்மனி), சர்வேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் குமுதினி (லண்டன்), சிவசக்தி (ஜேர்மனி), கணேசதாஸ் (கிராம அலுவலர் அளவெட்டி வடக்கு) ஆகியோரின் அன்பு மாமனாரும் ராம்சந்தர், ஆகர்சினி, தாட்சாயினி, கீர்த்தன், அனோஜன், மனோஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.02.2004) சனிக்கிழமை பிற்பகல் 1.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேல வளவு, ஏழாலை மேற்கு, சுன்னாகம்.*
*T.P.: 0602213492*

தகவல்: க.கணேசதாஸ் (மருமகன்) (கிராம அலுவலர் அளவெட்டி வடக்கு)

(28429) (38-18-12-32)

## கிருஷ்ணர் சின்னையா (நல்லையா மாஸ்ரர்)

### (ஓய்வுபெற்ற அதிபர், தெல்லிப்பழை)

தெல்லிப்பழை, புதுத்தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கிருஷ்ணர் சின்னையா 11.02.2004 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியர், யூனியன் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும் திருமதி ஜெசிந்தா நடராஜா (அமெரிக்கா), செல்வி ஜனிறா (ஆசிரியை, இரத்மலானை இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சரவணமுத்து, காலஞ்சென்ற தம்பு, காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் திருமதி தங்கம்மா-நாகமணி, இராசா, சின்னத்தம்பி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (14.02.2004) சனிக்கிழமை மாலை கொழும்பில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*39/4, ஓபன்சைட், தெஹிவளை.*
*தொலைபேசி: 0112727549* (28425) (38-18-12-32)

தகவல்: இ.ஜெனிறா (மகள்), இ.சிறீதரன் (பெறாமகன்).

## திருமதி அகஸ்ரின் திரேசம்மா

யாழ்ப்பாணம், 77,இராசாவின் தோட்டம் வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி அகஸ்ரின் திரேசம்மா 11.02.2004 புதன்கிழமை அன்று தமது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜேம்ஸ் அகஸ்ரின் (Elephant House Chief Clerk) அன்பு மனைவியும் காலஞ்சென்ற இக்னேஸியஸ் ஸ்ரான்லி, ஸ்ரீபன் மக்சுவல் (கனடா), பற்றிக் ஒலிவர் (கனடா), றஞ்சினி (யாழ்ப்பாணம்), புளோரன்ஸ் (லண்டன்), எவாஞ்சலின் (பிரான்ஸ்), ஜெரோம் ஸ்பென்சர் (கனடா), வெஸ்ஸி சார்ள்ஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சொல்வேந்தன் (இலங்கை வங்கி 2ஆம் கிளை, யாழ்ப்பாணம்), சித்திரவேல் (லண்டன்), ஸ்ரனிஸ்லெஸ் (பிரான்ஸ்), காலஞ்சென்ற செல்வராணி, அருள்வதனா (கனடா), பிறிசில்டா (கனடா), றியோ (கனடா), றோகினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (14.02.2004) சனிக்கிழமை பி.ப.4.00 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து நல்லடக்க ஆராதனைக்காக புனித திரேசம்பாள் தேவாலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

*77, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.*
*T.P.: 021-222-5678* (28419)(37-18-12-32)

தகவல்: சொல்வேந்தன் (மருமகன்).

## திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம்

அளவெட்டிமத்தி குடவத்தையைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி சுபபிரமணியம் அவர்கள் (11.02.2004) புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், வேலுப்பிள்ளை (கற்றன்), காலஞ்சென்ற சிவகுரு கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கணேசானந்தம் (உகண்டா), ரதிதேவி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், விமலா (உகண்டா), கோபால சூரியகுமார் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரகாஷ், யுவராணி, சபேஸ்குமார் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.02.2004) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குடவத்தை, அளவெட்டி மத்தி, அளவெட்டி.* (28419)(37-18-12-32)

தகவல்: சு.கணேசானந்தம் (மகன்).



# யு.எஸ்.எயிட்ஸ் நிறுவன அதிகாரி யாழ். வருகை



யாழ்ப்பாணம்,பெப்.13

அமெரிக்காவின் அரச சார்பற்ற அமைப்பான யு.எஸ்.எயிட்ஸ் நிறுவனத்தின் தென்னாசியப் பிரிவின் பிரதி அதிகாரி மார்க் எஸ்.வாட் தலைமையிலான உயர் மட்டக்குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தது.


அக்குழுவினர் யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக் கால் நிறுவனத்திற்கு நேற்றுக்காலை 10 மணிக்கு விஜயம் செய்து அங்குள்ள செயற்பாடுகளைப் பார்வையிட்டனர். நினைவுப் பரிசு ஒன்றையும் அவர்கள் வழங்கினர். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் மீள் புனரமைப்புக்காக யு.எஸ்.எயிட்ஸ 50 லட்சம் ரூபாவை ஏற்கனவே வழங்கியிருந்தது. இந்த நிதி மூலம் புனரமைக்கப்பட்ட செயற்பாடுகளை மார்க் எஸ்வாட் பார்வையிட்டார்; தேவைகளைக் கேட்டறிந்தார்.

அதன் பின்னர் யாழ். கல்வி வலயத்துக்கு அவர் சென்றார்.

யு.எஸ்.எயிட்ஸ் வழங்கிய 80 ஆயிரம் ரூபா நிதி உதவியுடன் இங்குள்ள ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழிப் பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. பயிற்சி பெற்ற ஆசிரியர்களை அவர் சந்தித்துக் கலந்துரையாடினார். பயிற்சி வகுப்புகளை நடத்தியவர்களுக்குச சான்றிதழ்களை வழங்கினார்.

அதன் பின்னர் காரைநகருக்குச் சென்ற அவர் மருதபுரம் கிராம மக்களைச் சந்தித்தார். யு.எஸ்.எயிட்ஸ் வழங்கிய நிதி மூலம். கொள்வனவு செய்யப்பட்ட ஒரு படகையும ஐந்து கட்டுமரங்களையும மீனவர் களுக்கு அவர் வழங்கினார். மீன்பிடி வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்ளையும் வழங்கினார்.

இவருடன் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரக தகவல் அதிகாரி கோடி ரெயிலரும் வந்திருந்தார். (ஐ-3)



யு.எஸ்.எயிட்ஸ் நிறுவனத்தின் தென்னாசியப்பிரிவின் பிரதி அதிகாரி மார்க் எஸ்.வாட் தலைமையில் வந்த குழுவினர் நேற்று ஜெய்ப்பூர் செயற்கை அவயவ நிறுவனத்துக்கும் யாழ்.கல்விவலயத்துக்கும் காரைநகர்ப் பகுதிக்கும் விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை (படங்கள்:தேவராஜன்)

## சுகாதாரத் தொண்டர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல சுகாதாரத் தொண்டர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சகல தொண்டர்களையும் இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு தொண்டர் சங்கத்தின் பொருளாளர் கேட்டுள்ளார். (எ-10)

NEW SCIENCE CENTRE
A/L 2005
"ORGANIC CHEMISTRY"
Sat, Sun =>12 - 1
ஆரம்பம்:-14.02.04 (28416)(36)
By:-அன்பழகன்

ராஜா யாழ்ப்பாணம்
பிரசாந்த் நடித்த ஜெய் (ரீல்ஸ்)
காட்சிநேரம் 10.30, 2.30,6.30,(பு.நே.)
18 முதல்
எங்கள் அண்ணா
(C-33050) (12)

லிபேட்டி அச்சுவேலி
விக்ரம், த்ரிஷா, விவேக், மனோரமா மற்றும் பலர் நடித்த
சாமி (ரீல்ஸ்)
காட்சிகள்: 3.00, 7.00. (பு.நே.)
(C/33049)

நிறைஞ்சனாஸ் சங்கானை
பாலா, ஷர்மி நடித்த
காதல் கிசு கிசு (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
X-Men 2
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 845 க்கு
(C-32981) (31)

லக்சுமி இணுவில்
சிம்பு, ஷர்மி நடித்த
காதல் அழிவதில்லை (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00,3.00, 7.00. (பு.நே.)
(28375)

நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜுன், சிம்ரன், நாசர், வடிவேல நடித்த



காட்சிகள் : 11.00, 3.00, 7.00. (பு.நே.) (C/33048)(12)

## கண்ணீர்க்காணிக்கை!



எமது வித்தியாலய முன்னாள் அதிபர்
அமரர் நாகமுத்து சங்கரப்பிள்ளை
அவர்களின் மரணச்செய்திகேட்டு பேரதிர்ச்சி அடைந்தோம். அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்,
நெடுந்தீவு. (28432)(36-11-16)
பாடசாலைச் சமூகம்.

## 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
18
04
1928



மறைவு
14
01
2004

### அமரர் செல்லப்பா துரைராசா

கடந்த 14.01.2004 புதன்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் அனுதாபந் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகலவழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன்,

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (13.02.2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறுகின்ற மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நெட்டிலிப்பாய் பிள்ளையார்
கோவிலடி முன்பாக
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

மனைவி, மக்கள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்.
(28431)(11-16-36)

## மரண அறிவித்தல்

### தம்பு கணேசபிள்ளை

(முன்னாள் அதிபர், யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி)
(தலைவர், மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்)

ஐயனார் கோவிலடி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு கணேசபிள்ளை அவர்கள் நேற்று (12.02.2004) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் தம்பு - சின்னம்மா தம்பதிகளின் புத்திரனும் கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட வைத்திலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் சிவபாக்கியத்தின் (முன்னாள் ஆசிரியர், யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும் தயாபரம் (ஆசிரியர், யாழ்நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்) அவர்களின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்றவர்களான திருமதி இராசம்மா, திருமதி இலக்குப்பிள்ளை, திருமதி இரத்தினம் (பூமணி) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நடராஜா, சிவஞானரட்ணம், சிவஞானம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

ஐயனார் கோவிலடி,
கொக்குவில் மேற்கு.
(28433)(38-11-16)

தகவல்:
தயாபரன்(மகன்)
சச்சிதானந்தசிவம் (மருமகன்-சச்சி)

அன்னை நாகா புட்சிற்றியின் மாதாந்த குலுக்கல் மூலம் தேர்வு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகளின் விவரம்

முதலாம் பரிசு : ரூபா 7000 பெறுமதியான பரிசு அதிர்ஷ்டசாலி: S.சுகந்தினி (சாவகச்சேரி)
இரண்டாம் பரிசு: ரூபா 5000 பெறுமதியான பரிசு அதிர்ஷ்டசாலி V.பொன்னம்பலம் (கோண்டாவில்)
மூன்றாம் பரிசு: ரூபா 4000 பெறுமதியான பரிசு அதிர்ஷ்டசாலி: K.சிவகுமார் (பிரசன்னா - கனடா)
4 ஆம் பரிசு : ரூபா 1000 பெறுமதியான பரிசு
அதிர்ஷ்டசாலிகள்: 1. சிறில் (கோப்பாய்), 2. S. தர்சனன் (நல்லூர்), 3. V.கிரிசானந்தன் (கரவெட்டி), 4. R.N.சிவபுத்திரன் (உரும்பிராய்), 5. K.A.D.M. உடேனி (பலாலி) 6. C.மதீஸ்வரன் (அத்தியடி) 7.P.S.சேவியர் (5ஆம் குறுக்குத்தெரு) 8. B.தனஞ்சயன் (உரும்பிராய்), 9.ஜெனிபர் ஆர்திகா மில்ரன் (நீராவியடி) 10. B.வாசன் (சுண்டுக்குழி
ஆறுதல் பரிசு: சுவர் மணிக்கூடு
அதிர்ஷ்டசாலிகள்: யழ்ப்பாணம: 1. P.சதீஸ்குமார், 2.S.நிரஞ்சன் (பிறவுண் வீதி), 3.N.அனோஜின நாவலர் வீதி), 4. S.சதாசிவம் (போதனாவைத்தியசாலை), 5.A.செல்ரன் (3 ஆம் குறுக்குத்தெரு), 6.சம்ரான் 7.P.K.ரணவீரா (பொலீஸ்நிலையம்), 8.M.விஜிதா (பிறவுண் வீதி), 9.T.யூட் ஹனியன் 10.எமிலியானுஸ் (குருநகர்), 11. A.சுந்தரலிங்கம் (R.A.O.S.Office), 12. C.C.மனுவல் (சுண்டுக்குழி), 13.N.மதனராஜன் (கொக்குவில்), 14.S.சிவகுமாரன் (மானிப்பாய்), 15.K.சிவகுருநாதன் (வட்டுக்கோட்டை), 16. V.V.குருபரன் (வட்டுக்கோட்டை), 17.N.சுகன்யா (கொக்குவில்), 18.S.மணி (பருத்தித்துறை), 19.J.பாமினி (மானிப்பாய்), 20.ஹரிஸ் (சுன்னாகம்), 21.M.சந்திரகுமாரன் (பாண்டியந்தாழ்வு), 22.தினக்குரல் 23.S.குழந்தைராஜா (கோண்டாவில்), 24. J.A.தரின் சேவியர் (வளன்புரம்), 25.J.சபாநாதன் (மல்லாகம்).

மாசிமாத குலுக்கல் ஆரம்பமாகிவிட்டது.
வாருங்கள்! வாங்குங்கள்! பரிசுகளை வெல்லுங்கள்!

அன்னை நாகா புட்சிற்றி
175, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(28435)(36-11-16)

### ஜயலத் ஜயவர்த்தன, நூர்தீன் மஷூர், மகேஸ்வரன்

# அமைச்சர்கள் பதவிநீக்க நடவடிக்கை வடக்கு, கிழக்கு மக்களுக்கு பலத்த அடி!

## அவசர மனிதாபிமான புனர்வாழ்வு உதவிகள் பாதிக்கப்படும்; ஜனாதிபதிக்கு பிரதமர் ரணில் சுட்டிக்காட்டி கடிதம்

புனர்வாழ்வு, மீள்குடியேற்ற, அகதிகள் விவகார அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன, வன்னி புனர்வாழ்வுக்கு உதவும் அமைச்சர் நூர்தன் மஷுர், இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோரை அமைச்சர்கள் பதவியிலிருந்து நீக்கிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நடவடிக்கை வடக்கு, கிழக்கு மக்களுக்குப் பலத்த அடியாகும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார். இதனால் [illegible]இன் அவசர மனிதாபி[illegible] பாதிக்கப்படும் எனவும் [illegible] அறிவித்தார்.

ஜனாதி[illegible]கா குமாரதுங்கவுக்கு [illegible] அனுப்பிய ஒரு கடிதத்திலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவற்றைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றமை, அமைச்சரவை அந்தஸ்தில்லாத அமைச்சர்களைப் பதவி நீக்கியமை ஆகிய ஜனாதிபதியின் நடவடிக்கைகள் சமாதான முயற்சியை நடைமுறைப்படுத்துவதை பெரும் கஷ்டத்துக்குள்ளாக்கியிருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அக்கடிதத்தில் குற்றஞ்சாட்டியிருக்கின்றார். வடக்கு - கிழக்கு மக்களுக்கு அவசர நிவாரண, மனிதாபிமான உதவிகளும் குறுகிய கால புனர்வாழ்வு உதவிகளும் வழங்கப்படுவதை இந்நடவடிக்கைகள் பாதிக்கும் எனவும் பிரதமர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

அமைச்சரவை அந்தஸ்தில்லாத அமைச்சர்கள் பதவி நீக்கப்பட்டதால அமைச்சர் மிலிந்த மொறகொடவும் ராஜினாமா செய்திருக்கின்றார் எனவும், அவர் சமாதானப் பேச்சுக்குழுவில் ஒரு உறுப்பினர் எனவும் வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நிதியை திரட்டுவதில் பொறுப்புடையவர் எனவும் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியிருக்கும் பிரதமர் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

என்னை முன்கூட்டியே கலந்தாலோசிக்காமல் அமைச்சரவை அந்தஸ்தில்லாத அமைச்சர்களையும் பிரதி அமைச்சர்களையும் பதவி நீக்கம் செய்திருக்கிறீர்கள். புனர்வாழ்வு, மீள்குடியேற்ற, அகதிகள் விவகார அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா, வன்னிப் புனர்வாழ்வுக்கு உதவும் அமைச்சர் நூர்தீன் மஷீர், இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோரும் பதவி நீக்கப்பட்டவர்களில் அடங்குவர்.

இவை வடக்கு, கிழக்கு மக்களுக்கு அவசர நிவாரண, புனர்வாழ்வு உதவிகளை வழங்குவதற்கான முக்கிய மூன்று அமைச்சுக்களுமாகும். இந்த அமைச்சுக்கள் ஒழிக்கப்பட்டதால் சமாதான முயற்சியின் அடிப்படை அம்சங்களை முன்னெடுத்துச் செல்வதிலும் புனர்வாழ்வு, உதவித்திட்டங்களைத் தொடருவதிலும் பெரும்சிரமங்கள் உருவாகியுள்ளன.போர் நிறுத்த உடன்படிக்கையின் 2ஆம் ஷரத்தின் கீழான கடப்பாடுகளை மட்டுமே அரசு இப்பொழுது நிறைவேற்ற முடிகிறது. இலங்கை மக்கள் அனைவருக்கும் வழமை நிலையை மீண்டும் ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்ட நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை உடன்பாட்டின் தரப்புகள் மேற்கொள்ளலாம் என்பதே அந்த ஷரத்து.

எனவே, அது குறித்து சமாதான அனுசரணையாளர் (நோர்வே அரசு), சர்வதேச சமூகம், உதவி வழங்கும் நாடுகள், விடுதலைப் புலிகள் ஆகியோருக்கு அறிவித்திருக்கின்றோம்.

உங்களின இந்த நடவடிக்கைகள அனைத்தும் போர் நிறுத்த உடன்படிக்கையின் இரண்டாம் ஷரத்தின் கீழான தனது பொறுப்புகளை நிறைவேற்றும் அரசின் முயற்சிகளை முடமாக்கியுள்ளன.

கடந்த நவம்பர் மாதம் மூன்று அமைச்சுகளை நீங்கள் கையேற்ற போது, ஷரத்து 1, ஷரத்து 3 ஆகியவை தொடர்பான அரசின் அதிகாரங்கள் ஏற்கனவே அகற்றப்பட்டுவிட்டன.

இந்த நடவடிக்கைகள் மூலம் சமாதான முயற்சியின் அமுலாக்கலை நீங்கள் பாரதூரமாகப் பாதிக்கின்றீர்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட வேண்டும்.

- இவ்வாறு பிரதமர் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். (ஐ-4)

## கைதடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சியில் சாவகச்சேரிப் பொலீஸார் ஈடுபட்டிருக்கின்றனர்.

மழை பெய்து கொண்டிருந்த சமயம வேகமாக வந்துகொண்டிருந்த இந்த மினிபஸ்ஸை சாரதி திடீரென 'பிரேக்' போட்டு வேகத்தைத் தணிக்க முயன்றார் என்றும் - ஆனால் கட்டுப்பாட்டை இழந்த பஸ் சடுதியாகத் திரும்பி வீதியோரம் நின்ற மின் கம்பத்துடன் மோதி பின்னர் வீதியில் இருந்து சுமார் பத்து மீற்றர் தூரம் வரை அருகிலிருந்த பற்றைக் காணிக்குள் உருண்டு சென்று தலைகீழாக நின்றது. மினிபஸ் மோதிய மின் கம்பம இரண்டு துண்டுகளாக உடைந்து சாய்ந்தது.

மின்பஸ் மோதித் தடம்புரண்ட வேகத்தினால் உள்ளே இருந்த பயணிகள், அவர்கள் கொண்டுசென்ற பொருள்களோடு சேர்த்து வெளியே தூக்கி வீசப்பட்டனர். மினிபஸ்ஸின் கூரைக் 'கரியா', ஆசனங்கள் மற்றும பாகங்களும் பிடுங்கி எறியப்பட்டன.

விபத்து நடந்த இடத்திற்கு அருகில படைமுகாம் உள்ளது. அங்கிருந்த படையினர் உடனடியாக காயமுற்றவர்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்ல உதவினர்.

தலை சிதறிய நிலையில் ஓர் உடல கிடந்தது. சிலர் மோசமான காயங்களால் முனகியபடி கிடந்தனர்.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பான பூர்வாங்க விசாரணைகளை, சம்பவ இடத்துக்குச் சென்ற சாவகச்சேரி பொலீஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டனர். சாவகச்சேரி நீதிவான் பா.சுப்பிரமணியம் சமபவம் நடந்த இடத்தைச் சென்று பார்வையிட்டார். யாழ். ஆஸ்பத்திரிக்கும் சென்று காயமடைந்தவர்களைப் பார்த்தார்.

இவ்விபத்துச் சம்பவத்துக்கு சாரதியின் கவனயீனமே காரணம் என ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரிய வந்திருப்பதாக சாவகச்சேரி பொலீஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஏ.எரிக் ரோகித தெரிவித்தார்.

விபத்துக்கு உள்ளான சமயம் மினிபஸ் மணிக்கு 75 கிலோமீற்றர் வேகத்தில் சென்று கொண்டிருந்தது என்று கூறப்படுகிறது.

மழை பெய்துகொண்டிருந்தமை மற்றும் வாகனத்தின் ரயர்கள் மோசமாகத் தேய்வடைந்திருந்தமை என்பன விபத்து ஏற்படக் காரணமாக இருக்கலாம் - என்றும் அவர் மேலும் கூறினார்.

விபத்துக்குள்ளான மினிபஸ் சாவகச்சேரி பொலீஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

மினிபஸ்ஸிலிருந்து மீட்கப்பட்ட பயணிகளின் பொருள்கள் சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. உரிமையாளர்கள் அவற்றை அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ள முடியுமென சாவகச்சேரி பொலீஸார் அறிவித்துள்ளனர்.

விபத்துக்குள்ளான பஸ்ஸில் பயணஞ் செய்தவர்கள் காலைவேளை அலுவலகங்கள, பாடசாலைகளுக்கும், வியாபார நடவடிக்கைகளுக்காக சந்தைகளுக்கும் சென்றவர்கள் என்று கூறப்படுகிறது.

ஏ-9 வீதியில் உயர் அழுத்த மின கம்பத்துடனேயே இந்த பஸ் மோதியுள்ளது. இதனால் தென்மராட்சி பிரதேசத்துக்கான மின் உடனடியாகத் துண்டிக்கப்பட்டது. மின்சார சபையினர் பின்னர் இணைப்பு வேலைகளை மேற்கொண்டனர்.(ஐ-4-5-7-9-31-49-117-ரி)

## சுவிஸ் எம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரையாடினர்.

கொழும்பில் இருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணம் வந்த குழுவினர் பின்னர் தரைப்பாதை வழியாகக் காலை 10 மணியளவில் கிளிநொச்சிக்கு வந்தனர். பிற்பகல் 3.30 மணிவரை தங்கி நின்ற அவர்கள் கிளிநொச்சியின் பல இடங்களுக்கும் சென்று நிலைமைகளை நேரில் அவதானித்தனர்.

சந்திப்புக்களை முடித்துக் கொண்டு மாலையில் சுவிஸ் குழுவினரின் ஒரு பகுதியினர் யாழ்ப்பாணம் புறப்பட்டனர். மற்றொரு குழுவினர் மட்டக்களப்புக்குப் புறப்பட்டனர். (ம)

## பாலா - தமிழ்ச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை சமாதான முயற்சிகளில் அனுசரணைப்பணி மேற்கொள்ளும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மும் ஞாயிறன்று சூரிச் வருகிறார்.

அவர் புலிகளின் மதியுரைஞரையும், அரசியல் பொறுப்பாளரையும் சந்தித்து விரிவான பேச்சுகளில் ஈடுபடுவார்.

அந்தப் பேச்சுகள் முடிந்த கையோடு தமிழ்ச்செல்வன் சூரிச்சிலிருந்து கொழும்பு புறப்படுவார். கொழும்பு வந்து சேர்ந்த கையோடே அவர் வன்னிக்கு விரைவார் எனக்கூறப்பட்டது.

சூரிச்சில் பாலா - தமிழ்ச்செல்வன சந்திப்பின் போது பின்வரும் விடயங்கள் குறித்து இருவரும் ஆலோசனை நடத்துவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

★ தென்னிலங்கை அதிகார இழுபறியால் சமாதான முயற்சிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு.

★ அதன் விளைவாக தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள்.

★ சமாதான முயற்சிக்கான வாய்ப்புகளை மேலும் சிதறடிக்கும் வகையில் தென்னிலங்கையில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும அவற்றை எதிர்கொள்ளும் முறைகளும்.

★ தமிழ் மக்களின் அவசர மனிதாபிமான புனர்வாழ்வுப் பணிகள் மற்றும் பாதிப்புற்றிருக்கும் அகதிகளுக்கான நிவாரணப் பணிகள் என்பன குறித்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள்.

★ நாட்டில் தேர்தல் நடக்கும் சூழ்நிலையில் தமிழரின் நலனைப் பேணும் வகையில் எடுக்கப்படவேண்டிய கூட்டு உத்திகள், தமிழ்க்கட்சிகளுடன இணைந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்.

★ புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளைச் சேர்ந்த வாக்காளர்கள் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் மற்றும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாக்களிப்புக்கு அனுமதிக்கலாமா என்ற விவகாரம்.

★ தென்னிலங்கையில் நிறைவேற்று அதிகாரம் தொடர்புடைய சக்திகள், ஏற்கனவே தேர்தல் தொடர்பாகத் தங்களின் ஏதேச்சாதிகார வலிமையை வெளிப்படுத்தி அதிகாரம் பண்ணிக்கொண்டு நிற்கின்றன. இந்தச் சம்பவத்தில் - கடந்த தடவை போன்று - இம்முறையும் இதே போக்கு வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் வெளிப்படுத்தப்பட்டால் அதைக் கட்டுப்படுத்துவதற்கு சர்வதேச மட்டத்திலோ அல்லது அனுசரணைப் பணியாளர்கள் மட்டத்திலோ அல்லது யுத்த நிறுத்த கண்காணிப்பாளர்கள் மட்டத்திலோ மேற்கொள்ளவேண்டிய இராஜதந்திர நடவடிக்கைகள்(இது விடயத்தில் குறிப்பாக யாழ். மாவட்ட நிலைமையும் விசேடமாக தீவுப் பகுதிச் சூழ்நிலையும் ஆராயப்படக் கூடும்).

இந்த விடயங்களை இருவரும் ஆராய்ந்த பின்னர், வன்னிக்குத் திரும்பும் தமிழ்ச்செல்வன் தங்கள் ஆலோசனை விடயங்களை தலைவர் பிரபாகரனுக்கு எடுத்துரைப்பார் என்றும் -

தலைவரின் வழிகாட்டலுக்கு அமைய புலிகள் தரப்பின் இறுதி முடிவுகள் எடுக்கப்படும் என்றும் - கூறப்பட்டது.

தலைவர் பிரபாகரனின் அறிவுறுத்தல்கள், வழிகாட்டல்களைப் பெற்றுக கொண்ட பின்னரே தமிழ்ச்செல்வன் வன்னியில் தமிழ்க் கூட்டமைப்பு பிரமுகர்களைச் சந்தித்துத் தேர்தல் தொடர்பாக வகுக்க வேண்டிய கூட்டு உத்திகள் , நடவடிக்கைகள் குறித்துப் பேசுவார் எனத் தெரிகின்றது. (ஐ)

## படுகாயமடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினி (வயது-25) புலோலிகிழக்கு, மீரா முருகதாஸன் (வயது-18), தாவடி வடக்கு (சாவகச்சேரி, இந்து மாணவி), நடராசா சுரேஸ் (வயது-18) உரும்பிராய கிழக்கு., செல்லையா இராஜரட்ணம் (வயது-53) கோப்பாய் வடக்கு., சிவநாதன் பகீரதன் (வயது-19) கோப்பாய் மத்தி., நாகலிங்கம் முருகையா (வயது -71) ஊரெழு தெற்கு., செல்லத்துரை செல்லம்மா (வயது-65) கோப்பாய் வடக்கு., செல்வராசா தேவநாயகி (வயது-45) மல்வம், உடுவில், ஆறுமுகம் துரைசிங்கம் (வயது-50) மல்வம உடுவில் (மின்சார சபை ஊழியர்)., தம்பிராசா மரியம்மா (வயது-60) மல்வம உடுவில்., நவநீதராசா லோகேஸ்வரி (வயது-28) சிவகுரு வீதி, ஏழாலை., கிருஷ்ணன் விமலதாஸ் (வயது-38) உடுவில்., செல்லத்துரை சசிகலா (வயது-35), கைதடி கிழக்கு (ஆசிரியை), வேவியன் சுவர்ணலதா (வயது-30) கரந்தன் நீர்வேலி., சிவராம் நந்தினி (வயது-43) உரும்பிராய் வடக்கு. சிவராம சிவமகிந்தன் (வயது-11) உரும்பிராய் வடக்கு (சாவகச்சேரி இந்து மாணவன்)., கணேசலிங்கம் இலாவதி (வயது-48) சாவகச்சேரி நகரசபை - இணுவில் ஆஸ்பத்திரி விடுதி., கே.சிவசுப்பிரமணியம் (வயது-52) சுன்னாகம்., கணபதிப்பிள்ளை முரளி (வயது-42) கட்டைப் பிராய்., சிவானந்தராசா (வயது-55)., கோபவானி. (வயது-25)., பிரதீபன் செந்தில்வர்ணன் (வயது-24) கோப்பாய் மத்தி.

(ஐ-4-5-7-9-31-49-117-ரி)

## ஆறு அம்ச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்து போட்டியிடுவது என்பதை அடுத்தடுத்த கூட்டங்களில் ஆராய்ந்து முடிவெடுப்பது எனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

எதிர்வரும் காலங்களில் முஸ்லிம சமூகத்தின் பேரம் பேசும் சக்தியை நிலைநிறுத்துவதற்கு நாடாளுமன்றத்தில் மு.கா. அதிக ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும் அதற்கேற்ப தேர்தல் வியூகம் வகுக்கப்பட வேண்டும் எனக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, எம்.பிக்களை அதிகம் பெறவேண்டும் என்பதற்காக கட்சியின் தனித்துவத்தை இழந்து தேசியக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று உயர்பீட உறுப்பினர்களில் பெரும்பாலானோர் வலியுறுத்தினர்.

குறிப்பாக ஐ.தே.கட்சியுடன் எந்த வகையிலும் கூட்டுச் சேரக்கூடாது எனவும் அக்கட்சியை ஆட்சியில் அமர்த்துவதற்கு மு.கா.ஆதரவு வழங்கக் கூடாது எனவும் அவர்கள் கூறினர்.

ஐ.தே.க. அரசாங்கத்தில் மு.கா. பங்காளிக் கட்சியாக இருந்தும் கிழக்கில் முஸ்லிம் பகுதிகளில் இடம்பெற்ற அனர்த்தங்களைத் தடுக்க முடியாது போனதையும், முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாமல் போனதையும் உயர்பீட உறுப்பினர்கள் கூட்டிக்காட்டினர்.

இவ்வாறான குறைகள் எதுவும் எதிர்காலத்தில் இடம்பெறாதிருக்கவும், இனப்பிரச்சினைத் தீர்வுப் பேச்சுக்களில் முஸ்லிம் தனித்தரப்பு, தனி இடைக்கால நிருவாகம், முஸ்லிம் சுயாட்சி உள்ளிட்ட ஆறு அம்சக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் கட்சியுடன் தேர்தல் கூட்டை ஏற்படுத்துவது என்றும் அக்கட்சியை ஆட்சிப்பீடமேற்றுவதற்கு மு.கா.ஆதரவளிப்பது எனவும் அரசியல் பீடம் தீர்மானித்துள்ளது. (ஐ-4)

## 27 இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

பருத்தித்துறைப் பொலீஸார் இவர்களை நேற்று பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஒப்படைத்தனர்.

இவர்கள் 27 பேரில் படகோட்டிகள் ஐவரையும் விளக்கமறியலில் வைக்குமாறும் ஏனைய மீனவர்களை காங்கேசன்துறைக் கடற்படையினர் ஊடாக விடுவிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

மீனவர்களின் ஐந்து படகுகள் பருத்தித்துறைக் கடற்கரையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. (ஐ-4-173)


## மரண அறிவித்தல்

**கா.இரகுநாதன் (இரகண்ணை)**

அம்பாள் வீதி, நாயன்மார் கட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட கா.இரகுநாதன் (இரகண்ணை) அவர்கள் நேற்று(12.02.2004) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.58, பழம் வீதி,*
*கந்தர் மடம்,யாழ்ப்பாணம்.*

தகவல்:-
வ.புஷ்பதேவன்
(மருமகன்).

(28437) (36-11-16)

வணிகக்கல்வி(A/L)
பரீட்சை வழிகாட்டி

**கருத்தரங்கு**

இன்று (13.02.2004)
9 மணிக்கு.

(28400)(16)

பொருளியற் கல்லூரி
யாழ்நகர்.

## கண்ணீர் அஞ்சலி

**கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய நிர்வாக சபைத் தலைவரும் கொக்குவில் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபருமான**

**தம்பு கணேசபிள்ளை**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு நாம் மிகவும் வேதனையடைகின்றோம். அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் வேண்டுகிறோம்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (28436)(36-11-16)

கொக்குவில் மஞ்சவனப்பதி
அன்பர்கள்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.02.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.